# தமிழரசு

பிப்ரவரி 2004











# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
தை – மாசி, பிப்ரவரி 2004
மலர் : 35 இதழ் : 8
விலை ரூ.10


**அட்டைப் படவிளக்கம்**

| | | |
|---|---|---|
| முதல் பக்க அட்டை | : | கன்னியாகுமரி – காஷ்மீரை இணைக்கும் தேசியநெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நான்கு வழி சாலைக்கான அடிக்கல் நாட்டு விழா |
| இரண்டாம் பக்க அட்டை | : | குடியரசு நாள் விழா |
| மூன்றாம் பக்க அட்டை | : | தமிழ்நாடு காவல்துறையின் முதல் மகளிர் சிறப்புக் காவல் அணி தொடக்க விழா |
| நான்காம் பக்க அட்டை | : | சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் இந்தியாவின் முதல் சமுதாய வானொலி ஒலிபரப்புத் தொடக்க விழா |

**இந்த இதழில்**

❖ மக்கள் நலனில் அக்கறை காட்டும் அரசு
– தமிழ்நாடு சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை ........ 2
❖ தேனி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ........ 16
❖ சென்னையில் கோலாகலமாக நடந்த குடியரசு நாள் விழா ........ 26
❖ தமிழ்நாடு காவல்துறையின் முதல் மகளிர் சிறப்புக் காவல் அணி
தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ........ 29
❖ திருவள்ளுவர் திருநாள் விழா ........ 35
❖ சாலைகளை இணைப்பது – இதயங்களை இணைப்பதாகும்
– மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை ........ 37
❖ மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்கு வழிகோலும் சமுதாய வானொலி
– மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை ........ 41
❖ நாங்கள் மக்கள் பக்கம்! மக்கள் எங்கள் பக்கம்! வெற்றி எங்கள் பக்கம்!
– மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆற்றிய பதிலுரை ........ 45
❖ மத்திய அரசின் வரி வருவாயில் மாநில அரசுகளுக்கு 50 சதவிகிதம் நிதி ஒதுக்க வேண்டும்
–12 ஆவது நிதிக்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ........ 67
❖ தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலை ........ 74
❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் விளையாட்டு வீரர் சந்திப்பு ........ 75
❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம் ........ 77
❖ புரட்சித்தலைவியை வாழ்த்துங்கள்! உங்களுடன் வரலாறு வாழ்த்தட்டும்
– கவியரசர் இளந்தேவன் கவிதை ........ 78
❖ மீனவர்களுக்கு உயிர்காப்புக் கவசங்கள் வழங்க
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆணை ........ 80

*ஆசிரியரும் வெளியிடுபவரும்* : **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



# மக்கள் நலனில் அக்கறை காட்டும் அரசு

மேதகு ஆளுநர்
திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன்ராவ் அவர்கள்

**மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரின் துவக்கத்தில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. இந்திய மக்கள் நாடாளுமன்றத்திற்குத் தங்களுடைய பிரதிநிதிகளை விரைவில் தேர்ந்தெடுக்க உள்ளனர். வளர்ச்சி மற்றும் வளமான வாழ்க்கைப் பாதையில் வழி நடத்தவல்ல ஓர் அரசைத் தேர்ந்தெடுப்பதில், இந்திய மக்கள் அனைவரையும் மக்களவைக்கான இத்தேர்தல்கள் ஒன்று சேர்க்கின்றன. வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் இந்திய மக்கள், குறிப்பாக, தமிழக மக்கள் அரசியல் மதிநுட்பத்தையும், விவேகத்தையும் எப்போதும் கையாண்டு வந்துள்ளனர். அவர்கள், விரைவில் இதற்கான மற்றொரு வாய்ப்பைப் பெறவிருக்கின்றனர். வளமானதும் உயிரோட்டமிக்கதுமான நமது ஜனநாயக மரபுகளைத் தொடர்ந்து பேணிக்காத்து, அமைதியான முறையில் தங்களுடைய வாக்குகளை அளிக்குமாறு தமிழ்நாட்டு மக்களை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

## இலக்கை நோக்கி விரைந்த செயல்பாடு

3. புதிய உறுதியுடனும், வரவிருக்கின்ற வளமையான வருங்காலம் பற்றிய நம்பிக்கையுடனும் தமிழ்நாடு



புத்தாண்டை வரவேற்றது. வளர்ச்சியின்மையையும் முடங்கிவிட்ட நிதிநிலையையும் கொண்ட கடந்தகால நிலைமைகளை மாநிலம் புறத்தே ஒதுக்கித் தள்ளிவிட்டது. 2003 ஆம் ஆண்டு வியக்கத்தகு திருப்புமுனையாக அமைந்துள்ளது. சீர்திருத்த முன்னுரிமைகளை வளர்ச்சிக் கோட்பாடுகளுடன் வெற்றிகரமாக ஒருங்கிணைத்து, அவற்றிற்கும் மேலாக வறியோர்களின் நலன்களை முன்னிறுத்துவதன் மூலம் மாநிலங்களிடையே முதலிடத்தைப் பெறவேண்டும் என்ற தனது நெடுநாளைய இலக்கை நோக்கி விரைந்து செயல்படும் மாநிலமாகத் தமிழ்நாடு உருவாகி உள்ளது. குறுகிய காலத்தில் இந்த வியக்கத்தக்க, ஈடு இணையற்ற சாதனையைப் படைத்த பெருமை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களையே சாரும்.

4. 2001 ஆம் ஆண்டு மே திங்களில் இந்த அரசு பதவியேற்றபோது நிலவிய மிகவும் இடர்ப்பாடான நிதி நிலைமையையும், அதனால், 2001–2002–இல் திட்ட ஒதுக்கீட்டை ரூபாய் 5,200 கோடிக்குக் குறைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது என்பதையும் இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். அன்று நிலவிய நிதி இடர்ப்பாட்டின் தன்மை மற்றும் கடுமையின் பின்னணியில் வருங்காலமே இருண்டதாகத் தோற்ற மளித்தது. முதலமைச்சர் அவர்களால் உறுதிப்பாட்டுடனும் மனோதிடத்துடனும் மேற்கொள்ளப்பட்ட ஒரு துணிகரமான பொருளாதாரச் சீரமைப்புத் திட்டம் 2003–2004 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை ரூபாய் 7,000 கோடிக்கு உயர்த்தவும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் பாராட்டுக்குரிய வகையில் ரூபாய் 40,000 கோடி ஒதுக்கீட்டுடன் வகுக்கப்படவும் உதவியுள்ளது. நிதி நெருக்கடி இருந்தபோதிலும், ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையமொன்று வகுக்கப்பட்டு, வலுப்படுத்தப் பட்டுள்ளது. பொது மக்களுக்கு பெருமளவில் சேவைப் பணிகளை நல்கும் தமிழ்நாடு மின்சார வாரியம், அரசு போக்குவரத்து நிறுவனங்கள் போன்றவை சீரான நிதி நிலைமைக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளன. ரூபாய் 4,000 கோடி அளவிற்குத் தொகை கொடுக்காமல் முந்தைய அரசு விட்டுச்சென்ற பெருஞ்சிக்கலான நிலைமை திறமையாக சமாளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் வியக்கத்தக்க இந்தத் திருப்பம் ஒரு பெரும் அற்புதம் என்றே கூறலாம்.

5. முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அரசின் பொருளாதாரச் சீரமைப்பு முன்னுரிமைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் நிதிநிலையைத் திருத்தி நிலைப்படுத்துவதற்கான நிதிச் சீர்திருத்தங்கள், முதலீட்டுச் சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், நல்ல நிருவாகம் வாயிலாக சேவைப் பணிகளை மேம்படுத்துதல், வறுமையை ஒட்டு மொத்தமாகக் குறைப்பதற்கான திட்டங்கள் ஆகியவை இதில் அடங்கும். இம்மாநில அரசு, நிதி நிலைமைச் சீரழிவு அபாய நிலையை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தி, அதே நேரத்தில் திட்டமிட்ட மேம்பாட்டையும் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில், இந்தச் சிக்கலான சீர்திருத்த நடைமுறை, ஏழை எளிய மக்களின் நலனை முதன்மையாக மனதில் கொண்டு மனித நேயத்தோடு மேற்கொள்ளப்பட்டது.

## உலக வங்கியின் பாராட்டு

6. தமிழ்நாட்டிற்கு நிதியுதவி செய்வதிலிருந்து கடந்த காலத்தில் ஒதுங்கிவிட்ட உலக வங்கி, தற்போது, மாநில அரசுக்கு, அதன் பொருளாதாரச் சீர்திருத்தச் செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உதவுவதில் மீண்டும் விருப்பம் காட்டிவருகிறது. இச்செயல் திட்டத்திற்கான உலக வங்கியின் நிதி உதவி கணிசமான கால அளவிற்கு தொடர்ந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிதியுதவி குறிப்பான திட்டங்களுக்கான நிதி உதவிக்கும் மேலாக கூடுதலாகக் கிடைக்கும். இந்த அரசு முதன்மைத் துறையில் மேற்கொண்டுள்ள புதிய முயற்சிகளையும், முதலீட்டுச் சூழ்நிலையை மேம்படுத்துவதற்காக, 2003 செப்டம்பரில் புதிய தொழில் கொள்கைகளில் அறிவித்துள்ள இரண்டாம் தலைமுறைச் சீர்திருத்தங்களையும் உலக வங்கி வெகுவாகப் பாராட்டியுள்ளது. முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான திட்டமாகிய ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்தை உருவாக்குவதில் தமிழ்நாடே முதன்மையாகத் திகழ்கின்றது என்பதை உலக வங்கி ஏற்றுக் கொண்டுள்ளது.

7. பெரும் நிதி இடர்ப்பாடுகளிடையே, பாதகமான பருவநிலை மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து நிலவி 2002–2003 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களையும் பாதிக்கும்வகையில் எப்போதுமில்லாத அளவிற்கு உச்சகட்டத்தை எட்டிய வறட்சிநிலையை அரசு எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று. இந்த அச்சமூட்டும் சவால் வேறு எந்த ஒரு அரசையும் மனம் தளரச் செய்திருக்கும். நிதிச் சீரமைப்பு நடைமுறையினை மேற்கொண்ட அதே வேளையில், ஒவ்வொரு நெருக்கடியையும் சந்திக்க ஆயத்தமுடன் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, ஏழை எளியவர்களைச் சென்றடையும் வகையில் நிவாரணமும், இடருதவியும் வழங்குவதை இவ்வரசு உறுதி செய்தது. இதற்கான பாராட்டுதல்கள் அனைத்தும் முதலமைச்சர் அவர்களையே சாரும்.

8. 2002 ஆம் ஆண்டில், கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய பங்கிற்கு தண்ணீர் வழங்க மறுத்ததைத் தொடர்ந்து, காவிரி வடிநில மாவட்ட நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் போதுமான வேலையின்றி பாதிக்கப்பட்டபோது, இந்த அரசு ரூபாய் 210 மதிப்புடைய உணவுப் பொருட்கள் அடங்கிய பைகளை 10 இலட்சம் குடும்பங்களுக்குப் பரிசாக வழங்கியது. இத்திட்டம், ரூபாய் 21 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. பசிப்பிணி போக்குவதற்காக, ஊரகப் பகுதிகளில் 2003 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் ஆகஸ்டு வரையில் ஒவ்வொரு மாதமும் தேவையின் அடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு இலவசமாக 30 கிலோ அரிசி வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டது. 9.71 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் ரூபாய் 115.94 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. பண்ணை வருவாய் பாதிக்கப்பட்டபோது, ரூபாய் 146 கோடி செலவில், கூட்டுறவுத் துறையிலிருந்து பெற்ற கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியினைத் தள்ளுபடி செய்வதற்கான பெருந்திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தியது. கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களுக்காக சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டித் தொகைகளைத் தள்ளுபடிசெய்து, 2003 ஆம் ஆண்டு மே மாதம் ரூபாய் 20 கோடி செலவில் அரசு அறிவித்த திட்டம், விவசாயிகளுக்கு அவர்களது கடினமான சூழ்நிலையில், மிகப் பெரிய நிவாரணத்தை அளித்தது. பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக, கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்ட போது, இந்த அரசு உடனடியாகச் செயல்பட்டு ரூபாய் 1.19 கோடி செலவில் 22,072 கைத்தறி நெசவாளர்களுக்கு மாதமொன்றுக்கு 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கியது. மோசமான நிதி நிலைமையை எதிர்கொண்ட இடர்ப்பாடான நேரங்களிலும், ஏழை எளியவர்களுக்கு நிவாரணமும், ஆதரவும் அளிப்பதில் இந்த அரசு உரிய நேரத்தில் தலையிட்டுச் செயல்பட்டுள்ளது என்பதற்கு இவை சான்றுகளாகும். இந்த அரசு கனிவுடன் ஆக்க நடவடிக்கைகளை எடுத்து மக்கள் நலனில் எப்போதும் அக்கறை காட்டுகிறது என்பதையும் இவைகள் எடுத்துக் காட்டுகின்றன.

## முதலமைச்சருக்கு நன்றி கூறும் ஏழை எளிய மக்கள்

9. மக்களுக்கு உண்மையான பயன்களை அளிப்பதை நோக்கமாகக் கொண்ட சமூகச் சீர்திருத்தப் பணிகளை நிறைவேற்றுவதில் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நிற்கின்றார்கள். லாட்டரிச் சீட்டுகளைத் தடைசெய்தது பெருவாரியாக வரவேற்கப்பட்டுள்ளது. வாழ்க்கையைச் சீரழிக்கும் கொடுமையிலிருந்து ஏழை–எளியவர்களை மீட்கும் முக்கியமான நடவடிக்கை இதுவெனத் தற்போது உணரப்படுகிறது. பெரும் பரிசைப் பெறும் கானல்நீர் ஆசை உறுதிமொழிகளினால் கவரப்பட்டு, இதுவரை மொத்த வருமானத்தையும் லாட்டரிச் சீட்டுகள் வாங்குவதற்குச் செலவிட்டு ஏழ்மையுற்ற இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள், தங்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொண்டுவந்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்குத் தற்போது நன்றி கூறியவண்ணம் இருக்கின்றனர். கந்து வட்டிக்காரர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு, பூதாகரமான நிலையினை அடைந்தது.

அளவிற்கதிகமான வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்தவும், சட்டத்தை மீறுபவர்கள் மீது கடுமையான தண்டனைகளை வழங்கிடவும் அரசு தக்க சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்தது. பாராட்டத்தக்க இச்சட்ட நடவடிக்கை, ஊரகக் குடும்பங்களுக்கு, அதிலும் குறிப்பாக வறட்சியின் காரணமாக வருமானம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இருந்த குடும்பங்களுக்குப் பெரும் நிவாரணம் அளித்தது. இந்நடவடிக்கைகள் அண்மையில் தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய பண்டிகைகளை மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாட உதவின. வறட்சியினாலும், மோசமான பருவநிலைகளினாலும் தொடர்ந்து மூன்று வருடங்களாகப் பாதிக்கப்பட்ட போதிலும், தமிழ்நாடு பெரும்பாலான ஏனைய மாநிலங்களைப் போலல்லாது, இந்த நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளித்து தேவையேற்பட்ட ஒவ்வொரு சமயத்திலும் நிவாரணமும், தேவையான உதவியும் நல்கியுள்ளது.

## முதலமைச்சரின் நேரடி தலையீட்டால் வெளிநாட்டில் வாடிய தமிழர்கள் மீட்பு

10. முதலமைச்சர் அவர்களின் தக்க நேரத்திலான நேரடித் தலையீட்டினால், வெளிநாட்டிலுள்ள இந்திய தூதரகங்கள், மலேசியா மற்றும் மாலத்தீவு சிறைகளில் அடைக்கப்பட்டு ஆதரவின்றி வாடிக்கொண்டிருந்த தமிழர்களுக்கு விழிப்புடன் சட்ட உதவி அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதேபோல முதலமைச்சர் அவர்களின் நேரடித் தலையீட்டினால் ஸ்ரீலங்கா கடற்படையினால் பிடிக்கப்பட்ட 380 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும், 47 இயந்திரப் படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

11. பன்னிரெண்டாவது நிதிக்குழு தனது தமிழ்நாட்டு வருகையை அண்மையில் நிறைவு செய்துள்ளது. பொது நிதி அமைப்புகளை முற்றிலுமாகச் சீரமைத்து, மாநிலங்களுக்கு உரித்தான பங்குகளை அளிப்பதன் அவசியம் பற்றி முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். மத்திய வரித் தொகுப்பிலிருந்து மாநிலங்களின் பங்கை, தற்போதுள்ள அளவான 29.5 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு உயர்த்தி, மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்குக் கூடுதலான நிதிப் பகிர்வு மாற்றங்கள் செய்யுமாறு இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது. பதினோராவது நிதிக்குழு தமிழ்நாட்டிற்கு இழைத்துள்ள அநீதியை, பன்னிரெண்டாவது நிதிக்குழு முற்றிலுமாக மாற்ற வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். சிறந்த முறையில் செயல்படும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கான நிதியுதவி, அவற்றின் திறமையான செயல் பாட்டினையும் நல்லாட்சியையும் பாராட்டும் வகையில் அமையவேண்டும். கடன் குறைப்பு மற்றும் சீரமைப்பு, உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் இயற்கைச்சீற்ற நிவாரணச் செலவுக்கான நிதியுதவி அளித்தல், போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்த விரிவான கருத்துருக்கள் இந்நிதி ஆணையத்திடம் கொடுக்கப்பட்டுள்ளன. அரசு நிருவாகத்தை நவீனமயமாக்குவதற்கும் தமிழ்நாட்டின் சிறப்புப் பிரச்சினைகள் குறித்து தீர்வு காண்பதற்கும், அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு நிதியுதவி அளிக்குமாறு நிதியாணையத்திடம் கோரப்பட்டுள்ளது. பன்னிரெண்டாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள் பெருமளவிற்கு இம்மாநில மக்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்வதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

## திறமையான நிருவாகம்

12. சட்டம், ஒழுங்கைச் சிறந்த முறையில் பராமரிப்பது வளர்ச்சிப் பணியின் அடித்தளம் என்ற வகையில் முதலமைச்சர் அவர்கள் இவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். தமிழ்நாட்டில் அவர்களது வலுவான தலைமையானது, துரோக சிந்தனை மற்றும் பிளவு நோக்குகொண்ட சக்திகளை ஒடுக்கிவைத்து, தமிழ்நாட்டில் முழுப் பாதுகாப்பு நிலவுவதை குடிமக்கள் உணரும்வண்ணம் உறுதிப்படுத்தியுள்ளது. வலுவான தலைமை, திறமையான காவல் பணிகள், சட்டம்–ஒழுங்கைச் சிறந்த முறையில் பராமரித்தல் போன்றவைகளுக்கும் அவற்றினால் அமையப்பெறும் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் அமையப் பெறுவதற்கும் உள்ள தொடர்பு, தமிழ்நாட்டைப் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

## இந்தியாவிலேயே மிகச் சிறந்தது தமிழக காவல் படை

**13. முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திய ஒட்டுமொத்தச் செயல்திட்டம், தமிழ்நாட்டை, இடர்ப்பாடற்ற அமைதி நிலவும் பூங்காவாக மாற்றியுள்ளது. புதிய கட்டிடங்கள், புதிய வாகனங்கள், நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள், வீட்டுவசதி மற்றும் காவலர் பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கிய காவல் துறை நிர்வாகக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது மற்றும் காவல் துறையை நவீனப்படுத்துவதன் மூலம் அதன் திறமையை மேம்படுத்துவது ஆகிய முதலமைச்சரின் செயல் திட்டங்கள், தமிழ்நாடு காவல் துறையை, இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநில காவல்**

படையாக மாற்ற உதவி செய்துள்ளன. காவல் துறைப் பணியாளர்கள் நியமனத்தில் ஏற்பட்டிருந்த பெரும் பின்னடைவைப் போக்க, ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு, நடப்பாண்டில் 8,431 நிலை–II ஆண் காவலர்களும், 2,306 நிலை–II பெண் காவலர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டு வருகின்றனர்.



## மகளிர் அதிரடிப்படை - தமிழக காவல்துறைக்கு ஒரு மைல்கல்

**14.பாலின நேர்மை நெறி பேணுதல் மற்றும் மகளிருக்கு எதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்துவது குறித்த முதலமைச்சர் அவர்களின் செயல்திட்டம் பின்பற்றப் பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நிதியாண்டு முடிவடைவதற்குள் மாநிலம் முழுமையிலும் 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும். அனைத்து மகளிர் அதிரடிப்படை மற்றும் அனைத்து மகளிர் காவல்படை எனத் தனியாக ஏற்படுத்தப்பட்டிருப்பது தமிழகக் காவல் துறையின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். 2004–2005 ஆம் ஆண்டில், ரூபாய் 30 கோடி மதிப்பீட்டுச் செலவில், மாநிலக் காவல் துறை இயக்குநர் அலுவலகத்திற்குப் புதிய வளாகம் கட்டப்படும்.**

## காவலர்கள் பயன்பெற புதிய வசதிகள்

15. காவலர்களுக்கு வசதிகளையும் பயன்களையும் அளிப்பதுடன் மட்டுமல்லாது, அவர்களுடைய குறைகளை நேரடியாகக் கேட்டறிந்து களைவதன்மூலம் காவல் படையின் ஒழுக்க நெறியை உச்சநிலையில் இருக்கச் செய்ய முதலமைச்சர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவித் தரங்களில் உள்ளவர்களுடன், ஐந்துமுறை விரிவான கூட்டங்களை நடத்தியுள்ளார்கள். இது காவல் துறையின் ஒழுக்க நெறியை உயர்த்தியுள்ளதுடன், அத்துறையை எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயார்படுத்தியுள்ளது. காவல் துறைப் பணியாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான அமைப்பு முற்றிலும் திருத்தியமைக்கப்பட்டு, மிகவும் பொருள் பொதிந்ததாக மாற்றப்பட்டுள்ளது. மகளிர் காவலர்களின் குழந்தைகளுக்காக 6 காவல்துறை ஆணையர் அலுவலகங்களில் குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் மொத்தம் ரூபாய் 241.61 கோடி செலவில் காவலர்களுக்கு 6,000 வீடுகள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

16. புழலில், ரூபாய் 77.09 கோடி மதிப்பீட்டுச் செலவில், 3,000 கைதிகளை இடமமர்த்தக் கூடிய நவீனத் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய புதிய சிறைவளாகம் ஒன்றினைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. 2003–2004–ல் சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக ரூபாய் 19.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல்லில் உள்ள கிளைச் சிறைச்சாலைகள் மாவட்டச் சிறைச்சாலைகளாக தரம் உயர்த்தப்படுகின்றன. சிறைச்சாலைகளுக்கும் நீதிமன்றங்களுக்குமிடையே தொலைதூரக்காட்சித் தொடர்பு (வீடியோ கான்பரன்சிங்) வசதி, ரூபாய் 8.61 கோடி செலவில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

**17.மதுரையில் ரூபாய் 55.59 கோடி செலவில், நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள உயர் நீதிமன்றக் கிளை 13.4.2004ஆம் நாளன்று திறக்கப்படும். 2001–2003ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமிழ்நாட்டில் மொத்தம் 49 விரைவு விசாரணை நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் மூலம் கிட்டத்தட்ட 65,000 வழக்குகளுக்குத் தீர்வுகண்டு சாதனை படைக்க முடிந்தது. தேனி மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

18. பருவமழை பொய்த்ததைத் தொடர்ந்து, 2002 ஆம் ஆண்டில், வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டதனால் பெரும் நிவாரணத் திட்டம் ஒன்றை அரசு நிறைவேற்றியது. இந்த நடவடிக்கை, பெருமளவில் பாராட்டினைப் பெறும்வகையில், வறுமை மற்றும் கையறு நிலையிலிருந்து மக்களைப் பாதுகாத்தது. 2003ஆம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை முந்தைய ஆண்டைக் காட்டிலும் சிறிதளவு கூடுதலாக இருந்தாலும் எதிர்பார்த்த அளவைவிடக் குறைவாகவே இருந்தது. மாநில இயற்கை சீற்ற நிவாரண நிதி ஏற்கெனவே முழுமையாகச் செலவிடப்பட்டுவிட்டது. தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1,584 கோடி நிதியுதவி கோரியும், வேலைக்கு உணவு திட்டத்திற்காக 10.8 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வழங்கக் கோரியும் மத்திய அரசிடம் வறட்சி குறித்த விரிவான அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு கணிசமான நிதி உதவி அளிக்குமென்று அரசு நம்புகிறது. இதற்கிடையில், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசு ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளது.

## காவிரி நீரில் உரிய பங்கைபெற நடவடிக்கை

19. இம்மாநிலத்திற்கு, காவிரி நீரில் நியாயமாக உரிமையுள்ள பங்கினை கர்நாடக அரசு விடுவிக்கத் தவறிவிட்ட காரணத்தால், தமிழ்நாட்டில் வறட்சி நிலை மேலும் கடுமையாகியுள்ளது. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படியான 193.59 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ அல்லது, காவிரி கண்காணிப்புக் குழுவின் பற்றாக்குறைக் காலப் பங்கீட்டு அளவின்படியான 89.771 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ ஒப்பிடுகையில், 2004 ஜனவரி வரை மேட்டூர் அணைக்கு வந்த தண்ணீரின் அளவு 60.45 டி.எம்.சி. அடி மட்டுமேயாகும். அரசியலமைப்பு நெறிப்படியும், சட்டப்படியும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கூட்டு அமைப்புகளான, உச்ச நீதிமன்றம், காவிரி நதிநீர் அதிகார மன்றம், காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றம் போன்ற அனைத்து அமைப்புகளின் உத்தரவுகளை கர்நாடக அரசு ஏற்றுச் செயல்பட திரும்பத் திரும்ப மறுப்பது ஆரோக்கியமான முன்னுதாரணம் அல்ல. காவிரி ஆற்றிலிருந்து தனது நியாயமான பங்கினைத் தமிழ்நாடு பெற இயலும் வகையில், தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும் தன்னுடைய முயற்சியில் இந்த அரசு ஒருபோதும் தளராது.

## கடுமையான குடிநீர்ப் பிரச்சினையை முற்றிலும் ஒழிக்க நிரந்தரத் திட்டம்

20. 2002 ஆம் ஆண்டிலும், 2003 ஆம் ஆண்டிலும் பருவமழை பொய்த்துப் போனதனால், சென்னை மாநகர் தொடர்ந்து கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையை சந்தித்து வருகிறது. இதனால் நகரின் நீர்த் தேக்கங்களில் உள்ள நீரின் அளவு கடந்த 55 ஆண்டு கால வரலாற்றில் கண்டிராத, மிகக் குறைந்த அளவாக உள்ளது. இதற்கான நீண்ட காலத் தீர்வுகளைக் காண்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ரூபாய் 730 கோடி செலவிலான சென்னை குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–I (புதிய வீராணம் திட்டம்) திட்டமிட்டவாறு 2004 ஆம் ஆண்டு மே மாதம் முடிக்கப்படும். சென்னையின் நீண்டகாலக் குடிநீர்ப் பற்றாக் குறைக்கான ஒரே நிரந்தரத் தீர்வாக கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டங்களைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 700 கோடி வழங்குமாறு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். மத்திய அரசு ஏற்கெனவே ரூபாய் 50 கோடிக்குத் தொடக்க நிதியுதவியை அறிவித்துள்ளது. மத்தியக் குழு மதிப்பீடு செய்த பிறகு, மேற்கொண்டும் நிதியுதவி கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். அனைத்துப் பகுதிகளுக்கும் தேவையான அளவு தண்ணீரை வழங்குவதற்கு ஏதுவாக, லாரிகளில் தண்ணீர் வழங்குவது அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆரணியாறு, கொசஸ்தலையாறு பகுதிகளில் நிலத்தடி நீரைப் பெற்று, குடிநீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்கொண்டுள்ள இந்தச் சவாலைச் சமாளிக்க, அரசு இயந்திரம் முழு வீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

21. ஆற்றுப் படுகைகளைப் பாதுகாப்பதற்கும், வகைதொகையில்லாமல் மணல் வெட்டி எடுப்பதன் காரணமாக ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட பெரும் முயற்சியாக, பொதுப்பணித் துறையின்மூலம் மட்டுமே மணலை முறையாக வெட்டி எடுக்கும் சீரான திட்டத்தினை அரசு வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. இந்நடவடிக்கைகள், சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படுவதையும் நமது நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்படுவதையும், உறுதி செய்வதுடன் அரசுக்கு கூடுதல் வருவாயையும் ஈட்டித்தரும்.

**22. மாநிலத்தின் வளர்ச்சிக்கான தொலை நோக்குப் பார்வையை உள்ளடக்கிய முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், தமிழ்நாட்டில் நேர்மை நெறியுடன் கூடியதும், முழுமையானதுமான வளர்ச்சியை உறுதிசெய்ய விழைகிறது. நடப்பு நிதி**

**ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூபாய் 7,000 கோடியை இந்த அரசு முழுமையாக எய்தும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 8,001 கோடி என்ற உயரளவிற்கு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் வேண்டி இந்த அரசு மத்தியத் திட்டக் குழுவை அணுகும். இது, 2003–2004 ஆம் ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் பெருமளவு உயர்த்தப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.**

**23.** தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மாற்றுப் பயிர் திட்டம், பண்ணைத் துறையைச் சீரமைப்பதற்கான வழிகாட்டிக் கோட்பாடாக அமைந்துள்ளது. புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்திலும், ரூபாய் 7.21 கோடி செலவில் இந்நோக்கத்தை மேம்படுத்தும் துல்லிய பண்ணையியல் திட்டம் துவக்கப்பட உள்ளது. மிகக் குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்திக் கூடுதலாக ஆதாயம் பெறும்வகையில் துல்லிய பண்ணையியல் நடைமுறையின் மூலம், மரவள்ளிக் கிழங்கு போன்ற பயிர்களைப் பயிரிடுவதை இவ்வரசு ஊக்குவிக்கும்.

**24.** இந்த அரசு மேற்கொண்ட ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், தரிசு நிலங்களைப் பொருளாதார ரீதியில் உற்பத்திக்கு உகந்த நிலங்களாகச் சீரமைப்பதில் ஒரு முன்னோடி முயற்சியென பாராட்டப்பட்டு வருகிறது. தொடர்ந்து வறட்சி நிலவியபோதிலும், இத்திட்டத்தின்கீழ் எய்திய சாதனைகள், மிகவும் பாராட்டத்தக்கவையாக உள்ளன. 2003 டிசம்பர் வரையில் சுமார் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு, சுமார் 1.19 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் உற்பத்திக்கு உகந்த நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

**25. ஊரக வேளாண் அடிப்படைத் தொழிலை மேம்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையிலான மற்றொரு தொலைநோக்குத் திட்டமான புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் விரைவான முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. 369 வளர்ச்சி வட்டாரங்களில் மொத்தம் 695 திட்டங்களைச் செயல்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கிட்டத் தட்ட 72 திட்டங்கள் ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.**

**26.** மாநிலத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட அரசின் துணிச்சலான முயற்சிகள், முக்கியத்துவம் வாய்ந்த இத்துறைக்குப் புதிய வலுவூட்டியுள்ளன. பால் உற்பத்தியாளர்களுக்குரிய நிலுவைத் தொகையான ரூபாய் 34.91 கோடி கொடுத்துத் தீர்க்கப்பட்டுள்ளது. இந்த அரசின் தலையீட்டின் காரணமாக, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளால் கரும்பு சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையான மொத்தம் ரூபாய் 123.74 கோடி, கொடுத்துத் தீர்க்கப்பட்டுள்ளது.

## மீனவர் நலனுக்கு முன்னுரிமை

**27.** தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களின் நலன் இந்த அரசின் மிக உயர்ந்த முன்னுரிமையைப் பெற்றுள்ளது. இந்த அரசு 2001 மே திங்களிலிருந்து மீனவர்களுக்காக ரூபாய் 35.87 கோடி செலவில் 11,389 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. ரூபாய் 1.73 கோடி ஒதுக்கீட்டில், சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் முதல்முறையாக சுமார் 30,192 மீனவப் பெண்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர். மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது, அவர்களின் பாதுகாப்பிற்காக ரூபாய் 1 கோடி செலவில் 10,000 உயிர் காப்புக் கவச உடைகளை அரசு வழங்கியுள்ளது.

## நிலத்தடி நீரைப் பெருக்கிய மழைநீர் சேகரிப்புத் திட்டம்

**28.** முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில், மழைநீர் சேகரிப்பிற்கான சீரிய வழிகாட்டி இயக்கத்தைத் தொடங்கியுள்ளார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான், ஒவ்வொரு மாநகர், நகர், கிராமம் ஆகியவற்றிலுள்ள கட்டிடங்கள் அனைத்திலும் மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பருவமழைக் காலத்திற்கு முன்னர் இத்திட்டத்தைக் கட்டாயம் செயல்படுத்த வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் உறுதிப்பாட்டினால் மட்டுமே இது சாத்தியமாயிற்று. ஊரகப் பகுதிகளில், மழை நீர் சேகரிப்பின்மூலம் நிலத்தடி நீரைப் பெருக்கும் திட்டம், தற்போது ஒரு பெருந் திட்டமாக உருவாகியுள்ளது. நீர்ப் பற்றாக்குறையுள்ள தமிழ்நாட்டில் அரிதான நீரைச் சேமித்துப் பாதுகாக்கும்வண்ணம் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**29.** 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில், ஊரக வளர்ச்சிக்கான மத்திய அரசு பொறுப்பேற்கும் பல்வேறு திட்டங்களின் கீழ், நிதியுதவிகளைப் பயன்படுத்திக் கொண்டதில் தமிழ்நாடு முதல் நிலையில் உள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நமது அரசின் திறமையான செயல்பாட்டைக் கருதியே, 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில், மாநிலத்தின் ஆண்டு ஒதுக்கீட்டுத் தொகைக்கும் அதிகமாக, மத்திய அரசு கூடுதலான நிதியை வழங்கியுள்ளது.

## ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள்

30. முழுமையான துப்புரவு இயக்கத்தின் கீழ், ரூபாய் 327.32 கோடி செலவில் 28 மாவட்டங்களில், அனைத்துப் பகுதிகளும் பயன்பெறும் வகையில் அரசு செயல்பட்டுவருகிறது. மாநிலம் முழுவதிலுமுள்ள கிராம ஊராட்சிகள் அனைத்திலும், மொத்தம் ரூபாய் 268.13 கோடி



செலவில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான 12,618 ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் இந்த ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும். மாநிலம் முழுவதிலும் கிராம நிருவாக அலுவலர்களுக்காக மொத்தம் ரூபாய் 77.89 கோடி செலவில் 12,506 அலுவலகங்கள் 2004 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும்.

## தமிழக சாலைகளின் தரம் உயர்த்த பெருந்திட்டம்

31. பேருந்துகள் ஓட இயலாத சாலைகளை உள்ளடக்கிய, எந்த ஒரு அமைப்பினாலும் பராமரிக்கப்படாத மொத்தம் 5,850 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை ரூபாய் 300 கோடி மதிப்பீட்டுச் செலவில் தரம் உயர்த்தவும், புதுப்பிக்கவும், சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளைச் செயல்படுத்துவதற்குமான பெருந்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றுடன் கூட, மாநிலத்தின் ஊரகப் பகுதிகளிலுள்ள 6492 கி.மீ. நீளமுள்ள ஏனைய மாவட்டச் சாலைகளைக் குறிப்பாகப் பேருந்து வழித்தடச் சாலைகளை மேம்படுத்த, அரசு ரூபாய் 336.05 கோடி அனுமதித்துள்ளது. இந்தப் பெருந்திட்டமானது மக்களுக்கு நிரந்தரமான பயனை அளிப்பதுடன் பெருமளவில் மக்களின் பாராட்டையும் பெறும். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களை 7 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்கும் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 2,500 பழைய பேருந்துகளுக்குப் பதிலாக இரு கட்டங்களில் புதிய பேருந்துகள் விடப்படும். 6,000 பேருந்துகளில் பெரும் பழுதுகளைச் சீர்செய்ய ரூபாய் 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குடிநீர் வசதி

32. அரசு 2003–2004 ஆம் ஆண்டில், ரூபாய் 572.16 கோடி ஒதுக்கீட்டில் ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம், 2004 மார்ச் மாத இறுதிக்குள் கிட்டத்தட்ட 6000 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி கிடைக்கும். நடப்பு நிதியாண்டில் கிட்டத்தட்ட 10,000 கைப்பம்புகள் ரூபாய் 60 கோடி செலவில் சிறு விசைப் பம்புகளாக மாற்றப்பட்டு வருகின்றன. 3912 ஊரகக் குடியிருப்புகள், 21 பேரூராட்சிகள், 5 நகராட்சிகளை உள்ளடக்கிய 5 பெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மொத்தம் ரூபாய் 463.54 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## முழுவேகத்துடன் செயல்படும் அனைவருக்கும் கல்வி திட்டம்

33. அனைவருக்கும் தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிகளில் 100 சதவீதம் மாணவர் சேர்க்கை என்ற இலக்கு, தொய்வின்றி முழு வேகத்துடன் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இந்த அரசு 1,112 தொடக்கப் பள்ளிகளையும், 1,075 நடுநிலைப் பள்ளிகளையும், 260 உயர்நிலை மற்றும் 300 மேல் நிலைப் பள்ளிகளையும் தொடங்கியுள்ளது. அரசு கடந்த இரண்டாண்டுகளில் 10,022 ஆசிரியர்களுக்குப் பணி நியமனம் வழங்கியுள்ளது. "அனைவருக்கும் கல்வி"

திட்டத்தின் கீழ் ரூபாய் 401.84 கோடி ஒதுக்கீட்டுடன் மாநிலத்திலுள்ள கல்வி கட்டமைப்பு வசதிகளின் தரத்தை மேம்படுத்துவதில் முன்னெப்போதும் இருந்திராத அளவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அரசின் இந்த முயற்சிகளினால் 2001–2002 ஆம் ஆண்டில் 16 சதவீதமாக இருந்த தொடக்கக் கல்வியைப் பாதியில் நிறுத்திவிடுகின்ற மாணவர் எண்ணிக்கை 2002–2003 ஆம் ஆண்டில் 12 சதவீதமாகக் குறைந்துள்ளது.

## தமிழக விளையாட்டு வீரர்கள் உலக சாதனைகள் படைக்க ஊக்குவிப்புத் திட்டங்கள்

34. தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பாராட்டத்தக்க சாதனைகள் புரிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளைக் கௌரவிப்பதற்கான ரொக்க ஊக்க உதவி வழங்கும் பெரும் திட்டம் ஒன்றை அரசு அறிமுகம் செய்துள்ளது. இதுவரை 123 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூபாய் 2.10 கோடி ரொக்க ஊக்கத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுத் திறனை அறிவதற்கான முயற்சியை விரிவுபடுத்துவதற்கும், பள்ளிகளில் விளையாட்டுப் பண்பை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், உடல் திறன் பல்முனை தேர்வுமுறை ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது. இதுவரை, 50–க்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், விளையாட்டு வீரர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு, இத்திட்டத்தின்கீழ் விளையாட்டுச் சாதனங்கள், தரமான சத்துணவு, உளவியல் மேம்பாடு, நிதியுதவி போன்ற வகைகளில் உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. வரும் நிதி ஆண்டில், கட்டமைப்பு வசதி மேம்பாடு, திறமையைக் கண்டறிதல், பயிற்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து விளையாட்டு மேம்பாட்டிற்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்படும். உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த அரசு, தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வியையும் விளையாட்டுகளையும் வளர்ப்பதற்கென்றே தனித்தொரு புதிய பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்தக் கருதியுள்ளது.

## மகத்தான மருத்துவ மேம்பாடு

35. இயன்ற செலவிலும் எளிதிலும் பெறத்தக்க சுகாதார வசதிகளை மக்களுக்கு வழங்கியதில் இந்த அரசு எய்திய சாதனைகள் குறிப்பிடத்தக்கவையாகும். 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ரூபாய் 39.75 கோடி மொத்தச் செலவில், 746 சுகாதாரத் துணை மையங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 46.50 கோடி மொத்தச் செலவில் 93 தொடக்கச் சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. இந்த அரசு 5 மருத்துவக் கல்லூரிகளில் 315 இடங்களை கூடுதலாக ஏற்படுத்தியுள்ளது. 5 மருத்துவக் கல்லூரிகளில், தேவையான கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான முதற்கட்ட கட்டுமானப் பணிகள் ரூபாய் 10.01 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. வேலூர், கன்னியாகுமரி, தேனி ஆகிய இடங்களில் 300 படுக்கை வசதி கொண்ட புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைக்கும் பணியில் விரைவான முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. கன்னியாகுமரியில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கு இந்திய மருத்துவ மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. சென்னை மாநகரம் இந்தியாவின் மருத்துவத் தலைமையிடமாகத் தற்போது உருவாகியுள்ளது. சென்னை, அரசு பொது மருத்துவமனையில் ரூபாய் 104.47 கோடி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டுவரும் புதிய வளாகம் விரைவில் திறக்கப்படும்.

## உற்பத்தித்துறையில் புதிய தொழிற்கொள்கை

36. மாநில அளவில் உற்பத்தித் துறையிலுள்ள நமது வலிமைகளை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்கான செயல்திட்டம் ஆகியவற்றை இலக்காகக் கொண்டுள்ள, புதிய தொழிற் கொள்கை 2003 ஆம் ஆண்டு செப்டம்பரில் அறிவிக்கப்பட்டு அனைவரது பாராட்டுதலையும் பெற்றுள்ளது. உற்பத்தித் துறையில் 2003 அக்டோபர் இறுதியில், மொத்தம் ரூபாய் 46,795 கோடி என்ற உயரளவிற்குப் புதிய முதலீடுகளை தமிழ்நாடு பெற்றுள்ளது என்று இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (CMIE) அறிவித்துள்ளது. கண்ணாடித் தயாரிப்பில் உலகளவில் பெரிய நிறுவனமான 'செயின்ட் கோபென்' நிறுவனம் தமிழ்நாட்டில் தனது உற்பத்தியை விரிவுபடுத்தவிருக்கிறது என்பதனை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வர். தூத்துக்குடி மாவட்டத்தில் டைட்டானியம் டை ஆக்சைடு (titanium dioxide) திட்டத்தைத் தொடங்க மாநில அரசுக்கும் 'டாடா ஸ்டீல்' நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதைத் தொடர்ந்து அந்நிறுவனம் அப்பகுதியில் தொடக்க ஆய்வுப் பணியை துவக்கியுள்ளது. பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சாதகமான திருப்பம் மற்றும் புதிய தொழிற் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள

இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களைச் செயல் படுத்தியதில் உள்ள முன்னேற்றம் மற்றும் விருப்பத் தேர்வு அடிப்படையில் தொழில் தொடங்குவதற்குத் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக விளங்குவது போன்ற காரணங்களால் பெருமளவில் புதிய முதலீடுகள் வர வாய்ப்புகள் உள்ளன. இத்துறையில் பன்னாட்டு வல்லுநர்களின் கருத்தைப்பெற்று கட்டமைப்பு வசதி மேம்பாட்டில் பொதுத்துறை மற்றும் தனியார் பங்கேற்பு கொள்கை ஒன்று தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது.

## தகவல் தொழில்நுட்பம்

37. தகவல் தொழில்நுட்பம், தமிழ்நாட்டின் சேவைப் பணித் துறையின் உந்துவிசையாக உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தகவல்–தொழில்நுட்பத்துறை, 1.4 பில்லியன் டாலர் (ரூபாய் 7000 கோடி) அளவிற்கு ஏற்றுமதியைத் தாண்டிய நிலையிலும், 1,000–க்கு மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி நிறுவனங்கள் அமைந்த நிலையிலும், புதிய தொழில்களுக்கான வளமான வாய்ப்புகளைக் கொண்ட துறையாக உருவெடுத்துள்ளது. தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகள் (ITES), தங்களது தொழில்முறைத் தேவைகளை வெளிக் கொள்முதல் வாயிலாகப் பெறும் பணிகள் (BPO) ஆகியவற்றுக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கும் தொலைநோக்கிலான தகவல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை இந்த அரசு வகுத்துள்ளது. இரண்டாவது தகவல் தொழில்நுட்பப் பூங்காவை, 1.5 மில்லியன் சதுர அடி பரப்பிற்கு இடவசதியுடனும், உலகத் தரம் வாய்ந்த கட்டுமான தரத்திலும் நிறுவுவதற்காக டிட்கோ நிறுவனம், சிங்கப்பூரைச் சேர்ந்த திருவாளர்கள் ஆஸ்சென்டாஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளது. அறிவுத் திறன் சார்ந்த தொழில் நகரியம் (Knowledge Industry Township) பற்றிய கருத்துரு இறுதியாக்கப்பட்டுள்ளது. இது சோளிங்க நல்லூரில் உருவாக்கப்படும். மத்திய கைலாசத்திலிருந்து மாமல்லபுரம் வரையில் 6 வழி தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதைக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். கலிபோர்னியாவில் உள்ள தகவல் தொழில்நுட்ப வளைகுடா பகுதியையும் விஞ்சும் வகையில், தகவல்–தொழில்நுட்பத்திற்கான வளைகுடா பகுதி (I.T. Bay Area) ஒன்றை சென்னையில் உருவாக்குவதில் இந்த முயற்சிகள் பெருமளவில் உதவும். மின்னணு தயார்நிலை–2003 அறிக்கையின்படி, தமிழ்நாடு, மின்னணு தயார் நிலையிலுள்ள முதன்மை மாநிலம் என்ற நிலையை அடைந்துள்ளது. சென்னையில் 7–வது தேசிய கணினி வழி நிருவாக மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. உலக வங்கி அதன் நிருவாக நடைமுறைகளைக் கையாளும் நிரந்தர அலுவலகத்தை இந்தியாவில் சென்னையில் நிறுவத் தீர்மானித்துள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சென்னை, தகவல் தொழில்நுட்பத் தொழிலில் அனைவரையும் ஈர்க்கக்கூடிய மாநகராக மாறியுள்ளது என்பதையே இது காட்டுகிறது.

38. இந்த அரசு, உலகத் தரம்வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சாலைகள் குறித்த பணிகளுக்கு குறிப்பான முக்கியத்துவம் அளிக்கப்படும். ரூபாய் 2,116 கோடி திட்ட ஒதுக்கீட்டளவில் தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டப்பணி உலக வங்கியின் நிதியுதவியுடன் துவங்கியுள்ளது. மொத்தம் ரூபாய் 221.32 கோடி செலவில் 2,149 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ் சாலைகள், கரும்பு ஆலைச் சாலைகள் ஆகியவற்றைப் புதுப்பித்து நிலையுயர்த்துவதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

39. 5 இலட்சம் டன் கச்சா எண்ணெய் கையாளும் வகையில் நாகப்பட்டினம் துறைமுகம், ரூபாய் 100 கோடி திட்டச் செலவில் சமீபத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. கடலூர் துறைமுகத்தை ரூபாய் 250 கோடி மதிப்பீட்டுச் செலவில் விரிவாக்கி நிலையுயர்த்தும் திட்டத்தை தமிழ்நாடு கடல்சார் வாரியம் தயாரித்து வருகிறது. சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அனுமதியை மத்திய அரசு விரைவில் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மின்உற்பத்தி

40. இந்த அரசு 2001 மே திங்களில் பொறுப்பேற்றபோது, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ரூபாய் 5,000 கோடிக்கு மிகப் பெரிய அளவில் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டது என்பதையும், மிக மோசமான நிதிச் சரிவைச் சந்திக்கும் நிலையில் இருந்தது என்பதையும் இந்த அவை உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இத்தகைய வேகமான நிதிச் சரிவைத் தடுத்து நிறுத்தி, தற்போது பயனீட்டாளர்களுக்குத் தரமான மற்றும் தடையில்லா மின் வழங்கலை வழங்கும் நோக்குடன் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், மின் பகிர்வுத் திறனை உயர்த்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் கூடுதலாக 902 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய திட்டங்களான, வடசென்னையில் 1000 மெகாவாட் மின் திட்டமும், தூத்துக்குடியில் 1000 மெகாவாட் மின் திட்டமும், கூடங்குளத்தில் 2000 மெகாவாட் மின் திட்டமும் உறுதி செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பெரிய அளவில் மின் தடை என்பது கடந்த கால நிகழ்வாகிவிட்டது.

தமிழ்நாடு மின்வாரியம் அதன் பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட மொத்த ஒதுக்கீடான ரூபாய் 8,000 கோடியில் ரூபாய் 5,914 கோடியை மின் விநியோகக் கட்டமைப்பினை விரிவுபடுத்துவதற்காக ஒதுக்கியுள்ளது. 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்திற்கான செயல்திட்டம் ஒன்று வகுக்கப்படும். நடப்பாண்டில் மின்வசதி இல்லாத 154 குக் கிராமங்களில் சூரிய ஒளிச் சாதனங்களின் மூலம் மின்வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.



41. அரசின் பயன்திறன் அடிப்படையிலான சுற்றுலா மேம்பாட்டுக் கொள்கையினால், விடுமுறையினைக் கழிப்பதற்கு, தென்னிந்தியாவில் அனைவரையும் கவரும் எழில்மிகு தேர்விடமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது. புதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்காக சுற்றுலாத் துறையின் திட்ட ஒதுக்கீடு பெருமளவு அதிகரிக்கப் பட்டுள்ளது. சுற்றுலா மேம்பாட்டில் தனியார் துறையின் பங்கேற்பு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் முதன் முறையாக 64 ஆம் "ஸ்கால்" (SKAL) உலக மாநாடு, 2003 அக்டோபரில் சென்னையில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்திற்கான இடமாக சென்னை தெரிவு செய்யப்பட்டதால், நமது மாநிலம் பன்னாட்டு–சுற்றுலா வரைபடத்தில் இடம்பெற்றுவிட்டது.

42. சிறிய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காக மத்திய அரசு விலை நிலைப்பாட்டு நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. சிறிய தேயிலை உற்பத்தியாளர்கள் தொடக்கத்தில் சிறிய தொகை ஒன்றை அளிப்பதன்மூலம் இத்திட்டத்தில் சேர்ந்து, விலைச்சரிவு ஏற்படும்போது விலை உத்திரவாதம் பெறுவதற்குத் தகுதியுடையவராவர். சிறுதேயிலை உற்பத்தியாளர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், இந்நிதிக்கு 23,000 சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் சார்பில், தொடக்கப் பங்குத் தொகையாக, ரூபாய் 1.15 கோடியை வழங்குவதென அரசு முடிவு செய்துள்ளது. 'டீசெர்வ்' என்ற புதிய மின்னணு தேயிலை ஏல மையத்தைத் தொடங்கியது, பொது விநியோக முறையின்மூலம் ஊட்டி தேயிலையை விற்பனை செய்தது ஆகியவை, தேயிலை உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க இந்த அரசு மேற்கொண்ட சில முக்கியமான நடவடிக்கைகளாகும்.

43. தமிழ்நாட்டில், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது சில்லறை விற்பனையைத் தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகத்தின் (டாஸ்மாக்) மூலம் மேற்கொள் வதென்ற அரசின் முடிவு, மாநிலத்தில் இதுநாள் வரையில் மதுவிற்பனையில் முழு ஆதிக்கம் செலுத்தி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய மதுவிற்பனை யாளர்களின் வணிகக் கூட்டணியை முறியடித்துள்ளது. இந்த முடிவு, டாஸ்மாக் நடத்தும் சில்லறை விற்பனைக் கடைகளில், தமிழ்நாடு முழுவதும் வேலைவாய்ப்பற்ற மொத்தம் 36,200 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உதவியுள்ளது.

## சென்னைப் பெருநகர் மேம்பாடு

44. ரூபாய் 18,000 கோடி முதலீட்டிலான "சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்" என்கிற மாபெரும் கட்டமைப்பு முதலீட்டுத் திட்டம் ஒன்று பத்தாண்டு காலத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், மின்சாரம், குடிநீர் வழங்கல், வடிகால், வாகனப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, வீட்டுவசதி போன்ற பல்வேறு திட்டப் பணிகளை உள்ளடக்கிய கட்டமைப்புப் பணிகளுக்கான முதலீடுகள் மொத்தம் ரூபாய் 1780.75 கோடி அளவிற்குத் திரட்டப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவாக நடந்தேறி வருகின்றன. உலகப் புகழ்வாய்ந்த மெரினா கடற்கரையின் இயற்கையழகு மீட்கப்பட்டு, அனைத்துவகையான பொதுக் கூட்டங்களின் பேரொலிகளிலிருந்தும், சமூகவிரோத சக்திகளின் தொல்லைகள் இன்றியும் தற்போது பொதுமக்கள் அலை கடலையும், கடல் மணலின் சுகத்தையும் அனுபவித்து மகிழலாம். விரைவு ரயில்

போக்குவரத்துத் திட்டம்–இரண்டாவது கட்டத்தின் கீழ் ரயில் போக்குவரத்து அண்மையில் திருவான்மியூர் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளதை அறிந்து இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு மொத்த ஒதுக்கீடான ரூபாய் 690 கோடியில் சுமார் 67 சதவீதத்தை மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ரூபாய் 1,700 கோடி செலவில் சென்னையிலுள்ள நீர்வழிகளை மேம்படுத்தும் திட்டம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு திட்டச் செயல் பாடுகளின்மூலம், தென்னகத்தின் தலையாய நகரம் எனுமிடத்தை, சென்னை மாநகரம் பெறும் என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

45. இம்மாநிலத்திலுள்ள நகர்ப் பகுதி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ரூபாய் 575.30 கோடி செலவில், 3 மாநகராட்சிகளிலும் (திருச்சி, மதுரை, திருநெல்வேலி), 4 நகராட்சிகளிலும் (மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், கரூர்), விரிவான கழிவு நீரகற்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எஞ்சிய அனைத்து மாவட்டத் தலைமையிடங்களும் கழிவுநீர் அகற்று வசதிகளைப் பெறும்வண்ணம் ரூபாய் 844 கோடி மொத்தச் செலவிலான பெருந்திட்டம் ஒன்றை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

## ஊட்டச்சத்துக் கொள்கை

46. முதலமைச்சரின் "ஊட்டச்சத்துக் குறைவில்லாத் தமிழ்நாடு" எனும் கொள்கை அனைவருக்கும் தரமான ஊட்டச்சத்து பாதுகாப்பு அளிப்பதில் அரசின் நிலையான உறுதிப்பாட்டைக் காட்டுகிறது. வைட்டமின் 'ஏ' குறைபாட்டைப் போக்க, மதிய சத்துணவு மையங்களில் அளிக்கப்பட்டுவரும் உணவில், முருங்கைக் கீரை மற்றும் கறிவேப்பிலைப் பொடி ஆகியவற்றை அறிமுகப்படுத்தும் திட்டமொன்றும் செயல்படுத்தப்பட்டுள்ளது. சென்றடைய முடியாத முடுக்குக ளிலுள்ள குக்கிராமங் களையும் சென்றடையும் வகையில், 4,297 கூடுதல் அங்கன் வாடி மையங்களை ஏற்படுத்தும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

## பெண்ணுரிமை

47. முதலமைச்சர் அவர்களின் வலுவான தலைமையின் கீழ் தமிழ்நாட்டில் பெண்ணுரிமை செயல்பாட்டு நடவடிக்கைகள் புதிய இலக்குகளை எய்தி வருகின்றன. ஒரு குழந்தை, தன் தாயின் பெயரிலுள்ள முதல் எழுத்தையோ அல்லது தந்தையின் பெயரிலுள்ள முதல் எழுத்தையோ அல்லது பெற்றோர் இருவரின் பெயரிலுள்ள முதல் எழுத்துக்களையோ தனது பெயரின் முதல் எழுத்தாக வைத்துக் கொள்ளலாம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அரசின் புரட்சிகரமான கொள்கை பெண்ணுரிமையைப் பெருமளவு உயர்த்தியுள்ளது. 1.52 இலட்சம் சுய உதவிக் குழுக்களில், 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிரை உறுப்பினராகக் கொண்டுள்ள சுய உதவிக்குழு இயக்கத்தில் நம் மாநிலம் முன்னோடியாக உள்ளது. இந்தக் குழுக்களின் கணக்கிடப்பட்ட மொத்த சேமிப்பு ரூபாய் 393.64 கோடியாகும். தற்போது அளிக்கப்பட்டுள்ள கடன் வசதி ரூபாய் 564 கோடியை விஞ்சியுள்ளது. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இதுவரை 2.5 இலட்சம் மகளிருக்கு வெவ்வேறு வாழ்க்கைத் தொழில்களில், ரூபாய் 10 கோடி செலவில், பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும். புரட்சிகரமான தொட்டில் குழந்தைத் திட்டம் 1,221 பெண் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற உதவியுள்ளது. அவர்களில் 1,200 பெண் குழந்தைகள், வளர்ப்பு இல்லங்களைச் சென்றடைந்து, அங்கே அன்புடனும் ஆதரவுடனும் வளர்க்கப்பட்டு வருகிறார்கள். இந்த அரசு தொடங்கியுள்ள திருத்தியமைக்கப்பட்ட பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில், 2001–2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ரூபாய் 12.48 கோடி மொத்தச் செலவில் 8,188 பேர் பயனடைந்துள்ளனர்.

## ஆதிதிராவிடர் நலன்

48. இந்த அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்கள், பொருளாதார மற்றும் கல்வி மேம்பாடு அடையச் செய்வதில் உறுதிபூண்டுள்ளது. ரூபாய் 99.54 கோடி மொத்தச் செலவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்காக படிப்படியாக 316 மாணவரில்லங்களைக் கட்டும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டிலும் தொடரும். மேனிலைப் பள்ளியில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கும் திட்டம் மாபெரும் வெற்றியினைப் பெற்றுள்ளது. தகுதியுள்ள பயனீட்டாளர்களுக்கு மொத்தம் 1.44 இலட்சம் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. மாணவரில்லங்களில் உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபாய் 225–லிருந்து ரூபாய் 300–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நிலமற்ற ஆதிதிராவிடர், பழங்குடியின மகளிருக்குச் சாகுபடிக்கேற்ற நிலங்களை வழங்கும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.




49. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் உரிமை மேம்பாடு மற்றும் நலனுக்காக தொடங்கப்பட்ட திட்டங்கள் மேலும் வலுவூட்டப்படும். இச்சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக மொத்தம் ரூபாய் 68.49 கோடி செலவில் 214 மாணவரில்லங்களைக் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாணவரில்லங்களில் இச்சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபாய் 225–லிருந்து ரூபாய் 300–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இச்சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளை ஊக்குவிப் பதற்கான சிறப்பு ஊக்க உதவித் திட்டமானது நடப்பாண்டில் ரூபாய் 12 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

50. நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த இந்த அரசு எப்போதுமே முக்கியத்துவம் அளித்துவந்துள்ளது. முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு இலவச சேலை, வேட்டி வழங்கும் திட்டமும், இலவச சீருடை வழங்கும் திட்டமும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மாற்றியமைக்கப் பட்டுள்ளன. தொழில் திறனையும், கைத்தறியையும் மேம்படுத்துவதற்காக சிறப்புத் திட்டமொன்று ரூபாய் 25 கோடி முதலீட்டில் 13 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் சுமார் 25,000 நெசவாளர்களுக்கு இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமையும். பாலிகாட் சேலைகளையும், வேட்டிகளையும் இலவசமாக வழங்கும் புதிய திட்டம் பெருவாரியான வரவேற்பினைப் பெற்றுள்ளது. இச்சேலைகள் மற்றும் வேட்டிகளின் தரம் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் 2.22 கோடி மக்கள் பயனடையும் வகையில் ரூபாய் 173 கோடி செலவில் 1.11 கோடி சேலைகள் மற்றும் 1.11 கோடி வேட்டிகள் வழங்க வகை செய்கிறது. மேலும், இத்திட்டம் மாநிலத் திலுள்ள விசைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்குகிறது. இத்திட்டம் வரும் ஆண்டிலும் தொடரப்படுவதுடன் சமூகப் பாதுகாப்பு வளையத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் அமையும். இம்மாநிலத்தில் உள்ள விசைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து முதல்வர் அவர்கள் மத்திய நிதி அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்கள். இதுவரையிலும் விசைத்தறித் துறைக்கு அனுமதிக்கப் பட்டுவந்த விருப்ப ஆயத்தீர்வைமுறை தொடரப்பட வேண்டும் அல்லது சிறுதொழில் துறையில் உள்ளதைப் போன்று ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவாக விற்று முதல் உள்ள விசைத்தறிப் பிரிவுகளுக்கு மத்திய மதிப்புக்கூட்டு வரியிலிருந்து (சென்வேட்) முழு விலக்களிக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார். ஆண்டு விற்று முதல் ரூபாய் 35 இலட்சத்திற்கு மேற்படாமல் இருப்பின், முதலில் விற்பனை செய்யப்படும் ரூபாய் 25 இலட்சத்திற்கு விசைத்தறித் துறைக்கு, ஆயத்தீர்வை செலுத்துவதி லிருந்து மத்திய அரசு விலக்களித்துள்ளது. இது போதுமானதாக இல்லாததால், சிறு விசைத்தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில் விலக்களிக்கப் படுவதற்கான வரையறையை ரூபாய் 25 இலட்சத்தில் இருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்த வேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

## யானைகள் புத்துணர்வு முகாம்

51. நூறு யானைகளுக்கு முதுமலை வனவிலங்கு சரணாலயத்திலும், 'டாப்சிலிப்'பிலும் மேற்கொள்ளப்பட்ட ஒருமாத ஓய்வு கொடுக்கும் திட்டம் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. யானைகளின் உடல் நலனுக்கு ஏற்ற,



குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் நடத்தப்பட்ட இந்தப் புத்துணர்வு முகாம், அவற்றிற்குக் கிடைத்த மகிழ்ச்சியான ஓய்வாகும்.

இது முதலமைச்சர் அவர்கள் விலங்குகள்மீது வைத்திருக்கும் அன்பினுக்கும் கருணைக்கும் உரிய சான்றாகத் திகழ்வதுடன், முழுமையான நமது உயிரின வாழ்க்கைச் சூழலுக்கும் சான்று பகர்கிறது.

52. தமிழ்மொழி, கலை மற்றும் பண்பாட்டினை மேம்படுத்துதல், மாநிலத்தின் வளஞ்செறிந்த பண்பாட்டு மரபுகளைப் பாதுகாத்தல் ஆகியவை இந்த அரசின் மிக உயர்ந்த கவனத்தைப் பெற்றுள்ளன. தமிழ்நாடு அரசு அனைத்துப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அனைத்து வகுப்புகளிலும் அறிவியல் தமிழை இக்கல்வியாண்டில் அறிமுகம் செய்துள்ளது. அறிவியல் தமிழ்ப்பாடப் புத்தகங்கள் ரூபாய் 5.42 கோடி செலவில் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. புதுதில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆய்வுகளுக்கான 'இருக்கை' ஒன்று அரசு வழங்கிய ரூபாய் 50 இலட்சத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'சிட்டிசன்' (Citizen) என்னும் ஆங்கிலச் சொல் பெண்ணைக் குறிக்கின்றபோது, அதற்கு இணையாக "குடிமகள்" என்ற புதிய சொல் ஒன்றை உருவாக்கி ஆண்-பெண் இருபாலரும் சமம் என்ற கோட்பாட்டிற்கு முதலமைச்சர் அவர்கள் புதிய உத்வேகம் அளித்துள்ளார்கள். புதுமைத் திட்டமான "அன்னதானத் திட்டம்" மாநில அளவில் 162 கோயில்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. கும்பகோணத்தில் 2004 ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெறவிருக்கும் மகாமகம் திருவிழாவிற்கான ஏற்பாடுகள் ரூபாய் 50 கோடி செலவில் விரைவில் முனைப்புடன் முடிக்கப்படும். 2001-2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமிழ்நாட்டில் 2,780 கோவில்களுக்குக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. பெரிய கோயில்களின் பங்களிப்புடன், ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள 6,000 சிறிய கோயில்களை, ரூபாய் 15 கோடி செலவில் புதுப்பிக்கக் கருதப்பட்டுள்ளது. நூற்றாண்டு விழாவையொட்டி, மொத்தம் ரூபாய் 4.60 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட சென்னை அருங்காட்சியகம் ஒரு முக்கிய சுற்றுலா மையமாக மாறியுள்ளது.

53. நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான மிகப்பெரிய முயற்சியாக, அரசு, மாநிலத் தலைமைச் செயலகத்திற்கும், மாவட்டத் தலைமையிடங்களுக்கும் இடையில் தொலைதூரத் தொடர்பு (வீடியோ கான்பரென்சிங்) வசதியினை ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரி மாவட்டத்தை ஏற்படுத்துவதற்கான முடிவு அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. புதிய மாவட்டம் 9.2.2004-ல் தொடங்கிவைக்கப்படும். கணினி வழி நிருவாகத்தைக் கையாண்டு, பெருமளவு மக்கள் தொடர்புடைய பத்து துறைகள் மற்றும் நிறுவனங்களில் சேவைப் பணிகளின் தரத்தை மேம்படுத்தும் செயல்பாடுகள் 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தகவல் பெறுவதற்கான உரிமை குறித்த புதிய சட்டம் ஒன்றின் சிறப்பியல்புகள் குறித்து அரசு விரிவான ஆலோசனை நடத்திவருகிறது. இதற்குரிய வரைவு சட்டம், சட்டமன்றப் பேரவையில், விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

54. அனைத்துத் துறைகளிலும், இந்த அரசின் குறிப்பிடத்தக்க சாதனைகளை பெருமையுடன் நினைவு கூரலாம் என்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதியான செயல்திறன் கொண்ட தலைமையின் கீழ், 2004 ஆம் ஆண்டில் அனைத்து நிலைகளிலும், தமிழ்நாடு அதன் சாதனைகளை விஞ்சும் என்று நாம் உறுதி கொள்ளலாம். இந்தப் பேரவையின் விவாதங்கள், தமிழ்நாட்டு மக்களுக்கு பொருளாதார வளர்ச்சியும் வளம் சேர்க்கும் வகையிலும் நற்கருத்துக்களைக் கொண்டதாகவும், சீர்தூக்கிப் பார்க்கக்கூடியதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

**வணக்கம்**

**மேதகு தமிழக ஆளுநர்**
**திரு.பெ.ஸ்ரீ. ராமமோகன்ராவ் அவர்கள்**
**4-2-2004 அன்று**
**தமிழ்நாடு சட்டப்பேரவையில்**
**ஆற்றிய உரை.**

❖ ❖ ❖




# அரசின் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

அழகு ஆட்சி செய்யும் மாவட்டம் இந்தத் தேனி மாவட்டம்! இந்தத் தேனி மாவட்டத்திற்கு வந்து என் அன்புக்குரிய மக்களாகிய உங்கள் அனைவரையும் கண்டு நிறைவேற்றப்பட்டிருக்கும் அரசுப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி உங்களோடு கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு இன்று எனக்குக் கிடைத்து இருப்பது குறித்து நான் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில் இதுவரை நான் 30 மாவட்டப் பயணங்களை மேற்கொண்டிருக்கிறேன். 28 மாவட்டங்களுக்குச் சென்று வந்திருக்கிறேன். எல்லா மாவட்டங்களுக்கும் ஒரு முறைதான் சென்று வந்திருக்கிறேன். ஆனால் தேனி மாவட்டத்திற்கும், சேலம் மாவட்டத்திற்கும் மட்டும் தான் இரண்டு முறை பயணம் மேற்கொண்டிருக்கிறேன். அதற்கும் மேலாக, நான் மூன்றாம் தடவையாக வருகின்ற மாவட்டம் தேனி மாவட்டம்தான்! நான் வருகின்ற தொகுதி தேனி மாவட்டத்தில் உள்ள இந்த ஆண்டிபட்டித் தொகுதிதான்!

## புதிய உற்சாகம்

நம்மைப் பார்க்க அம்மா அடிக்கடி வரவில்லையே என்று வருத்தப்படாதீர்கள்.

எத்தனை தடவை எத்தனை தொலைவு வானத்தில் பறந்தாலும் தாய்ப் பறவையின் எண்ணம் எல்லாம் அதன் கூட்டிலேயே இருப்பதைப் போல நான் எங்கு சென்றாலும் என்னுடைய எண்ணங்கள் ஆண்டிபட்டித் தொகுதியைச் சுற்றியே வலம் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே தான் மூன்றாம் முறையாக உங்கள் அன்பு முகங்களை எல்லாம் பார்ப்பதற்கு உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இன்று இங்கு வந்திருக்கிறேன். இங்கு நான் வந்திருப்பது மூன்றாவது முறை. நான் அடிக்கடி இங்கே வர வேண்டும் என்று விரும்பினாலும் முதலமைச்சராக இருப்பதால் வேலைப் பளுவின் காரணமாக வர முடியவில்லை. அதனால்தான் உங்களை எல்லாம் கவனித்துக்கொள்ள நல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களை உங்களுக்கு நான் வழங்கி இருக்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அழகின் இருப்பிடமாய் அமைந்திருக்கும் மாவட்டம் ஆகிய இந்தத் தேனி மாவட்டத்திற்கு வருகிற போதெல்லாம் நான் புதிய உற்சாகத்துடன் வருகிறேன்.

## புதிய திட்டங்கள்

சேர, சோழ, பாண்டிய மற்றும் நாயக்க மன்னர்கள் ஆண்ட பகுதி இந்தத் தேனி மாவட்டம்.

"தென்னிந்தியாவின் இரண்டாவது மான்செஸ்டர்" என்று அழைக்கப்படும் தேனி நகரம் உட்பட பற்பல சிறப்புகளைக் கொண்ட ஊர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது தேனி மாவட்டம்.

என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி, பேரூராட்சி, ஊரக வளர்ச்சித் துறைகள் மூலமாக, 5 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சுகாதார வளாகங்கள், பள்ளிக் கட்டடங்கள், கலையரங்கம், சுயஉதவிக்குழு கட்டடங்கள், தொகுப்பு வீடுகள் போன்ற முடிவுற்ற பணிகளையும், கம்பம் நகராட்சியில் பேருந்து நிலையத்தினையும் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுப்பணித்துறை, பள்ளிக்கல்வித்துறை மற்றும் தாட்கோ மூலமாக 8 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட அருங்காட்சியகம்,






இத்தகைய சீரும் சிறப்பும் மிக்க தேனி மாவட்டத்திற்கு மொத்தம் 127 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள முடிவுற்ற பணிகளை அர்ப்பணித்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இன்று ஆண்டிபட்டிக்கு வருகை தந்துள்ளேன். குறிப்பாக, ஆண்டிபட்டித் தொகுதிக்கு மட்டும் இன்று 46 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களையும் உதவிகளையும் வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய நாளில் தேனி மாவட்டத்தில் அனைத்து மக்களும் பயன் அடையும் வண்ணம் 47 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 1076 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். குறிப்பாக, ஆண்டிபட்டித் தொகுதியில் மட்டும் 20 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் 424 பணிகள் இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன

அலுவலகக் குடியிருப்புகள், கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள், மாணவர் விடுதிகள், வகுப்பறைக் கட்டடங்கள் போன்றவற்றையும் – சுகாதாரத் துறை மூலமாக 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஆண்டிபட்டித் தொகுதியில் 8 துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் உட்பட 13 பணிகளையும் – தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பில் கண்டமனூரில் புதிய 110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தினையும் இன்று திறந்து வைத்ததில் நான் அகமிக மகிழ்கின்றேன்.

## சிலர் படும்பாடு பெரும்பாடு

ஒரு ஊரில் ஒரு புலவர் இருந்தார். அந்தப் புலவர் ராஜாவிடம் சென்று அவரைப் புகழ்ந்து அருமையாகக் கவிதை பாடினார். ராஜாவுக்கு ரொம்ப மகிழ்ச்சி. அவரை இதற்கு முன் இப்படி யாரும் புகழ்ந்து பாடியதில்லை. அந்த மகிழ்ச்சியில் உணர்ச்சிவசப்பட்டு 'உமக்கு 2

ஏக்கர் நிலம் தருகிறோம்!' என்று சொல்லிவிட்டார். மற்றவர்களுக்கெல்லாம் மிகவும் ஆச்சரியம், ஏனென்றால் ராஜா சல்லிக் காசு கூட யாருக்கும் கொடுத்து அவர்கள் பார்த்ததில்லை.

ராஜா மந்திரியைக் கூப்பிட்டார். "இந்தப் புலவருக்கு 2 ஏக்கர் நிலம் தர வேண்டும். அதற்கான தானப் பத்திரம் எழுதிக் கொண்டு வாரும்" என்று சொன்னார். மந்திரி பத்திரம் எழுதிக் கொண்டு வந்து மன்னரிடம் கொடுத்தார். மன்னர் அதைப் புலவருக்குக் கொடுத்தார். புலவர் பயபக்தியுடன் அந்தப் பத்திரத்தை இரண்டு கைகளாலும் வாங்கிக் கொண்டார். பத்திரத்தைப் படித்துப் பார்த்த புலவருக்கு மயக்கமே வந்துவிட்டது. ஏன்? கொடுத்தது வெறும் 2 ஏக்கர் நிலம். அந்த 2 ஏக்கர் நிலமும் எட்டு இடங்களில் சிதறிக் கிடந்தது. "எப்படி இந்த இடங்களுக்குப் போய் விவசாயம் செய்வது?" என்ற மலைப்பில் அவர் திகைத்துப் போய் நின்றுவிட்டார். ஒவ்வொரு இடத்திலும் கால் ஏக்கர் நிலம் இருக்கும்படி தள்ளித் தள்ளி எழுதப்பட்டிருந்தது.



இதை இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், உதாரணத்திற்கு இப்படிச் சொல்லலாம்:–

அம்மாபட்டியில் ¼ ஏக்கர்

ஆண்டிபட்டியில் ¼ ஏக்கர்

கம்பத்தில் ¼ ஏக்கர்

கண்டமனூரில் ¼ ஏக்கர்

உப்பார்பட்டியில் ¼ ஏக்கர்

உத்தமபாளையத்தில் ¼ ஏக்கர்

தேனியில் ¼ ஏக்கர்

தேவதானப்பட்டியில் ¼ ஏக்கர்

– இப்படி 2 ஏக்கர் நிலத்தை எட்டு இடங்களில் தள்ளித்தள்ளித் தந்தால் எப்படி இருக்கும்? கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்! இப்படித்தான் அந்தப் பத்திரத்தில் எழுதப்பட்டிருந்தது.

"என்ன புலவரே? என்னுடைய வள்ளல் தன்மையைப் பார்த்து சந்தோஷத்தில் ஊமையாகி விட்டீரா?" என்று கேட்டார் ராஜா.

"மகாராஜா, மந்திரி தள்ளித் தள்ளி எழுதியிருக்கிறார்" என்று பயந்து கொண்டே புலவர் சொன்னார். "என்ன? அப்படியா எழுதினீர்?" என்று ராஜா கேட்டார். "ராஜா நான் நெருக்கி நெருக்கித்தானே எழுதி இருக்கிறேன்? இதற்கு மேல் நெருக்கி எழுதினால் படிக்க முடியாது" என்றார் மந்திரி.

"இல்லை இல்லை! தள்ளித் தள்ளித்தான் எழுதியிருக்கிறார்! இதோ பாருங்கள்!" என்று சொல்லிப் பத்திரத்தை ராஜாவிடம் காட்டினார் புலவர்.

ராஜா பார்த்தார். 'நமக்கேற்ற மந்திரி இவர். நிலத்தைக் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே இப்படிச் செய்திருக்கிறார்' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு புலவரைப் பார்த்துச் சொன்னார் – "எங்கே தள்ளித் தள்ளி எழுதப்பட்டிருக்கிறது, நெருக்கி நெருக்கித்தானே எழுதியிருக்கிறது? புலவரே நீர் பொய் சொல்லி விட்டீர்! உமக்கு நிலம் கிடையாது! நீர் போகலாம்!" என்று, புலவரை விரட்டாத குறையாக வெளியே போகச் சொல்லிவிட்டார் ராஜா. அந்தப் புலவர் தன் விதியை நொந்து கொண்டு வெளியே போனாராம்.

அந்த ராஜாவைப் போன்ற தலைவர்களும் அவரது மந்திரியைப் போன்ற குட்டித் தலைவர்களும் இன்றைக்கும் தமிழ்நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். 'வாய் ஜாலத்தால் எதையும் மாற்றிப் பேசலாம் –

குதர்க்கப் புத்தியால் யாரையும் ஏமாற்றிவிடலாம்' என்று நினைத்துக் கொண்டிருக்கிற இவர்களிடம் மாட்டிக் கொண்ட சிலர் படும் பாடு பெரும் பாடு! இவர்களிடம் 'கூட்டு' என்று போனவர்கள், 'பொரியல்' ஆகி இன்று 'வறுவல்' ஆகி இருக்கிறார்கள்.

இவர்கள் எல்லாம் சேர்ந்து உங்கள் அன்புச் சகோதரியின் அரசுக்கு ஏற்படுத்திய தடைகள் கொஞ்ச நஞ்சம் அல்ல. அவற்றை எல்லாம் மீறித்தான் உங்களுக்குப் பணியாற்றுவதில் நான் ஓய்வின்றி உழைத்து வருகிறேன்.

### எனக்குத் தோன்றிய யோசனை

இன்று இங்கே இத்தனை இத்தனை பெண்களைப் பார்க்கின்ற போது உள்ளபடியே நான் பூரிப்படைகிறேன். இங்கே இருக்கின்ற பெண்கள் எல்லாம் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள். முன்பெல்லாம் ஆண்டிபட்டி பகுதியைச் சேர்ந்த பெண்களைப் பார்த்தால் பாவமாக இருக்கும். ஆனால், இப்போது இந்தப் பெண்களை பார்க்கும் போது பெருமையாக இருக்கிறது. இங்கே அமர்ந்திருக்கின்ற பெண்கள் முகத்தில் எவ்வளவு தன்னம்பிக்கை, எவ்வளவு தைரியம், எவ்வளவு உற்சாகம்! இதற்கெல்லாம் காரணம், நான் தொடங்கிய இந்த சுயஉதவிக் குழுக்கள் தான். பல முறை நான் இதைத் தான் திரும்ப திரும்ப எங்கே பேசினாலும் சொல்கிறேன். பெண்கள் நினைத்தால் அவர்கள் சாதிக்க முடியாதது எதுவுமே கிடையாது. பெண்களுக்கு தேவைப்படுவது வாய்ப்புகள்தான்.

காலம் காலமாக நம்முடைய சமுதாயத்தில் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு வந்தார்கள். காலம் காலமாக சில பெரியவர்கள்–ஆண்கள் இதைச் சொல்லி வைத்து விட்டார்கள். ஒரு பெண் பிறக்கின்ற போது குழந்தைப் பருவத்தில் தந்தையைச் சார்ந்திருக்க வேண்டும். பெரியவளானால், பின்னர் கணவரைச் சார்ந்திருக்க வேண்டும். வயதாகி விட்டால் மகனைச் சார்ந்திருக்க வேண்டும் என்று சொல்லி வைத்து விட்டார்கள். ஆண்களுக்கு என்னென்ன வேலைகள் செய்யப் பிடிக்காதோ அருவருப்பான வேலைகள் – வீட்டைக் கூட்டுவது, சாணித் தண்ணீரைத் தெளிப்பது, சமையல் செய்வது, துணி துவைப்பது, பாத்திரங்கள் தேய்ப்பது, கழுவுவது, துலக்குவது இப்படிப்பட்ட வேலைகள் எல்லாம், இதெல்லாம் பொம்பளை சமாச்சாரம் என்று ஒதுக்கி விட்டார்கள். இத்தகைய வேலைகளில் ஆண்கள் ஈடுபடவே மாட்டார்கள். ஆகவே, சம்பளம் இல்லாத வேலைக்காரிகளாகத் தான் பெண்கள் நடத்தப்பட்டு வந்தார்கள். நான் யோசித்தேன். ஆண்களோடு பெண்கள் சரி நிகர் சமானமாக வாழ வேண்டும் இந்த நாட்டிலே என்பது தான் இந்த அரசின் கொள்கை. என்னுடைய இலட்சியம். இதை எப்படி சாதிப்பது என்று சிந்தித்தேன். அப்போது எனக்கு தோன்றிய யோசனை இதுதான். பெண்கள் உண்மையிலேயே ஆண்களுக்கு சரி நிகர் சமமாக வாழ வேண்டும் என்றால் அவர்கள் பொருளாதார ரீதியாக சுதந்திரம் அடைய வேண்டும். அவர்கள் பொருளாதார ரீதியாக ஆண்களைச் சார்ந்திருக்க கூடாது. சொந்தக் கால்களில் நிற்க வேண்டும். சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் என்றால் பெண்கள் சுயமாக சம்பாதிக்க வேண்டும். அதற்காகத் தான் 1992 ஆம் ஆண்டிலேயே முதல் முறை நான் முதலமைச்சராக இருந்த போதே நான் இந்த பெண்கள் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கினேன். இன்று ஆலமரமாக அது வளர்ந்து தழைத்தோங்கி தமிழகம் எங்கும் இன்றைக்கு 25 இலட்சம் பெண்கள் சுயஉதவிக் குழுக்களில் இருக்கிறார்கள். இன்றைக்கு இந்த சுயஉதவிக் குழுக்களில் இருக்கின்ற பெண்கள் சேமித்து வைத்திருக்கின்ற நிதி எவ்வளவு தெரியுமா? வங்கிகளில் இருக்கின்ற சேமிப்புத் தொகை ஏறக்குறைய 400 கோடி ரூபாய் ஆகும். நினைத்துப் பார்க்கிறேன்.

ஆரம்பத்தில் 1992இல் இந்த சுயஉதவிக் குழுக்களை, மகளிர் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்குகின்ற போது எந்த வங்கியும் அதில் உறுப்பினர்களாக இருக்கின்ற தாய்மார்களுக்கு கடன் வழங்க முன் வரவில்லை, தயங்கினார்கள், பயந்தார்கள். இந்தப் பெண்களால் சம்பாதித்து மீண்டும் இந்தக் கடனை திருப்பிச் செலுத்த முடியுமா என்றெல்லாம் சந்தேகப்பட்டார்கள். ஆனால், பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு, இந்தக் கடன்களை எல்லாம் உடனுக்குடன் திருப்பிச் செலுத்தி, மீண்டும் அதைவிட பெரிய கடன் வாங்கி, மீண்டும் அதைவிட பெரிய தொழிலைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்தியதைப் பார்த்த பிறகு, இன்றைய தினம் 400 கோடி ரூபாய் அளவிற்கு இந்தத் தாய்மார்களிடம், பெண்களிடம் சேமிப்புத் தொகை இருப்பதை பார்த்து இன்றைக்கு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இன்று அதே வங்கிகள் தாய்மார்கள் பின்னால் சென்று, அவர்களைப் பின் தொடர்ந்து தாயே, அம்மா உங்களிடம் இருக்கின்ற சேமிப்புத் தொகையை எங்கள் வங்கியில் பிக்சட் டெபாசிட்டாக, டேர்ம் டெபாசிட்டாக போட்டு வையுங்கள். வைப்புத் தொகையாக போட்டு வையுங்கள் என்று தாய்மார்களிடம் போய் கேட்கின்ற ஒரு நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கின்ற போது எவ்வளவு பெருமையாக இருக்கிறது.



ஆண்டிபட்டியில் தொடங்கப் பட்டுள்ளது. அதை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது தான் வெணிலா பீன்ஸ் சாகுபடித் திட்டம். பரிட்சார்த்தமாக இப்போது தான் தொடங்கப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கிற பெண்களை குறிப்பாக கேட்டுக் கொள்கிறேன். இந்த வெணிலா பீன்ஸ் சாகுபடியை நல்ல முறையில் நீங்கள் மேற்கொண்டால் இந்த ஆண்டிபட்டி உண்மையிலேயே அரசிபட்டி ஆகிவிடும். வளம் கொழிக்கும் பூமியாக மாறிவிடும். நீங்களும் அரசிகளாக மாற முடியும். காரணம் இந்த வெணிலா பீன்ஸ் சாகுபடியால் ஒரு ஏக்கருக்கு ஒரு ஆண்டுக்கு 52 இலட்சம் ரூபாய் சம்பாதிக்க முடியும். ஆகவே, இதை நினைவில் நிறுத்திக் கொண்டு, இந்தத் திட்டத்தை நல்ல முறையில் நீங்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சீர்மிகு விழாவிலே 75 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பில் 376 பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இதில் ஆண்டிபட்டி தொகுதியில் மட்டும் 24 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 151 பணிகள் அடங்கும்.

பொதுப்பணித்துறை மூலமாக 6 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பில் பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள், மாணவ, மாணவியர் விடுதிகள், மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் உள்கட்டமைப்பு பணிகள், ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் வார்டுகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கும் காவல்துறை மூலமாக 4 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்டக் காவல் அலுவலகம் மற்றும் ஏனைய காவல்துறை அலுவலகங்கள், ஆயுதப்படை வளாகம், அனைத்து மகளிர் காவல் நிலையம் போன்ற கட்டுமானப் பணிகளுக்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

## அரசிபட்டியான ஆண்டிபட்டி

ஆண்டிபட்டியை பொறுத்த வரை இங்கே நான் தேர்தலில் நின்ற போது உங்களுக்கு எல்லாம் ஒரு வாக்குறுதி அளித்தேன். தமிழ்நாட்டில் ஆண்டிபட்டிதான் முதன்மையான தொகுதி என்ற அந்தஸ்தை அடையும்படி நான் செய்வேன் என்ற ஒரு வாக்குறுதி அளித்தேன். அதை படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு அந்த இலக்கை எட்டுகின்ற வகையில் இன்றைக்கு அனைவருமே ஆண்டிபட்டி, அரசிபட்டி ஆகிவிட்டது என்று சொல்லும் அளவிற்கு இந்த மாவட்டத்தில், இந்த தொகுதியில் பல வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எத்தனையோ புதிய திட்டங்களைத் தீட்டுகிறோம். எத்தனையோ தொழில் அதிபர்கள் என்னை வந்து சந்திக்கிறார்கள். அதிகாரிகளும் என்னுடன் ஆலோசனை நடத்துகிறார்கள். பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் என்னுடன் ஆலோசனை நடத்துகிறார்கள். விஞ்ஞானிகள் ஆலோசனை நடத்துகிறார்கள். ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தலாம். அதை பரிட்சார்த்தமாக எங்கேயாவது தொடங்கலாம் என்று சொன்னால் உடனேயே ஆண்டிபட்டியில் தொடங்குங்கள் என்றுதான் நான் சொல்கிறேன்.

அதைப் போலவே பரிட்சார்த்தமாக அண்ணா பல்கலைக் கழகம் சார்பில் ஒரு புதிய திட்டம்

## குடிநீர்த் திட்டங்கள்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். இதனை நிறைவேற்றும்

வகையில் பல்வேறு குடிநீர்த் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. மேலசொக்கநாதபுரம் ஊரக பேரூராட்சி மற்றும் கீழசொக்கநாதபுரம், தர்மத்துப்பட்டி, ரங்கநாதபுரம், கரட்டுப்பட்டி, அமராவதி நகர், மணப்பட்டி ஆகிய குடியிருப்புகளில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் 11 லிட்டர் குடிநீர் விநியோகத்தை 70 லிட்டராக அதிகரிக்கும் நோக்கத்தில் 1 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மலசொக்கநாதபுரம் ஊரக பேரூராட்சி குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கெங்குவார்பட்டி, செங்குளத்துப்பட்டி, கோட்டார்பட்டி, மீனாட்சிபுரம், பாலபட்டி, ஸ்ரீராம் நகர் மற்றும் அம்சாபுரம் ஆகிய குடியிருப்புகளில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் 44 லிட்டர் குடிநீர் விநியோகத்தை 70 லிட்டராக அதிகரிக்கும் திட்டத்தின் அடிப்படையில் 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 'கெங்குவார்பட்டி ஊரக பேரூராட்சி குடிநீர்த் திட்டம்' முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தின் கிராமப்பகுதிகளில் மொத்தம் 455 கிராம குடிநீர்த் திட்டப் பணிகள் 3 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதில் 86 இலட்சம் ரூபாய் மதிப்பில் 148 கிராம குடிநீர்த் திட்டங்கள் ஆண்டிபட்டித் தொகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதில் நான் மனநிறைவு அடைகிறேன்.

பழனிசெட்டிபட்டி குடியிருப்பில் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் 34 லிட்டர் குடிநீர் விநியோகத்தை 70 லிட்டராக அதிகரிக்கும் திட்டமாக ஒரு கோடி ரூபாய் மதிப்பில் 'பழனிசெட்டிபட்டி ஊரக பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு' இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், கடந்த இரண்டரை ஆண்டுகளில் தேனி மாவட்டம் ஊரகப் பகுதிகளில் 29 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பிலான குடிநீர்த் திட்டங்களும்; நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 11 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பிலான குடிநீர்த் திட்டங்களும் முடிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைச் சுட்டி காட்ட விரும்புகிறேன்.

தேனி மற்றும் மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த 3 இலட்சம் மக்கள் பயன் அடையும் வகையில் 73 கோடி ரூபாய் மதிப்பிலான ஆண்டிபட்டி, சேடப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த நான் ஆணையிட்டதன் அடிப்படையில் அத்திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ்வாண்டு ஏப்ரல் மாதத்திற்குள் இத்திட்டம் முடிக்கப்பட வேண்டும் என நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## முழுமையான வறுமை ஒழிப்புத் திட்டம்

நான் 16.9.2002 நாளன்று நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு இம்மாவட்டத்தில் முழுமையான வறுமை ஒழிப்புத் திட்டத்தினைத் துவக்கி வைத்தேன். சுயஉதவிக் குழுக்கள் அமைத்து குழு உறுப்பினர்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளிப்பதுடன் தொழில் முனைவோர் பயிற்சி, தொழில் திறன் பயிற்சி, தொழில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டு தொழில் துவங்கி பொருளாதார நிலையினை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.


இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 1973 குழுக்கள் உருவாக்கப்பட்டு 31,088 மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு உள்ளனர். இதில் 479 குழுக்களுக்கு அரசின் பல்வேறு கடன் உதவித் திட்டங்களின் கீழ் 2 கோடியே 11 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டு குழு உறுப்பினர்கள் பல்வேறு தொழில்கள் செய்து வருகின்றனர் என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 1 கோடியே, 2 இலட்சம் ரூபாய் செலவில் 717 குழுக்களுக்கு, குழு உறுப்பினர் பயிற்சியும் – 866 குழுக்களுக்கு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிப் பயிற்சியும் – 1377 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சியும் – 465 மகளிருக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சியும் – 1278 மகளிருக்கு வேளாண் தொழில் திறன் பயிற்சியும் அளிக்கப் பட்டுள்ளது என்பதை அறிவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இது மட்டுமன்றி தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள குடும்பங்களின் பொருளாதார நிலையினைக் கணக்கெடுத்து, ஏழைக் குடும்பங்களுக்கு அவரவருக்கு ஏற்ற தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி பொருளாதார மேம்பாடு அடைய வழி வகுக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் முன்னோடியாக ஆண்டிபட்டி வட்டாரத்தில் ஜி.உசிலம்பட்டி ஊராட்சியில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சாலைப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மேம்பாட்டைய சாலை வசதிகள் மிகவும் இன்றியமையாதது ஆகும். இதன் அடிப்படையில் கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும் புதிய சாலைகளை அமைப்பதற்காகவும் சாலை மேம்பாட்டிற்காகவும் எனது தலைமையிலான அரசு இதுவரை மாநிலம் முழுமைக்கும் 2,518 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



தேனி மாவட்டம், ஆண்டிபட்டித் தொகுதியில் முதலமைச்சரின் சிறப்புச் சாலை பழுது பார்ப்புத் திட்டத்தின் கீழ் 86 இலட்சம் ரூபாய் செலவில் 26.40 கி.மீ. நீளத்திற்கு சாலைகளும், மற்ற தொகுதிகளில் 81.2 கி.மீ. நீள சாலைகள் 3 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டித் தொகுதியில் மிக முக்கிய புண்ணியத் தலமான மாவூத்து வேலப்பர் கோவிலுக்குச் செல்லும் சாலையில் பல்வேறு இடங்களில் பாலங்கள் இல்லாததால் மழைக் காலத்தில் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாயினர். எனவே, ஆண்டிபட்டி – வேலப்பர் கோவில் சாலையில் 41 இலட்சம் ரூபாய் செலவில் 3 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பாலக்கோம்பை, தெப்பம்பட்டி மற்றும் ராஜதானியைச் சேர்ந்த ஊர் மக்கள் பயன் பெறும் வகையில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் பாலக்கோம்பையில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தைத் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நபார்டு திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் மொத்தம் 10 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சாலைப் பணிகளும் – கம்பம், காமய கவுண்டன்பட்டி சாலையில் மக்களின் நெடுநாளைய கோரிக்கையான பாலம் கட்டும் பணிகள் 1 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டிபட்டித் தொகுதியில் முக்கிய சாலையான வைகை அணை – வருசநாடு ஒரு வழித்தடம் மற்றும் திண்டுக்கல் – தேனி சாலை ஆகியவற்றை, 9 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் அகலப்படுத்தி, உறுதிப்படுத்தும் பணிக்காக இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதை மனநிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சாலைத் திட்டத்தின் கீழ் சுற்றுலா வளர்ச்சி மற்றும் புண்ணியத் தலங்களைக் கருத்தில் கொண்டு பாளையம், சுருளிப்பட்டி, தேவாரம், கோம்பை, கம்பம்மெட்டு, கோகிலாபுரம், ஆனமலையான்பட்டி, ராயப்பன்பட்டி, நாகையகவுண்டன்பட்டி, காமயகவுண்டன் பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்குப் பயன்படும் வகையில் 3 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் புதிய சாலைப் பணிகளும் பாலங்களும் தொடங்குவதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஆண்டிபட்டி வேலப்பர் கோவில் சாலையை மாவூத்து வேலப்பர் கோவிலின் முக்கியத்துவம் கருதி 84 இலட்சம் ரூபாய் செலவில் அகலப்படுத்தவும், சுற்றுலா முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு கும்பக்கரை அருவிக்குச் செல்லும் கிருஷ்ணமநாயக்கன் தோப்பு சாலை 32 இலட்சம் ரூபாய் செலவிலும்– கொடைக்கானல் – கொச்சி சாலை 95 இலட்சம் ரூபாய்செலவிலும் மேம்பாடு செய்யும் பணிக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் அகமிக மகிழ்கின்றேன்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக, திண்டுக்கல் – குமுளி நெடுஞ்சாலையில் தேனி நகரில் 4 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாலம் கட்டும் பணிக்கும், ஜெயமங்கலம் – ஆண்டிபட்டி சாலையில் குள்ளப்புரம் அருகே 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் பாலம் கட்டும் பணிக்கும் – மயிலாடும்பாறை – பொன்னம்படுகை சாலையில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் மயிலாடும் பாறை அருகே பாலம் கட்டும் பணிக்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நபார்டு திட்டத்தின் கீழ் 17 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் 41 சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டும் பணிகள் நிறைவேற்றுவதற்காகவும் – ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக பாரதப் பிரதமர் கிராம சாலைத் திட்டத்தின் கீழ் 11 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் சாலைகள் அமைக்கவும் இன்று என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலைத்துறையின் மூலமாக 3 கோடியே 22 இலட்சம் மதிப்பில் பாலங்கள் கட்டும் பணிகளுக்கும் சாலை புதுப்பித்தல் பணிக்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

### உதவிபுரிய ஓடோடி வருகிறேன்

தமிழகத்தில் ஒவ்வொரு பகுதியின் தேவைகள் என்னென்ன என்பதை அறிந்து அந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்கு திட்டங்கள் தீட்டி அவற்றை உடனுக்குடன் நான் செயல்படுத்தி வருகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். என்னிடம் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை என்றைக்கும் வீண் போகாது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஓர் ஊரில் நீண்ட காலமாக மழை பெய்யவில்லை. விவசாயிகள் பயிர்செய்ய இயலவில்லை. தண்ணீர் இல்லாமல் மக்கள் வாடினார்கள். ஊரின் வறட்சியைப் போக்குவதற்கு என்ன செய்வது என்று தெரியாமல் மக்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் ஒரு முனிவர் அந்த ஊருக்கு வந்தார்.

''நீங்கள் எல்லோரும் ஏன் வாடி இருக்கிறீர்கள்?'' என்று முனிவர் கேட்டார்.

''சாமி, ஊரிலே சில ஆண்டுகளாக மழை இல்லை. அதனால் பயிர் இல்லை. மனைவி மக்களுக்கு உணவு இல்லை. மாடு கன்றுகளுக்குத் தீவனம் இல்லை. எங்கள் வறுமையைத் தீர்க்க வழி இல்லை. என்ன செய்வது என்றும் தெரியவில்லை!'' என்று ஊரிலே இருந்த பெரியவர்கள் சொன்னார்கள்.

அவர்கள் சொன்னதை எல்லாம் கேட்ட முனிவர் சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்தார். பிறகு தீர்க்கமான குரலில் முனிவர் அவர்களிடம் சொன்னார்.

''நாளை விடியற்காலை 5 மணிக்கு ஊர் மக்கள் எல்லோரும் இந்த இடத்திற்கு வர வேண்டும். நான் இதே இடத்தில் இருப்பேன். அப்போது மழை பெய்யும். அந்த மழையால் உங்கள் பஞ்சம் தீரும். இது உறுதி! ஆகவே, காலையில் கட்டாயம் வாருங்கள்! இப்போது நீங்கள் போகலாம்! ''என்று கூறிய முனிவர் கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்தார்.

மறுநாள் விடியற்காலை 4 மணியில் இருந்தே ஊர் மக்கள் வரத் தொடங்கி விட்டார்கள். 5 மணி அளவில் ஏறத்தாழ எல்லா மக்களும் வந்து விட்டார்கள். முனிவர் கண்கனை மூடியபடியே இருந்தார். திடீரென்று பெரு மழை பொழியத் தொடங்கியது. ஊர் மக்கள் அனைவரும் மழையில் நனைவதைக் கூட பொருட்படுத்தாமல் முனிவரின் கால்களில் விழுந்து வணங்கினார்கள்.

''சாமி, உங்கள் கருணையே கருணை! உங்கள் அருளால் எங்கள் துன்பம் நீங்கப் போகிறது! நாங்கள் உங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்'' என்று மக்கள் முனிவரிடம் கூறினார்கள்.

அப்போது முனிவர் சொன்னார். ''மழை என்னால் வரவில்லை. அங்கே பாருங்கள் ஒருவரை, அவரால் தான் மழை வந்தது'' என்று சுட்டிக் காட்டினார். எல்லோரும் அவர் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தார்கள். அங்கே ஒருவர் குடையுடன் நின்று கொண்டிருந்தார்.

''பார்த்தீர்களா அந்த மனிதரை? நான் மழை வரும் என்று சொன்னதில் உங்களுக்கு சந்தேகம் இருந்தது. இருந்தாலும் என்ன நடக்கின்றது என்று பார்க்கலாம் என்று வந்தீர்கள். ஆனால், அங்கு நிற்கும் மனிதரோ நான் சொன்னதில் மாபெரும் நம்பிக்கை வைத்தார். அதனால் தான் மழை பெய்யும் என்று சொன்னதும் அதை உறுதியுடன் நம்பிக்கையில் குடையுடன் வந்திருக்கிறார். அவரது நம்பிக்கையால் தான் இப்போது மழை பெய்தது. இன்னும் மழை பெய்யும். அப்படிப்பட்ட நம்பிக்கை உங்களுக்கும் வேண்டும்'' என்று முனிவர் சொன்னாராம்.

அப்படிப்பட்ட அசைக்க முடியாத நம்பிக்கையை என்னிடம் நீங்கள் கொண்டிருப்பதால் தான் உங்களுக்கு

உதவி புரிய நான் ஓடோடி வருகிறேன் என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

### நலத்திட்ட உதவிகள்

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேகமாகச் சென்றடைய வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் உண்டு. என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் தேனி மாவட்டத்தில் உள்ள 9,051 பயனாளிகளுக்கு 4 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை இந்த விழாவில் வழங்குவதிலும், குறிப்பாக, ஆண்டிபட்டித் தொகுதியில் மட்டும் 89 இலட்சம் ரூபாய் மதிப்பில் 2,608 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதிலும் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 32,000 ரூபாய் மதிப்பில் 40 பயனாளிகளுக்கு உதவியும் – பொது சுகாதாரத் துறை மூலமாக 83,000 ரூபாய் மதிப்பில் 166 கர்ப்பிணி பெண்களுக்கு மகப்பேறு நிதி உதவியும் – மின்சார வாரியத்தின் மூலமாக 1 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 1,784 பயனாளிகளுக்கு இலவச மின் இணைப்பும் – தோட்டக்கலைத் துறை மூலமாக 2 இலட்சம் ரூபாய் மதிப்பில் 25 பயனாளிகளுக்கு விசைத் தெளிப்பான் மற்றும் மானிய உதவியும் – பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை, சமூக நலத்துறை மூலமாக 23 இலட்சம் ரூபாய் மதிப்பில் 569 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரம் மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி உதவியும் – தொழில் வணிகத் துறை மூலமாக 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் 35 பயனாளிகளுக்கு மானியமும் – ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மூலமாக 8 இலட்சம் ரூபாய் மதிப்பில் 493 பயனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள், காது கேளாதோர் கருவி, கல்வி உதவித் தொகைகள் போன்ற உதவிகளும் – வருவாய்த்துறை ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பில் 2,602 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை, விபத்து நிவாரணம், நலிந்தோர் உதவித் தொகை, நிலப்பட்டா போன்ற பல்வேறு உதவிகளும் – கிராமத் தொழில் வாரியம், தாட்கோ, மகளிர் திட்டம், நகராட்சி, ஊரக வளர்ச்சி; கூட்டுறவு மற்றும் வனத்துறை மூலம் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் 3,377 பயனாளிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு, சுழல் நிதி மற்றும் கடன் உதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளும் இன்று வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஓர் ஊரில் ஒரு அரசர் இருந்தார். அவருடைய நாட்டில் சில பெரிய மனிதர்கள் இருந்தார்கள். உண்மையில் அவர்கள் பெரிய மனிதர்களே அல்ல. போலிப் பெரியவர்கள். அவர்கள் அரசருக்கு எதிராக எதையாவது செய்து கொண்டே இருப்பார்கள். ஆனால் ஊர் மக்களுக்கு இது தெரியாது. அவர்கள் அந்தப் போலிப் பெரிய மனிதர்களை நல்லவர்கள் என்றே நம்பி வந்தார்கள்.

அந்தப் போலி மனிதர்கள் பொல்லாதவர்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு என்ன வழி என்று அரசன் யோசித்தார். யோசித்த பின் ஒரு முடிவுக்கு வந்தார். ஊரிலே ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்தார்.

அந்த ஊர்ப் பொது விழாவுக்கு வசதியுள்ளவர்கள் நன்கொடை அளிக்கலாம் என்று அறிவித்தார். பணக்காரர்கள் பலரும் அரண்மனைக்கு வந்தார்கள். என்ன பொருளைத் தாங்கள் அளிக்கலாம் என்று அரசரிடம் கேட்டார்கள். அரசர் ஒவ்வொருவருக்கும், அவர்கள் கொடுக்க வேண்டிய பொருளைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். அப்பொழுது போலிப் பெரிய மனிதர்கள் வந்தார்கள். எதைச் செய்தாலும் அவர்கள் கூட்டாகத் தான் செய்வார்கள். அவர்கள் அரசரிடம் அடக்கத்துடன் நின்று கொண்டு ''அரசே! நாங்கள் என்ன தர வேண்டும் என்று உத்தரவிடுகிறீர்களோ அதை உடனே தரத் தயாராய் இருக்கிறோம். பொன்னைத் தரவா? மணியைத் தரவா? வைர வைடூரியங்களைத் தரவா? எது வேண்டுமானாலும் தரத் தயாராய் இருக்கிறோம். ஆணையிடுங்கள் அரசே'' என்று கூறினார்கள்.

''இல்லை, பொன்னும், பொருளும் வேண்டாம். எல்லாப் பொருள்களையும் ஊர்ப் பொது இடத்தில் தரச் சொல்லியிருக்கிறேன். உங்கள் பங்காகப் பால் கொண்டு வந்து நடுவே வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தில் ஊற்றுங்கள்; அதுபோதும்'' என்று அரசர் சொன்னார்.

உடனே அந்தப் போலி மனிதர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு அண்டா பால் கொண்டு வருகிறோம்' என்றார்கள். அரசர், ''அவ்வளவு வேண்டாம். ஆளுக்கு ஒரு சொம்பு பால் கொண்டு வாருங்கள் அது போதும், ஊர் நடுவே வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தில் ஊற்றுங்கள் என்று சொன்னார்.

அவர்களுக்கு ரொம்ப சந்தோஷம். ''அப்பாடா! ஒரு சொம்பு பால் தானே? கொடுத்தால் போயிற்று? என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

விழா நாள் வந்தது. போலிப் பெரிய மனிதர்கள் ஒவ்வொருவரும் ''மற்றவர்கள் பால் கொண்டு சென்று ஊற்றும் போது நாம் ஒருவர் மட்டும் சொம்பு நிறைய தண்ணீரைக் கொண்டு போய் ஊற்றி விடுவோம்.

யாருக்குத் தெரியப் போகிறது?'' என்று நினைத்தார்கள். நினைத்தது மட்டும் அல்லாமல் இயல்பாகவே கருமிகளான அவர்கள் ஒவ்வொருவருமே அப்படி செய்தார்கள்.



எல்லோரும் ஊற்றி முடிந்ததும் அரசர் அமைச்சரை அழைத்து ''எவ்வளவு பால் இருக்கும் என்று அளந்து வாருங்கள்'' என்று சொன்னார்.

ஊரார் எல்லோரும் திரண்டிருந்த அந்தக் கூட்டத்தில் நடுவே வைக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய பார்த்திரத்தை நோக்கி அமைச்சர் நடந்தார். பாத்திரத்தை எட்டிப் பார்த்த அமைச்சருக்கு பகீரென்றது. அமைச்சர் அங்கிருந்தே அரசரை நோக்கிச் சொன்னார். ''அரசே, இந்தப் பெரிய மனிதர்கள் நம்மை ஏமாற்றி இருக்கிறார்கள். பாத்திரம் முழுவதும் தண்ணீர்தான்! ஒரு சொட்டுப் பாலைக் கூட அவர்கள் ஊற்றவில்லை'' என்று உரக்கக் கூறினார். மக்களும் வந்து பார்த்தார்கள். ''ஆகா! இவ்வளவு நாளும், பெரிய மனிதர்கள் என்று நினைத்தோமே? இவர்கள் எல்லோருமே போலிப் பெரிய மனிதர்கள் தானா? இவர்கள் அரசரை ஏமாற்றினார்கள். நம்மை ஏமாற்றினார்கள். அதைவிடக் கொடுமை இவர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் ஏமாற்றியுள்ளார்கள்! இதுவரை இவர்கள் நம்மை முட்டாள்களாகவே நினைத்திருக்கிறார்கள். நாமோ இந்த மண்ணாங்கட்டிகளைத் தங்கக் கட்டிகள் என்றல்லவா தவறாக நினைத்து விட்டோம்?'' என்று சொல்லி மக்கள் வெட்கப்பட்டார்கள்! வேதனைப் பட்டார்கள்!

போலிப் பெரிய மனிதர்களின் அடிப்படைக் குணமே சுயநலம் தான். அவர்கள் கூட்டணியாகச் செயல்பட்டு மற்றவர்களை ஏமாற்றுவார்கள். ஒருவரை ஒருவர் ஏமாற்றவும் தயங்க மாட்டார்கள்!

அந்த நாட்டுப் பொதுமக்கள் போலிப் பெரிய மனிதர்களின் சுயரூபத்தை சில காலம் கழித்து அடையாளம் கண்டு கொண்டார்கள்.

என் அருமைத் தமிழ் மக்களாகிய நீங்கள் கெட்டிக்காரர்கள்! அப்படிப்பட்ட போலிப் பெரிய மனிதர்களை எப்போதும் நீங்கள் அறிந்து வைத்திருப்பீர்கள். அவர்களை நீங்கள் அடையாளம் கண்டால் மட்டும் போதாது. சரியான பாடம் புகட்டவும் வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டு, நீங்கள் என்னிடம் கொண்டிருக்கும் மாறாத அன்புக்கும், எனக்குத் தருகின்ற ஆதரவுக்கும், மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம் பயனாளிகள் அனைவருக்கும் நானே என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நேரம் குறைவாகவே இருப்பதால் 15 பேருக்கு மட்டும் மேடையில் உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் அரசு அதிகாரிகளும் இங்கேயே இப்போது உதவிகளை வழங்குவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து தங்கள் தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.


இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அதுல் ஆனந்த் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும் காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!
எனக் கூறி விடை பெறுகிறேன்.
நன்றி வணக்கம்.

– 5.2.2004 அன்று தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.

# சென்னையில் கோலாகலமாக நடந்த குடியரசு நாள் விழா!

இந்தியத் திருநாட்டின் 55ஆவது குடியரசு நாள் விழாக் கொண்டாட்டங்கள், தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை கடற்கரை காமராசர் சாலையில் உள்ள மகாத்மா காந்தியடிகள் சிலை அருகே 26–1–2004 அன்று காலை 7.51மணிக்கு சிறப்பாகத் தொடங்கியது.



காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் முன்னே அணிவகுத்து வர, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வருகைதந்து, கடற்கரைச் சாலையின் இருபுறங்களிலும் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள். தொடர்ந்து காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் அணிவகுத்துவர விழாவிற்கு வருகைபுரிந்த மேதகு தமிழக ஆளுநர் திரு.பெ.ஸ்ரீ. ராமமோகன்ராவ் அவர்கள், பார்வையாளர்கள் பகுதியில் சுற்றிவந்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்களை அணிவணக்கம் ஏற்கும் மேடையருகில் வரவேற்றார். தொடர்ந்து ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மற்றும் கோவா மாநிலங்களின் தலைமைப் படைத்தலைவர் மேஜர் ஜெனரல் பரம்ஜித் சிங், வி.எஸ்.எம்., சென்னை கடற்படை பொறுப்பு அதிகாரி கமோடர் டி.ஹரி, ஏ.வி.எஸ்.எம்., சென்னை தாம்பரம் வான்படை அதிகாரி ஏர்கமோடர் சபன்குமார் கர்மாகர், வி.எம்., தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் திரு.ஐ.கே.கோவிந்த், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு.எஸ்.வி.வெங்கட கிருஷ்ணன், இ.கா.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு.ஆர்.நடராஜ், இ.கா.ப., ஆகியோரை மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.



இதனையடுத்து காலை 8 மணிக்கு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அப்போது அரசு ஹெலிகாப்டர் தாழ்வாகப் பறந்துவந்து தேசியக்கொடி அருகே அணிவகுப்புப் பாதை வழியாக மலர் தூவிச் சென்றது. பிறகு கடலோரக் காவல்படையின் அதிவேக வானூர்திகளின் வான் அணிவகுப்பு நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து அணிவணக்க மேடைக்கு ஆளுநர் வருகை தந்தார். அணிவகுப்புத் தளவாய் ஸ்குவாட்ரன் லீடர் ஆர்.கே.சிங் தலைமையில் பல்வேறு படைப்பிரிவுகளின் அணிவகுப்பு நடைபெற்றது.

இராணுவப்படை, இராணுவக் கூட்டுக் குழல் முரசிசை, கடற்படை, வான்படை, வான்படை கூட்டுக்குழல் முரசிசை, சி.ஆர்.பி.எஃப் கூட்டுக்குழல் முரசிசை, சி.ஆர்.பி.எஃப் படை, முன்னாள் இராணுவத்தினர் படைப்பிரிவு, சி.ஐ.எஸ்.எப். கூட்டுக் குழல் முரசிசை, சி.ஐ.எஸ்.எப். படைப்பிரிவு, ரயில்வே பாதுகாப்புப்படை,



சென்னை மாநகர காவல் படை, காவல் குதிரைப்படை, சென்னை மாநகர காவல் கூட்டுக்குழல் முரசிசை, பெண்கள் கமாண்டோ படை, துரித நடவடிக்கை காவல்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, தமிழ்நாடு கமாண்டோ படை, ரெஜிமெண்டல் மைய கூட்டுக் குழல் முரசிசை, கடலோரப் பாதுகாப்புக்குழு, நீலகிரி காவலர் படைப்பிரிவு, தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணித்துறை படை, ஊர்க்காவல் படை ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு, தேசிய மாணவர் படைப்பிரிவுகள், சாலைக்காப்பு சுற்றுக்காவல் படைப்பிரிவுகள், பாரத சாரண சாரணியர் படை ஆகியவை அணிவகுப்பில் இடம் பெற்றன. இந்த அணிகளின் அணிவகுப்பு மரியாதையை மேதகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

இதனையடுத்து, மேதகு ஆளுநர் அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்களையும், மதநல்லிணக்கப் பணிக்கான கோட்டை அமீர் மதநல்லிணக்கப் பதக்கத்தையும், கள்ளச்சாராயத்தை தடுப்பதற்காகப் பணியாற்றிய காவல் துறையினருக்கு மகாத்மா காந்தி காவல்பதக்கத்தையும் வழங்கினார்கள்.

இந்த ஆண்டு ''வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம்–2004–ஐ, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தைச் சேர்ந்த செல்வன் க. வீரமணி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் வகுத்தாழ்வார்பட்டி ப. துரைமுருகன் ஆகியோர் பெற்றனர். இவ்விருது பெற்ற இவர்களுக்கு ரூ.2,000 மதிப்புள்ள அண்ணா வீரப்பதக்கமும், ரூ.10 ஆயிரத்துக்கான காசோலையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்வாண்டு, மதநல்லிணக்கத்திற்காக அரிய சேவை புரிந்துவரும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு.எம்.அகமதுகானை பாராட்டி, ''கோட்டை அமீர் மதநல்லிணக்கப் பதக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். ரூ.2,000மதிப்புள்ள பதக்கமும், ரூ.25 ஆயிரத்துக்கான காசோலையும் சான்றிதழும் இவருக்கு வழங்கப்பட்டது.

இவ்வாண்டு, மகாத்மா காந்தி காவல் பதக்கத்தை கிருஷ்ணகிரி மதுவிலக்கு அமல்




பிரிவு காவல் ஆய்வாளர் திரு.இரா.கருணாகரன், தென்காசி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.கோ.சக்ரவர்த்தி ஆகிய இருவரும் பெற்றனர். இவர்களுக்கு பதக்கமும் ரூ.10 ஆயிரம் ரொக்கத் தொகையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து, பள்ளி, கல்லூரி மாணவ மாணவியரின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில், சென்னை ஜி.ஆர்.டி. மகாலட்சுமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் பாரம்பரிய நடனம், குழந்தைகள் தோட்டம் மகளிர் மேல்நிலைப்பள்ளியின் மூங்கில் நடனம், பாலலோக் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் மீனவர் நடனம், மகரிஷி வித்யாமந்திர் மேல்நிலைப்பள்ளியின் குஜராத்தி – கார்பா மற்றும் தாண்டியா ராஸ், இராணி மேரிக்கல்லூரியின் நாட்டிய நாடகம், மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியின் ஒயிலாட்டம் மற்றும் கும்மி, எத்திராஜ் பெண்கள் கல்லூரியின் கிராமிய நடனம் ஆகியவை இடம் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையம் ஏற்பாடு செய்திருந்த ஆந்திர மாநில கலைக் குழுவினரின் தப்பட்டே குல்லு, கர்நாடக மாநில கலைக்குழுவினரின் கருடி கொம்பே, குஜராத் மாநில கலைக் குழுவினரின் பல்லிஜாக் கார்பா, செய்தி மக்கள் தொடர்புத்துறை ஏற்பாடு செய்திருந்த மதுரை மாவட்ட கலைக் குழுவினர்கள் வழங்கிய கரகம், காவடி, மயில் மற்றும் பொய்க்கால் குதிரை ஆட்டம், நையாண்டி மேளம் , வேலூர் மாவட்ட கலைக்குழுவினரின் கொக்கலிக் கட்டை ஆட்டம் ஆகியவை இடம்பெற்றன.



பின்னர் தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி–மக்கள் தொடர்புத்துறை ஏற்பாட்டில் நாதஸ்வர இசை முழங்க அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடந்தது. இதில் செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், காவல்துறை, வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, தோட்டக்கலைத்துறை, தொழில் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, சுற்றுலாத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, வேளாண்மைத்துறை, மீன்வளத்துறை, சமூக நலத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை ஆகிய துறைகளின் சாதனைகளை விளக்கும் ஊர்திகள் காண்போரை ஈர்க்கும் வண்ணம் அணிவகுத்து அனைவரையும் கவர்ந்தன.

இந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பை மேதகு ஆளுநர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள். கடற்கரை சாலையின் இருமருங்கிலும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் விழா நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து குடியரசுத் திருநாள் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டார்கள்.

❖ ❖ ❖

# பூமி

- ★ *பூமி ஒவ்வொரு நாளும் தன்னைத்தானே ஒரு முறை மணிக்கு 1,500 கி.மீ. வேகத்தில் சுற்றி வருகிறது.*
- ★ *பூமி ஆண்டுக்கு ஒருமுறை 1,07,000 கிலோமீட்டர் வேகத்தில் சூரியனைச் சுற்றி வருகிறது.*
- ★ *சூரிய மண்டலத்தில் பூமி உள்ளிட்ட 9 கோள்களும், நிலவு உள்பட 31 துணைக்கோள்களும், 10 இலட்சம் வால் நட்சத்திரங்களும் உள்ளன.*
- ★ *பூமியிலிருந்து சூரியன் 9,28,68,000 மைல் தூரத்தில் உள்ளது.*

## சீனப் பெருஞ்சுவர்


உலக அதிசயங்களுள் ஒன்றான சீனப் பெருஞ்சுவரை ஷ ஹீவாங்டி என்னும் மன்னர் கட்டினார். இதன் கட்டுமானப்பணி கிறிஸ்து பிறப்பதற்கு 238 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்டது. இதை பல்லாயிரக் கணக்கான பணியாளர்கள் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி கட்டி முடித்தார்கள்.

செங்கல், கற்கள், மணல் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இச்சுவரில் ஒவ்வொரு நூறு கெஜம் இடைவெளியில் உயரமான பாதுகாப்பு கோபுரங்கள் அமைக்கப் பட்டுள்ளது.

இதில் மொத்தம் 20 ஆயிரம் பாதுகாப்பு கோபுரங்கள் உள்ளதாம்.

# நம்மால் சாதிக்க முடியும்! என்னும் நினைப்பே நம்மைக் குன்றின் உச்சியில் ஏற்றி வைக்கும்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்




மகளிர் சிறப்புக் காவல் அணியின், தொடக்க நாளாகிய இந்நாள் தமிழ்நாட்டின் காவல் துறை வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய பொன்னாள்! இந்த இனிய நாளிலே உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்னும் சிறப்பைத் தமிழகம் அடைய நான் எடுத்து வரும் முயற்சிகளை நீங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு துறையிலும் தமிழகம் முதலிடம் பெறுவதற்கான முயற்சிகளில் நாம் படிப்படியாக வெற்றிப் பெற்று வருகிறோம். அந்த வகையிலே இந்தியாவிலேயே சிறப்பு மிக்க காவல் துறையாகத் தமிழ்நாடு காவல் துறை விளங்குவது கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

காவல் துறை பெறுகின்ற சிறப்பு காவல் துறைக்குப் புகழ் சேர்ப்பதோடு நின்று விடாது. அந்தச் சிறப்பு பல்வேறு துறைகளின் சிறப்புகளுக்கும் அடித்தளமாக அமையும் என்பது எனது நம்பிக்கை !

சிறப்பான காவல் துறை செம்மையான பணி ஆற்றும் ! அந்தச் செம்மையான பணியால் உண்மையான அமைதி உண்டாகும் ! அந்த உண்மையான அமைதியில் தான் உறுதியான வளர்ச்சி உண்டாகும் !

எனவே பிற துறைச் சாதனைகள் கூட காவல் துறையின் செம்மையான செயல்பாட்டிலேதான் சாத்தியமாகும் என்பது மறுக்க முடியாத உண்மை !

இன்று தமிழ்நாட்டின் 6¼ கோடி மக்களும் நிம்மதியாக வாழ்கிறார்கள் என்றால் அது ஒரு இலட்சம் காவலர்களை மட்டுமே கொண்ட தமிழகக் காவல் துறையின் உழைப்பினால்தான் என்பதை இதயமுள்ள எவரும் மறுக்க மாட்டார்கள்.

கடந்த 2003–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு அமைதியாகவும் கட்டுப்பாட்டுடனும் இருந்தது என்பதும்; கடந்த ஆண்டில் இனக்கலவரங்களாலோ அல்லது தொழிலாளர் தகராறினாலோ எந்த ஒரு பெரிய அசம்பாவிதமும் நடைபெறவில்லை என்பதும் நாம்



பெருமைப் படத்தக்க உண்மைகளாகும். சில அரசியல் கட்சிகளால் நடத்தப்பட்ட போராட்டங்கள் காவல் துறையின் கட்டுப்பாட்டையோ மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பாதிப்பையோ ஏற்படுத்தாத வண்ணம் தமிழ்நாடு காவல் துறை மிகுந்த எச்சரிக்கையுடனும் கட்டுப்பாட்டுடனும் பணிபுரிந்தது என்பதைப் பெருமிதத்தோடும் மன நிறைவோடும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

காவலர்களின் பணி சிறக்க வேண்டும் என்றால் காவலர் நலன் காக்கப்பட வேண்டும் என்பதில் நான் மிகுந்த கவனத்துடன் இருக்கிறேன். அவர்களுக்காக நல்ல திட்டங்களை எனது அரசு சிந்தித்துச் செயல்படுத்தி வருகிறது.

காவல் துறை திறம்பட செயல்படுவதற்காக **2003–2004**–ஆம் ஆண்டுக்கு மட்டும் **134** கோடியே **61** இலட்சம் ரூபாயைக் காவல் துறையை நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் நான் ஒதுக்கியுள்ளேன் என்பதை பெரும் மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

காலம் காலமாகப் பெண்களை 'மெல்லியலாா்' என்று உலக சமூகங்கள் அழைத்து வந்திருக்கின்றன. உள்ளத்து உறுதியில் அவர்கள் இமயங்களைப் போன்றவர்கள் என்னும் உண்மை உணரப்படவில்லை; உணரப்பட்டாலும் ஒப்புக் கொள்ளப்படவில்லை; ஒப்புக் கொள்ளப்பட்டாலும் உரிய இடம் கொடுக்கப்படவில்லை.

இந்த சமூக அநீதியைச் சகித்துக் கொண்டு வந்த தமிழகப் பெண்களுக்கு உணர்வூட்டி உரிய இடம் அளித்து உயரிய சிறப்பை அவர்கள் பெறுவதற்காக நான் நாளும் உழைத்து வருகிறேன் என்பதற்கு காவல் துறையே தக்கதொரு சான்றாக விளங்குகிறது.

ஆண்களும் பெண்களும் இணைந்து பணிபுரியும் பல துறைகள் இருந்த போதும் காவல் துறையில் இவ்விரு பாலரும் இணைந்து பணி செய்யும் வகையில் தமிழகக் காவல் துறையில் **4,777** பெண் காவலர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டில் மட்டும் **1,599** பெண் காவலர்கள் சிறப்புக் காவல் படையில் இணைக்கப்பட்டுள்ளனர். பெண்களின் நலன் கருதி அவர்களுடைய குறைகளைக் கனிவுடன் கேட்டு மனித நேயத்துடன் செயல்படும் நோக்கில் முற்றிலும் மகளிரைக் கொண்டே நடத்தப்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை நான் முதன் முதலாக அறிவித்துச் செயல்படுத்திய போது அண்டை மாநிலங்கள் மட்டும் அன்றி அண்டை நாடுகளும் அதைப் பின்பற்றியதை நீங்கள் அறிவீர்கள். பெண்களின் குறைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திட இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் துவக்கப்பட்டன. இன்று தமிழகத்தில் **148** அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவது இத்திட்டத்தின் மிகப் பெரிய வெற்றிக்குச் சான்றாகும்.

காவலர்களின் நியமனத்திலும் கூட இந்த அரசு மகளிருக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ் நாடு காவல் துறைக்கு என விரைவில் **2,308** பெண் காவலர்கள் நியமிக்கப்பட உள்ளனர். மேலும் அனைத்துக் காவல் நிலையங்களிலும் பெண் சார்

ஆய்வாளர் இருத்தல் வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு 961 பெண் சார் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர் என்பதையும்; கருணை அடிப்படையில் 49 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அணியைச் சார்ந்த வீராங்கனைகளும் மற்ற சிறப்புக் காவல் அணிகளைப் போலவே சட்டம் – ஒழுங்குப் பிரச்சினைகள், மற்றும் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமகிழ்வுடன் கூறிக் கொள்கிறேன். "ஆண்களோடு



ஆண்களுடன் பெண்களும் இணைந்து ஒரே துறையில் பணிபுரியும் போது அவர்கள் இடையே எந்தவித ஏற்றத் தாழ்வு மனப்பான்மையும் இருந்திடக் கூடாது பெண்கள் எல்லா வகையிலும் ஆண்களோடு சரி சமமாகக் கருதப்பட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் அனைவரது மனதிலும் பதிய வேண்டும் என்பதற்காகப் பாலின நிகர் நிலைப் பயிற்சி அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன். தமிழகக் காவல் துறையில் இயக்குநர் முதல் காவலர் வரை அனைவருக்கும் இந்தப் பாலின நிகர்நிலைப் பயிற்சி அளிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்கள் ஆண்களுக்குச் சமமாக மட்டுமல்ல வாய்ப்புக் கிடைத்தால் ஆண்களை விடச் சிறப்பாகவும் பணி ஆற்ற வல்லவர்கள். கடந்த ஆண்டு என்னால் தொடங்கப்பட்ட பெண் கமாண்டோக்கள் பிரிவே இதற்குச் சரியான எடுத்துக் காட்டு.

இன்று இன்னும் ஒரு படி மேலே சென்று காவல் துறையின் முதல் மகளிர் சிறப்புக் காவல் அணியைத் தொடங்கி வைக்கிறேன்.

பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே" என்று பாடிய பாட்டுக்கொரு புலவன் பாரதியின் கனவு இன்று இங்கு நனவாகிறது என்றால் அது மிகையாகாது.

முறத்தால் புலியை விரட்டி அடித்த புறநானூற்றுத் தமிழ் பெண்ணின் வீரத்தை இன்று நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துவதாக இந்தப் பெண் காவலர்களின் அணி வகுப்பு நடந்தேறியுள்ளது. எத்தனை இன்னல்கள் எதிர்நோக்கினும் அவற்றை வீழ்த்தி இன்று போல் என்றும் நம் தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்கும் காவல் துறை பணிகளில் எங்களுக்கும் பெரும் பங்கு உண்டு என்று கட்டியம் கூறி நிற்கின்றார்கள் இந்தப் பெண் காவலர்கள். இந்தச் சிறப்பு அணி வகுப்பு மிகவும் சிறப்பாக அமைந்திட அனைத்து முயற்சிகளும் மேற்கொண்ட அனைத்து அதிகாரிகளையும் இத்தருணத்தில் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

நான் கடந்த வருடம் தொடங்கி வைத்த பெண் கமாண்டோ பிரிவும் இந்த அணியிலே ஒரு அங்கம் என்று நினைக்கும் போது என் உள்ளம் பூரிக்கிறது. வேறு எந்த அணிக்கும் இல்லாத ஒரு சிறப்பு இந்த அணிக்கு உண்டு. இந்த அணியின் அனைத்து வீராங்கனை



களுக்கும் குதிரையேற்றம் அதிநவீன துப்பாக்கிகள் கையாளும் முறைகள் மலையேற்றம் ஆகியவைகளை உள்ளடக்கிய கமாண்டோ பயிற்சி அளிக்கப்படும் என்பது இந்த அணிக்கு ஒரு தனிச் சிறப்பு ஆகும். இதன் தொடர்ச்சியாகத் தான் இரண்டாம் கட்ட கமாண்டோ பயிற்சி இந்த அணியைச் சேர்ந்த 100 வீராங்கனைகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகிறது என்பதை இங்கு நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அணிக்கு Colours என்று சொல்லப்படும் அணிக் கொடியினை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

பட்டொளி வீசிப் பறக்கும் இந்தக் கொடி உயரப் பறந்து உங்கள் வீரத்தை எட்டுத் திக்கும் எடுத்துச் சொல்லட்டும்!

வளை ஏந்திய கைகள்,

வாளேந்தட்டும் !

தொட்டில் ஆட்டும் கைகள்,

எந்திரத் துப்பாக்கிகளை ஏந்தட்டும் !

வளைக் கரத்தின் வலிமையை இந்த வையகம் புரிந்து கொள்ளட்டும் !

இந்த நேரத்தில் சிறிய கதை ஒன்றை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

இரண்டு மனிதர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரிடமும் பாதி தண்ணீரால் நிரப்பப்பட்ட ஒரு கிண்ணம் இருந்தது.

ஒரு கிண்ணத்தை வைத்திருந்தவன் அழுது கொண்டிருந்தான். 'ஏன் அழுகிறாய் ?' என்று கேட்டார் கடவுள். 'நீ இரக்கம் இல்லாதவன்; கொடுமைக்காரன்; என் கிண்ணத்தைப் பாதி காலியாக விட்டு விட்டாயே' என்று திட்டினான் முதல் மனிதன்.

இரண்டாவது கிண்ணத்தை வைத்திருந்தவன் மகிழ்ச்சியோடு சிரித்துக் கொண்டிருந்தான். 'ஏன் சிரிக்கிறாய் ?' என்று கடவுள் கேட்டார்.

'நீ கருணை உள்ளவன்; என் கிண்ணத்தில் பாதியளவு ஆவது தண்ணீரால் நிரப்பியுள்ளாயே; அதனால் மகிழ்ச்சியால் சிரிக்கிறேன்' என்று சொல்லி நன்றி தெரிவித்தான் இரண்டாம் மனிதன்.

இரண்டு கிண்ணங்களின் நிலையும் ஒன்று தான். ஆனால் அவற்றை வைத்திருந்தவர்களின் நினைப்பு ஒன்றாக இல்லையே ! என்ன காரணம் ?

நிலை வேறாக இருந்தால் நினைப்பு வேறாக இருக்கலாம் – அது சரி ! இங்கு இருவரிடமும் உள்ள பொருட்களின் நிலை ஒன்றாக இருந்தும் இருவரின் நினைப்பும் வேறாக இருக்கிறதே என்ன காரணம் ?

மனம் தான் காரணம் ! குறையுடையவர் என்னும் நினைப்பே ஒருவரைக் குன்றச் செய்து விடும்.

'நமக்கென்ன குறை ? நம்மால் சாதிக்க முடியும் !' என்னும் நினைப்பே நம்மைக் குன்றின் உச்சியில் ஏற்றி வைக்கும்.

தன்னிடம் உள்ளது போதாது இன்னும் எதையாவது நிரப்பினால் தான் முழுமை அடைய முடியும்; அதனால்

தான் தனக்கு வலிமை கிடைக்கும் என நினைத்தான் முதல் மனிதன்.

தன்னிடம் உள்ளதே போதும்; தனக்கு அதனால் குறைவில்லை என்று நினைத்தான் இரண்டாம் மனிதன்.

நீங்கள் குறையுள்ளவர்கள் என்று நினைத்தால் குறையுள்ளவர்கள் தான் ! நீங்கள் நிறைவானவர்கள் என்று நினைத்தால் நிறைவானவர்கள் தான் !

இந்த மகளிர் சிறப்புக் காவல் அணியில் உள்ள அனைத்து வீராங்கனைகளுக்கும் நான் ஒன்றை எடுத்துக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். உள்ளத்தின் உறுதி, உடல் வலிமை, சிந்தனைத் தெளிவு — இந்த மூன்றையும் நீங்கள் உங்களுடையதாக்கிக் கொண்டால் இந்த உலகம் உங்கள் முன் கை கட்டி ஊழியம் செய்யும். எனவே நீங்கள் உங்கள் பணியில் துணிவோடும் அதே நேரத்தில் மக்களிடம் கனிவோடும் செயல்பட வேண்டும் என்று உங்களை இந்த மகத்தான வேளையில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மகளிர் அணியினைத் துவக்கி வைக்கும் இந்த இனிய நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு காவல் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டப்பட்ட 1,033 குடியிருப்புகள், 39 காவல் நிலையங்கள், 4 நாய்க் கொட்டில்கள், 1 தகவல் தொடர்பு வளாகம், 1 ஒய்வு இல்லம் மற்றும் 5 ஒய்வு அறைகள் ஆகிய 1,083 கட்டடப் பணிகளை நான் இந்த இனிய நேரத்தில் திறந்து வைப்பதில் பெருமைப் படுகிறேன். மேலும் 1,091 குடியிருப்புகள், 16 ஒய்வு அறைகள், தடய அறிவியல் துறையின் ஒரு வட்டார அலுவலகம் ஆகிய 1,108 கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

கட்டடங்கள் எண்ணிக்கையில் மட்டுமன்றி தரத்திலும் மிகவும் சிறப்பானதாய் அமைந்தபடியால் ISO 9001 – 2000 சான்றிதழ் காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கு வழங்கப்பட்டிருப்பது தமிழக அரசிற்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது. இதற்குக் காரணமான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத் தலைவர் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாறி வரும் உலகின் வேகத்துக்கு ஏற்ப காவல் துறை விரைந்து செயல்பட வேண்டியது அவசியம். அதற்குக் கணினி கட்டாயம் தேவை. எனவே எளிதில் எடுத்துச் செல்லும் வகையில் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு 67 மடியமர் கணினிகளை அதாவது Laptop Computer–களை வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். அவற்றுள் 15 மடியமர் கணினிகளை இந்த விழாவில் வழங்குகிறேன்.

வெற்றிகரமான இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கும் காவல் துறைத் தலைமை இயக்குநர் உட்பட அனைத்துக் காவலர்களுக்கும் எனது பாராட்டுதல்கள்.

வெல்லப் பிறந்தது பெண்மை !
இதை உணர்ந்தால் யாவர்க்கும் நன்மை !
என்ற முழக்கத்துடன்,
அண்ணா நாமம் வாழ்க !
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க !
எனக் கூறி, விடை பெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

– தமிழ்நாடு காவல் துறையின் முதல்
மகளிர் சிறப்புக் காவல் அணித் தொடக்க விழா,
காவல் துறை அலுவலகங்கள்,
குடியிருப்புகள் தொடக்க விழா மற்றும் புதிய
கட்டடங்கள் அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு
தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா**
அவர்கள் ஆற்றிய உரை – 30.1.2004

❖ ❖ ❖


## ஆயிரம் கதவு அரண்மனை

**கொல்கத்தாவிலிருந்து 219 கி.மீ. தொலைவில் உள்ளது மூர்ஷிதாபாத் என்னும் நகரம். இங்குள்ள "ஹசார் துவாரி" என்னும் ஆயிரம் கதவு அரண்மனை வரலாற்றுப் புகழ் கொண்டதாகும்.**

**450 அடி நீளம், 200 அடி அகலம், 40 அடி உயரம் கொண்ட இந்த பிரம்மாண்டமான அரண்மனையை 1837 ஆம் ஆண்டு ஹீமாயூன்ஜான் என்பவர் கட்டினார்.**

**இது ஆயிரம் கதவு அரண்மனை என்று அழைக்கப்பட்டாலும், உண்மையில் இதில் 1,200 கதவுகள் உள்ளனவாம். இவற்றில் 200 கதவுகள் போலிக் கதவுகளாம். 41 பெரிய கூடங்கள், ஏராளமான அறைகள் கொண்ட இந்த அரண்மனையில் ஐநூறுக்கும் அதிகமான வண்ண ஓவியங்கள் உள்ளன. சலவைக் கல்லால் ஆன ஒரு அரியணையும், 300 ஆண்டு பழமையான ஒரு அரியணையும் இங்கு இருக்கின்றன.**

## மகாத்மா காந்தியடிகள் நினைவுநாள்



மகாத்மா காந்தியடிகளின் 57ஆவது நினைவுநாளையொட்டி 30.1.2004 அன்று சென்னை காமராஜர் சாலையில் (மெரினா கடற்கரை) அமைந்துள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. பெ. ஸ்ரீ. ராம மோகன்ராவ் அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவைத்தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

## புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பிறந்தநாள்



பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் 87ஆவது பிறந்தநாளையொட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சென்னையில் அமைந்துள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலைக்கு 17.1.2004 அன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.


## நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாள்



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 108ஆவது பிறந்தநாளையொட்டி 23.1.2004 அன்று சென்னை காமராஜர் சாலையில் (மெரினா கடற்கரை) அமைந்துள்ள நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து சிறப்புச் செய்தனர்.



# தமிழக அரசின் சார்பில்
# திருவள்ளுவர் திருநாள் விழா



"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' எனப் பாடினார் பாட்டுக்கொரு புலவர் பாரதியார். 'திருவள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் இந்த வையகமே' எனப் புகழ்ந்துரைத்தார் பாவேந்தர் பாரதிதாசன். திருக்குறளின் சீர்மையைச் சிறப்பித்துரைத்த நாமக்கல் கவிஞரோ பின்வருமாறு புகழ்ந்துரைத்தார். "உலகத்தின் தலைசிறந்த இலக்கியங்களுள் நம்முடைய திருக்குறள் காலம், இடம், நிறம், மதம் என்ற வேறுபாடுகளைக் கடந்து எங்கெங்கும் உள்ள எல்லா மனிதருக்கும் எக்காலத்திலும் பயன்தரக்கூடிய அறிவுரை நிரம்பிய அறநூல்" என்பது அவர்தம் புகழ்ந்துரை. பேரறிஞர் அண்ணா அவர்கள், "வள்ளுவர் தந்த திருக்குறள் தமிழர்க்கு மட்டுமல்லாமல் பண்புடன் வாழ விரும்பும் அனைவருக்கும் ஓர் வழிகாட்டியாக அமைந்திருக்கிறது'' என எடுத்துரைத்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், "வாழ்வாங்கு வாழட்டும் வள்ளுவர்தம் இணையற்ற பெரும்புகழ்! நின்று நிலைக்கட்டும் வள்ளுவர் வகுத்தளித்த நெறிமுறைகள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதனால் தான் நமது திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது. தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, தமிழ் மக்களின் சீரிய வரலாறு முதலியவற்றை உலகறியும் வண்ணம் செய்து தமிழ் மக்களின் – தமிழ்நாட்டின் – தமிழ்மொழியின் பெருமையை உலக அரங்கில் நிலைநிறுத்தியது திருக்குறள் என்பதில் ஐயம் இல்லை, திருக்குறள் மட்டுமே பல்வேறு இந்திய, உலக மொழிகளில் எண்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் தனிச்சிறப்பு மிக்கதாகத் திகழும் திருக்குறளின் பெருமையை – அதனை இயற்றிய திருவள்ளுவப் பெருந்தகையின் புகழைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் 'திருவள்ளுவர் திருநாள்' விழாவைக் கொண்டாடி வருகிறது. ஆண்டுதோறும் தைத் திங்கள் இரண்டாம் நாள் கொண்டாடப்படும். திருவள்ளுவர் திருநாள் விழா 16–1–2004 அன்று சென்னையில் தமிழ்நாடு அரசால் கொண்டாடப்பட்டது. காலை 9.00 மணிக்கு சென்னை கடற்கரை, காமராசர் சாலையில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் மற்றும்

அரசு அலுவலர்கள் என பலரும் மாலை அணிவித்தனர். மாலை 5.00 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கில் திருவள்ளுவர் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் திரு.சி.பொன்னையன், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.செம்மலை ஆகியோரும், தமிழறிஞர்களும், எழுத்தாளர்களும், பொதுமக்களும், அரசு அலுவலர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## திருவள்ளுவர் விருது

தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் தமிழறிஞர் ஒருவருக்குத் திருவள்ளுவர் விருது வழங்கப்படுகிறது. திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப் படும், அந்த வகையில் 2004ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் மேலாண்மை இயக்குநரும், திருக்குறள் நெறி பரவிடப் பல்வகையிலும் தொடர்ந்து தொண்டாற்றி வருபவருமான திரு.இரா.முத்துக் குமாரசாமி அவர்களுக்கு இவ்விழாவில் வழங்கப்பட்டது. இவ்விருது ஒரு இலட்சம் ரூபாய் பணமும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் தகுதியுரையும் கொண்டதாகும்.

## சிறந்த நூல்களுக்குப் பரிசு

தமிழில் வெளிவரும் நூல்களுள் சிறந்த நூல்களைத் தெரிவுசெய்து, திருவள்ளுவர் திருநாளில் ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறும் ஒவ்வொரு நூலையும் எழுதிய நூலாசிரியருக்கு ரூ.10,000 பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன. பரிசு பெறும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தார் ஒவ்வொருவருக்கும் ரூ.2,000 பரிசும் பாராட்டுச் சான்றிதழ்களும் அளிக்கப்படுகின்றன. அவ்வகையில் 2002ஆம் ஆண்டில் வெளிவந்து பரிசுப் போட்டிக்குக் கலந்துகொண்ட நூல்களுள் 26 தலைப்புகளில் ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு நூல் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டது. இந்த 26 நூல்களை எழுதிய நூலாசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000 பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழும் இந்நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தார் ஒவ்வொரு–வருக்கும் ரூ.2,000 பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழும் திருவள்ளுவர் திருநாள் விழாவில் வழங்கப்பட்டன.

## அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தமிழ் வளர்ச்சித் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஐம்பத்தெட்டு வயது நிறைவடைந்தும் ஆண்டு வருமானம் ரூ.4,800க்கு மேற்படாமலும் உள்ளவர்களுக்கு அவர்கள் ஆற்றியுள்ள தமிழ்ப்பணித் தகுதியினடிப்படையில் இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறத் தெரிவு செய்யப்படுவோர் அவர்களின் வாழ்நாள் முழுவதும் திங்கள்தோறும் 500 ரூபாய் நிதியுதவி பெறுவர். இத்திருவள்ளுவர் திருநாளில் ஐந்து தமிழறிஞர்களுக்கு இந்நிதியுதவி அரசாணைகள் வழங்கப்பட்டன.

மேற்கண்ட வகையில் திருவள்ளுவர் விருதினை வழங்கியும், சிறந்த நூலாசிரியர்களுக்கும், பதிப்பகத் தார்க்கும் பரிசுகள் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கியும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்குநிதியுதவி வழங்கியும் மாண்புமிகு நிதியமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்கள் இவ்விழாவில் சிறப்புரையாற்றினார். விழாவிற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.செம்மலை அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார். விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை செயலாளர் திரு.பு.ஏ.இராமையா, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். விழா நிறைவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன் நன்றி கூறினார்.

## டெல்லி இரும்புத்தூண்

டெல்லியிலுள்ள மொஹ்ராலி என்னும் இடத்தில் குதுப்மினார் அருகில் ஒரு இரும்புத்தூண் உள்ளது. இத்தூண் நான்காம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. 25 அடி உயரமுள்ள இத்தூணின் அடிப்பரப்பு விட்டம் 16 அங்குலம் ஆகும். மேல்நோக்கி செல்லச் செல்ல குறுகிக்கொண்டே சென்று உச்சியின் சுற்றளவு 12 அங்குலமாக முடிகிறது. எவ்வித இணைப்புமில்லாமல் ஒரு வார்ப்பில் செய்யப்பட்டது இத்தூண் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் எடை 6 டன்களுக்கு சற்று அதிகமாகும். 1,500 ஆண்டு களுக்கு மேலாக திறந்த வெளியில் வெயில், மழை, பனி போன்றவற்றால் தாக்குதலுக்குள்ளாகியிருந்தாலும் இதுவரை சிறிய அளவு கூடத் துருப்பிடிக்காமல் இருப்பதுதான் பெரிய விந்தையான செய்தியாகும்.

❖ ❖ ❖

# சாலைகளை இணைப்பது - இதயங்களை இணைப்பதாகும்


மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்




இந்தியாவின் தென்கோடியாம் இந்தக் கன்னியாகுமரியில் இன்று நடைபெறும் மகத்தான விழாவிலே கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வடக்கும் தெற்கும் கிழக்கும் மேற்கும் இணைக்கப்படுகின்ற திருநாள் இது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் முன்மொழியப் பட்டுள்ள வடக்கையும் தெற்கையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி – மதுரை நெடுஞ்சாலைப் பிரிவை நான்கு வழிப் பாதையாக்கும் பணிக்கு பூமி பூஜை நிகழ்த்தி அடிக்கல் நாட்டுகின்ற இந்த மகத்தான நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகிறேன். தரம் வாய்ந்த சாலைகள் இல்லை என்றால் நமது திட்டங்களும் திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகளும் நாம் எதிர்பார்க்கின்ற பலனை நமக்கு அளிக்காது. நல்ல சாலை வசதிகள் என்பது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மேம்படவும் நாட்டின் தேசிய ஒருமைப் பாட்டைக் கட்டிக் காக்கவும் பேருதவி புரிகின்ற மிக இன்றியமையாத அடிப்படைக் கட்டமைப்புகளில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஊரகப் பொருளாதாரத்துக்கு உந்துதல் அளிப்பதுடன் சிறப்பான சாலைத் தொடர்புகளை உருவாக்கித் தருவதன் மூலம் தொழிற்சாலைகள் பெருமளவில் பெருகிடவும் விரைவான வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் புதிய சாலை அமைப்புகள் வகை செய்கின்றன.

தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து ஒரு மாபெரும் வளர்ச்சி வீதத்தை எட்டியுள்ளது என்றால் அது மிகையாகாது. 100 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில் அமைந்துள்ள சாலைகளின் தேசிய சராசரி அளவு 74.9 கிலோ மீட்டர் நீளம் தான். ஆனால், தமிழ்நாட்டில் இந்த அளவு 100 சதுர கிலோ மீட்டருக்கு, 115.8 கிலோ மீட்டர் நீளமாக உள்ளது. இது தேசிய சராசரியை விட 60 சதவிகிதம் அதிகம் என்பதைக் குறிப்பிடுவதில் பெருமிதம் கொள்கிறேன்.




சாலைகளின் அகலம் அதிகமாகி ஒற்றை வழிச்சாலை இரட்டை வழியாக மாறும்போதும் இரட்டை வழிச் சாலையை நான்கு வழிகளாக மாற்றும் போதும் அந்தச் சாலைகளில் பயணம் செய்யும் வாகனங்களை இயக்குவதற்கு ஆகும் செலவு வெகுவாகக் குறைகிறது என்பதை மறந்து விட முடியாது.


ஒற்றை வழிச் சாலையிலிருந்து நடுத்தரச் சாலையாக அகலப்படுத்தும் பணியினால் வாகனங் களை இயக்குவதற்கான செலவில் 7 சதவிகிதம் முதல் 27 சதவிகிதம் வரை எரிபொருள் சேமிப்பு ஏற்படுகிறது. நடுத்தரச் சாலைகளை இரட்டை வழிச் சாலைகளாக அகலப்படுத்தும்போது 19 சதவிகிதம் வரை எரிபொருள் சேமிப்பு ஏற்படுகிறது. ஒற்றை வழிச் சாலைகளை, இரட்டை வழிச் சாலைகளாக அகலப்படுத்தும்போது 14 முதல் 40 சதவிகிதம் வரை எரிபொருள் சேமிக்கப்படுகிறது.

சில முக்கியமான சாலைகளை – தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளாக அறிவிப்பது, தேசிய நெடுஞ்சாலை யோடு இணையும் குறுகலான சாலைகளைத் தவிர்ப்பது, ஆக்கிரமிப்புகளைத் தடுத்தல் மற்றும் அகற்றுவது, நெடுஞ்சாலைகளைப் புதிதாக அமைப்பது, பராமரிப்பது மற்றும் மேம்படுத்துவது ஆகிய இவற்றோடு தொடர்புடைய பல பணிகளைச் செயல்படுத்துவதற்காக புதிய தமிழ்நாடு நெடுஞ் சாலைகள் சட்டம் எனது தலைமையிலான அரசால் இயற்றப்பட்டு, அது 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் அமலுக்கு வந்துள்ளது.

மக்கள் தொகை ஆயிரத்துக்கும் மேலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் எல்லாக் காலங்களுக்கும் பொருத்தமான இணைப்புச் சாலை வசதி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2004 ஆம் ஆண்டு முடிவதற்குள் மக்கள் தொகை 500–க்கும் மேலுள்ள அனைத்துக் கிராமங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு முழுமையான எல்லாக் காலங்களுக்கும் பொருத்தமான இணைப்புச் சாலைகளை ஏற்படுத்த எனது அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த இலக்கினை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் எனது அரசு எடுத்து வருகிறது.

**உலக வங்கியின் நிதி உதவியுடன் 2,160 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் உள்ள முக்கியச் சாலைகளை மேம்படுத்த எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 750 கி.மீ. சாலைகளை மேம்படுத்தவும், 2,000 கி.மீ. நீளமுள்ள மாநில மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளைப் பராமரிப்பதற்கும் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 14 புறவழிச் சாலைகள் அமைக்கவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.**

எனது அரசு பொறுப்பேற்றபோது இதற்கு முன் எப்போதும் இருந்திராத கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும் மாநிலத்தில் பெரிய மற்றும் சிறிய பாலங்கள் மற்றும் சாலைகள் அமைப்பதற்காக 2,518 கோடி ரூபாயை நான் ஒதுக்கீடு செய்திருக்கிறேன். மேலும், வழக்கமான வருடாந்திர நிதிநிலை ஒதுக்கீட்டிற்கு மேல் சாலை மேம்பாட்டிற்காக சிறப்புத் திட்டப் பணிகளும் சமீப காலத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த அரசு, கிராமப்புறத்தில் போக்கு வரத்து வசதிகளை அதிகப்படுத்துவதற்காக 6,492 கிலோ மீட்டர் நீளத்திற்கு இதர மாவட்டச் சாலைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளது. அது போல, மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளை மேம்படுத்துவதற்காக 221 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு எனது அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த வேலைகள் அனைத்தும் இந்த ஆண்டு மே மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.



கடந்த இரண்டு மாதத்தில் 122 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 715 கிலோ மீட்டர் நீளமுள்ள 275 கிராமச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், அண்மையில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருக்கும் 7,389 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராமச் சாலைகளை 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்த, நான் ஆணையிட்டுள்ளேன் என்பதையும் இந்த வேளையில் பெரு மகிழ்வோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொலைநோக்குப் பார்வை கொண்ட, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களின் தலைமையின் கீழ், இந்திய அரசு, பல வளர்ச்சிப் பணிகளை ஆற்றி வருகிறது. நான்கு பெருநகரங்களையும் இணைக்கின்ற, தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும், 'தங்க நாற்கர சாலைத் திட்டம், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான, வடக்கு தெற்குப் பகுதியையும்; போர்பந்தர் முதல் சில்சார் வரையிலான மேற்கு கிழக்குப் பகுதியையும் இணைக்கும், தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்க திட்டங்கள் ஆகும். இந்தத் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள 1,699 கி.மீ நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப் படுவதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். என்னுடைய அரசு, இந்தத் திட்டத்தினை விரைவாகவும் வெற்றிகரமாகவும் செயல்படுத்து வதற்கான அனைத்து உதவிகளையும் அளிக்கும் என்று நான் உறுதிகூறுகிறேன்.

இந்தச் சூழ்நிலையில், தமிழகத்திலுள்ள 61,125 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் தேசிய நெடுஞ் சாலையின் நீளம், 3,850 கி. மீ. தான். எனது அரசு

## மாண்புமிகு முதலமைச்சருக்கு இந்தியப் பிரதமர் பாராட்டு

**"தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து வருகிறார்.**

**அவரது செயல்திறமையான தலைமையின்கீழ் சமூகப் பொருளாதாரத் திட்டங்கள் தமிழகத்தில் மிகச்சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன."**

- விழாவில்
மாண்புமிகு இந்தியப் பிரதமர்
திரு. **அடல் பிகாரி வாஜ்பாய்** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து...

1,091 கி.மீ. நீளமுள்ள, போக்குவரத்து அதிகமுள்ள 8 சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றுவதற்கான கருத்துருக்களை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளது. இதற்கு இந்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக மக்களின் நீண்டநாள் கனவு சேது சமுத்திரத் திட்டம். இந்தத் திட்டம், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியையும் தேசத்தின் பொருளாதார வளர்ச்சியையும் துரிதப்படுத்தும் என்பதால் இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை விரைவாக வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு, நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை இந்த வேளையில் கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகளை இணைப்பது, இதயங்களை இணைப்பதாகும்.

எனவே, உண்மையான தேசிய ஒருமைப் பாட்டுக்கு உறுதுணையாகச் சாலைகளை இணைப்போம்!

அதன் மூலம் புதிய சாதனைச் சகாப்தம் படைப்போம்!

கன்னியாகுமரியையும் காஷ்மீரையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி – மதுரை நெடுஞ்சாலைப் பிரிவை நான்கு வழிப் பாதையாக்கும் பணிக்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி விழாவைச் சிறப்பித்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களுக்கு எனது இதயங் கனிந்த நன்றியை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவின் வெற்றிக்குப் பாடுபட்ட ஒவ்வொருவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, மீண்டும் ஒரு முறை மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களுக்கு இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் கன்னியாகுமரியிலிருந்து தொடங்கியதற்காக தமிழக மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க !

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க !


என கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
2–2–2004 அன்று
கன்னியாகுமரியில் நடைபெற்ற
தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்
கன்னியாகுமரி – காஷ்மீரை இணைக்கும்
நான்கு வழிச்சாலைக்கான அடிக்கல்
நாட்டுவிழாவில் ஆற்றிய உரை.

# மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்கு சமுதாய வானொலி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**




"இந்தியாவிலேயே முதல் முறையாக சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சமுதாய வானொலி ஒலிபரப்பு தொடக்க விழாவில் இந்திய துணைப்பிரதமர் எல்.கே.அத்வானியுடன் இந்த மேடையில் பங்கேற்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

பல்கலைக்கழகத்திற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க பல்வேறு மெச்சத்தக்க சாதனைகளை தன்னகத்தே கொண்டுள்ளது அண்ணா பல்கலைக்கழகம். இந்தியாவிலேயே முதன் முறையாக அண்ணா பல்கலைக்கழகம்தான் இது போன்ற சமுதாய வானொலி உரிமத்தை முதன் முதலாகப் பெற்றுள்ளது என்பது மிகவும் முக்கியமான ஓர் அம்சமாகும். இந்த உரிமத்தை வழங்கியதற்காக மத்திய அரசிற்கு மிகுந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக, இந்திய துணைப்பிரதமர் மற்றும் மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் ஆகியோர் சமுதாய வானொலி சேவையைத் தொடங்குவதற்குத் தேவையான உரிமத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கைகளை விரைவுப்படுத்தியதற்காகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த நேரம் தமிழ்நாட்டில் மிகவும் பெருமைப் படக்கூடிய நேரங்களில் ஒன்றாகும். நாங்கள் மக்களின் நல்வாழ்வில் அக்கறையுடன், குறிப்பாக சமூகத்தின் மிகவும் நலிவுற்ற நிலையில் இருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் மிகவும் தைரியமாக, திடமாக பல்வேறு புதிய நடவடிக்கைகளை செயல்படுத்தி வருவதில் முன்னிலையில் உள்ளோம்.

இந்த வானொலி ஒலிபரப்பை வருங் காலத்தில் 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு விரிவுபடுத்தி அதன் மூலம் கல்வி, உடல்நலம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுப்புறச் சூழல் மற்றும் சமூக மேம்பாட்டுக்குப் பயன்படுத்த உள்ளதாக அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் பாலகுருசாமி என்னிடம் தெரிவித்தார்.

தகவல்களை மக்களிடையே பரப்ப உதவி செய்வதுடன் பல்வேறு துறைகளில் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கும் மக்களை ஆயத்தம் செய்வதற்கும் காரணமான ஓர் அமைப்பாகவும் செயல்படும். கிராமப்புறங்களில் வாழும் மக்களின் சமூக வளர்ச்சியில் வானொலி உண்மையிலேயே முக்கிய பங்காற்றி வருகிறது என்பது எதார்த்தமான உண்மை.




இந்த சமுதாய வானொலி ஒலிபரப்பு குறைந்தபட்ச வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையில் உள்ள மாணவர்களின் வளர்ச்சிக்கு ஆசிரியராக செயல்பட்டு, இதனுடைய முழுப் பயன்களும் சென்றடையும் வகையில் அண்ணா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திக் கொள்வார்கள்.

மேலும் அண்ணா பல்கலைக்கழகத்தின் எலக்ட்ரானிக் மீடியா பயிற்சி பெறும் மாணவ, மாணவிகள் தங்கள் துறைகளில் ஆய்வு முயற்சிகளுக்கு இந்த வானொலி ஒலிபரப்பு நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சமுதாய வானொலி நிலையம் பல்வேறு துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்த

வளர்ச்சிப்பாதையின் கடைக்கோடியிலுள்ள சமுதாயத்தினரையும் எளிதில் வானொலி சென்றடைகிறது. மேலும் வானொலி, படிக்க, எழுதத் தெரியாத மக்களையும் எளிதில் சென்றடைகிறது. மக்கள்தொகை மற்றும் உயரிய வாழ்க்கை நிலை என்ற தனிக்குழு வானொலி எந்த அளவிற்கு மக்களைச் சென்றடைகின்றது என்பதை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கல்வியறிவின்மையின் முழு விளைவு என்ன என்பதைக் கல்வியறிவு பெற்றவர்கள் கூட உணர்ந்து கொள்ள இயலாத நிலையில் உள்ளனர்.

தற்போது இந்த உலகில் இயங்கி வரும் எழுதப்பட்ட சட்டங்கள், நெறிமுறைகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவற்றை படிப்பறிவில்லா தவர்கள் உண்மையிலேயே தெரிந்து கொள்ள இயலாதது அவர்களுடைய வளர்ச்சிக்கு மிகவும்

தடையாக உள்ளது. இது அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளது. மேலும் கல்வியறிவின்மையின் விளைவால் மக்களுக்கு மிகவும் இழிந்த நிலை மற்றும் மிகவும் குறைவான ஊதியம் கிடைக்கும் வேலைவாய்ப்புகளே கிடைக்கப்பெறுகின்றன.

கல்வியறிவின்மையின் மற்றொரு விளைவாக வேளாண் விதைப் பொருள் பைகளில் உள்ள தகவல்களைப் படிக்க முடியாமலும் பால் பவுடர் டின்களில் உள்ள தகவல்கள் குறித்து அறிய முடியாமலும் கருத்தடை மாத்திரைகளின் பயன்பாடுகள் பற்றி அறிந்து கொள்ள இயலாத நிலையில் மக்கள் உள்ளனர். மேலும் அவர்களால் செய்தித்தாள்கள், சாலைக் குறியீடுகள் மற்றும் எச்சரிக்கை குறியீடுகள் ஆகியவற்றையும் படித்து அறிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றனர். மேலும் தங்களுக்குரிய சட்ட உரிமைகள் குறித்தும் கூட புரிந்து கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். மேற்கண்டவற்றின் விளைவால் அவர்கள் சுரண்டப்படுவதும், ஏமாற்றப்படுவதும் நடைமுறையில் உள்ளது.

வறுமை நிலையிலுள்ள ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கு சமுதாய வானொலி சேவை என்ற வகையில் இது மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தகவல் தொழில்நுட்ப பரிமாற்றத்தின் வளர்ச்சி மற்றும் அதன் சக்தி என்ன என்பதைக் கண்கூடாக பார்த்துள்ளேன். இது கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் பல்வேறு வளர்ச்சிகளையும், மாற்றங்களையும் உருவாக்கியுள்ளது.

மதுரை மாவட்டம் மேலூர் தாலுகாவிலுள்ள உலகுப்பிச்சான்பட்டி என்ற கிராமத்தில் பாதிக்கப்பட்ட காய்கறியின் மாதிரியை வெப் (Web) புகைப்படக் கருவியின் மூலம் அவ்வூரிலுள்ள மையத்தின் (Kiosk) ராசி இணையதளத்தின் உதவியுடன் ஓர் இளம்பெண் மதுரையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இதனை ஆராய்ச்சி செய்த மதுரை வேளாண்மைப் பல்கலைக்கழகம் அந்த நோய் தாக்கியதற்கு அறிவியல்பூர்வமான தீர்வு ஒன்றை அனுப்பியதன் மூலம் சுமார் ரூ.1.5 இலட்சம் மதிப்புள்ள காய்கறிகளில் நோய் தாக்குதல் பரவாமல் தடுக்கப்பட்டுள்ளது. இது உண்மையிலேயே தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் கிராமப்புறங்களிலுள்ள பெண்களின் வளர்ச்சிக்கும் ஒரு மிகச்சிறந்த உதாரணமாகும்.

## மாண்புமிகு முதலமைச்சருக்கு துணைப்பிரதமர் பாராட்டு

**"அண்ணாவின் பாதையைப் பின்பற்றுபவராக இன்றைக்கு ஜெயலலிதா திகழ்கிறார். அண்ணாவுக்குப் பிறகு சமூகப் பொருளாதார வளர்ச்சியில், தமிழகத்தை அதன் உச்சிக்கு எடுத்துச்செல்லும் உன்னதத் தலைவராக ஜெயலலிதாவை தமிழகம் பெற்றிருக்கிறது."**

- விழாவில்
மாண்புமிகு இந்திய துணைப்பிரதமர்
திரு. **எல்.கே. அத்வானி** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து...

தமிழ்நாட்டில் என்னுடைய தலைமையிலான அரசு, மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுயஉதவிக்குழுக்கள் திட்டம் தற்போது மேலும் வளர்ச்சி அடைந்து ஒரு மிகப்பெரிய இயக்கமாக தமிழ்நாட்டில் இயங்கி வருகிறது. தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்களில் சுமார் 25 இலட்சம் பெண்கள் 1.52 இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கீழ் உறுப்பினர்களாக உள்ளனர்.




இவர்கள் சேமிப்பின் தொகை ரூ.393.64 கோடியாகும்.

தற்போது அதிக அளவில் இந்த மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு இணைய தளத்தைப் பயன்படுத்தும் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒன்று சேர்ந்து கூட்டமைப்புகளை உருவாக்கி வருகின்றன. இந்த கூட்டமைப்புகளை ஒருங்கிணைப்பதை சமுதாய வானொலி நிலையங்கள் செய்ய முடியும். இதன் மூலம் சந்தை அறிவு மற்றும் சமூக வளர்ச்சியில் மக்களை ஒருங்கிணைத்து ஒத்த கருத்தை உருவாக்குவது ஆகியவை குறித்து அறிய சமுதாய வானொலி நிலையங்கள் உதவும். மேலும் இதே போன்று மீனவர்கள், நீர் உபயோகிப்பாளர் சங்கங்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் ஆகியவற்றைக்கூட இணைப்பதில் சமுதாய வானொலி நிலையங்கள் ஈடுபடலாம். மேலும் இது போன்று சமுதாய வானொலி நிலையங்கள் எண்ணற்ற துறைகளில் செயல்படுவதற்கான ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. வழக்குச் சொற்கள் சமுதாய வானொலி நிலையங்களின் மூலம் ஒலிபரப்பப்படுவதை விட இரு தரப்பிலும் கலந்துரையாடும் வகையான நிகழ்ச்சிகள் வருமானால் அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மிகவும் அதிகப்படியான பலன்களைப் பெறுவதற்கு விரைவான செயல்பாடுகளில் இறங்குவதுடன் இணையதளத்தையும் வானொலியையும் இணைத்து செயல்பட வைப்பதன் மூலம் எதிர்பார்த்த பலனை விரைந்து அடைய முடியும். தகவல்களை இணைய தளத்தின் மூலம் பெறுவதுடன், இணையதள தொடர்பு கொண்ட சமுதாய வானொலிகளை ஏற்படுத்துவதன் மூலம் பன்முகப் பலன்களைப் பெறுவதற்கு இயலும்.

மக்கள் நீதிபதிகளாக இருந்து நம்மை எடைபோடுவது நம்முடைய தரமான மற்றும் சிறந்த நிருவாகத்தைப் பொறுத்துத்தான். சிறந்த அரசு என்பது மக்களோடு நெருங்கி இருக்கும். குறிப்பாக கிராமப்புற மக்களோடு இணைந்து இருக்கும். சமுதாய வானொலி நிலையங்கள் அரசுக்கும் மக்களுக்குமிடையே உறவுகளை ஏற்படுத்தித் தருவதில் முக்கியப் பங்காற்றிட முடியும். சிறந்த நிருவாகத்தை அளிப்பதற்கேற்ற வகையில் பொது இணையதள பயன்பாட்டு வசதிகளை அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் வகையில் வலுவான சமுதாய வானொலி இணைப்பை மாநில அரசுகள் உருவாக்கிட மத்திய அரசு நிதியுதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நாட்டிலேயே முதன் முறையாக தலைசிறந்த தொழில்நுட்ப வசதிகள் கொண்ட சமுதாய வானொலி நிலையத்தை சென்னையில் அமைப்பதற்கும் அதனை சென்னை மக்களுக்கு அர்ப்பணிப்பதற்கும் வருகை தந்துள்ள இந்திய துணைப் பிரதமர் மற்றும் செய்தி ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் ஆகியோருக்கு எனது நன்றியை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக் கொள்கின்றேன். இது போன்ற ஒரு முன்னோடியான, பிறருக்கு வழிகாட்டும் புதிய முயற்சிகளை மேற்கொண்ட அண்ணா பல்கலைக்கழகத்திற்குப் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.”

(1.2.2004 அன்று நடைபெற்ற சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் இந்தியாவின் முதல் சமுதாய வானொலி ஒலிபரப்புத் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை)



# நாங்கள் மக்கள் பக்கம்! மக்கள் எங்கள் பக்கம்! வெற்றி எங்கள் பக்கம்!

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நான் பதிலுரை வழங்கும்போது இப்படி வெளிநடப்பு செய்வார்கள் என்பது நான் எதிர்பார்த்தது தான். ஆனால், சொல்லிவிட்டுப் போவார்கள் என்று எதிர்பார்த்தேன். சொல்லாமலேயே, சொல்லிக் கொள்ளாமலேயே இப்படி ஓடிப்போவது தான் ஆச்சரியமாக இருக்கிறது.

நேற்றைய தினம் கூட இந்த அவையில் பேசிய எதிர்க்கட்சி துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள், இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசும்போது, இன்றைக்காவது முதலமைச்சர் அவையில் இருந்து எங்கள் கருத்துக்களை எல்லாம் கேட்க வேண்டாமா? இன்று கூட வரவில்லையே, என்றெல்லாம் ஆதங்கப்பட்டுக் கொண்டார்கள். ஒன்றை இந்த நேரத்தில் அவருக்கும், அனைவருக்கும் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். 2001–இல் இந்த ஆட்சி அமைந்த பிறகு, இந்த சட்டப்பேரவை கூடும் போதெல்லாம் ஒரு நாள் கூட தவறாமல் இந்த அவை நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்ட நேரத்திலிருந்து அவை கலையும் வரை நான் தவறாமல் இந்த அவையில் இருந்து, அவையின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று, பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன கேள்விகள் கேட்டாலும் உடனடியாக பதில் அளித்து, என்ன பிரச்சினைகள் எழுப்பினாலும் உடனடியாக அவற்றிற்கு தக்க விளக்கங்களை அளித்து, நான் மிகுந்த ஆர்வத்துடனும், இதய சுத்தியுடனும் இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொண்டிருக்கிறேன். இந்த முறை ஆளுநர் உரை வழங்கிய பிறகு நடைபெற்ற, கடந்த சில நாட்களாக நடைபெற்ற, இந்த கூட்டத் தொடரில்

ஏற்கெனவே ஒப்புதல் அளித்த மிக முக்கியமான அரசு நிகழ்ச்சிகள் இருந்ததால் என்னால் இந்த அவைக்கு தினந்தோறும் வர முடியவில்லை. புதிய மாவட்டத் தொடக்க விழா என்பது மிகவும் முக்கியமான ஒரு அரசு நிகழ்ச்சி. மக்களுக்கு நன்மை பயக்கின்ற ஒரு நிகழ்ச்சி என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். ஆகவே தான் இது ஏற்கெனவே ஒப்புதல் அளித்து ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதால் நான் இந்த அவைக்கு வர முடியவில்லை.

ஆனால், இப்படியெல்லாம் ஆதங்கப்பட்டுக் கொள்ளும், குறைபட்டுக் கொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர்கள் நான் இந்த அவைக்கு வந்து பதில் அளிக்கின்ற நேரத்தில் சொல்லிக்கொள்ளாமலேயே இப்படி ஓடிப் போகிறார்கள். மக்கள் இதை கவனிக்க வேண்டும். நிச்சயமாக மக்கள் கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். 2001–இல் இந்த ஆட்சி அமைந்த பிறகு, இந்த புதிய சட்டப் பேரவை அமைந்த பிறகு, எந்த ஒரு முக்கிய நிகழ்வின் போதும் எதிர்க்கட்சித் தலைவர்களோ, உறுப்பினர்களோ இந்த அவையில் இருந்ததே கிடையாது. அது ஆளுநர் உரையாக இருந்தாலும் சரி, ஆளுநர் உரையின் மீது ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெறுகின்ற விவாதத்திற்கு முதலமைச்சர் பதில் அளிக்கும்போதும் சரி, நிதியமைச்சர் அவர்கள் இந்த அரசின் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்போதும் சரி, எந்த ஒரு முக்கிய நிகழ்வின் போதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த அவையில் இருந்து தாங்கள் ஆற்றவேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றவில்லை. மக்கள் எதற்காக அவர்களைத் தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பினார்களோ அந்தக் கடமையை அவர்கள் புறக்கணித்து விட்டு, மறந்துவிட்டு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும், நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இப்போது விரைவில் சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது. இதற்கெல்லாம் மக்கள் அவர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கடந்த 5.2.2004 முதல் நடைபெற்ற விவாதத்திற்கு தற்போது எனது பதிலுரையை அளிக்க விழைகின்றேன்.

நாம் பிறர்க்கு நல்லவர் ஆகும் போது நமக்கும் நல்லவர் ஆகிறோம் என்பது மிகச் சிறந்த வாழ்வியல் உண்மை ஆகும். ஆனால் தங்களுக்குத் தாங்களே நல்லவர் ஆகாதவர்கள் தமிழகத்தில் உண்டு. ஏனென்றால் அவர்கள் மற்றவர்களுக்கு நல்லவர்கள் இல்லை. தங்களுக்கு வாக்களித்த மக்களின் நலனைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணிப் பாராமல் அந்த மக்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற சில தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அவர்களுக்கும் நல்லவர்கள் இல்லை; அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மக்களுக்கும் அவர்கள் நல்லவர்கள் இல்லை. இது தான் இந்தச் சட்டப் பேரவையைப் பொறுத்த வரையில், இதுவரை நிரூபணமாகி இருக்கின்ற உண்மை.

இவர்களுடைய அர்த்தமற்ற கூச்சல்களும், நியாயமற்ற வெளிநடப்புகளும் நாட்டு மக்களுக்கு சலிப்பையும், வெறுப்பையும் உண்டாக்கி இருக்கின்றன. இவர்களுக்கு ஒரே ஒரு நோக்கம் இருக்கிறது. எனக்கும் ஒரே ஒரு நோக்கம் இருக்கிறது.

என்னுடைய ஒரே நோக்கம் எவ்வாறெல்லாம் தமிழக மக்களுக்கு நன்மை செய்யலாம் என்பது!

அவர்களுடைய ஒரே நோக்கம் எனக்கு எந்த வகையிலும் நல்ல பெயர் வந்துவிடக் கூடாது என்பது! அதற்கு இவர்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்வார்கள். மக்களிடத்தில் தங்கள் செல்வாக்கு குறைவது பற்றி இவர்களுக்கு கவலை இல்லை. மக்கள் தங்களை கேவலமாக நினைப்பார்களே என்பது பற்றிக் கூட இவர்களுக்குக் கவலை இல்லை. நமது குறிக்கோள் முதலமைச்சரை எதிர்ப்பதே என்ற ஒரே முடிவோடு செயல்படுகிறவர்கள் இவர்கள். தி.மு.க. உறுப்பினர்கள் இந்த அவையில் இருந்தாலும் அந்த நோக்கத்தோடு தான் செயல்படுகிறார்கள். அவர்கள் டெல்லியில் இருந்தாலும் இதே நோக்கத்தோடு தான் செயல் படுகிறார்கள். டெல்லியிலே மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த தி.மு.க. மந்திரிமார்கள் ஒவ்வொரு வேளையும் தொல்லை, ஒவ்வொரு நாளும் ஒரு முட்டுக்கட்டை என்று திட்டமிட்டுச் செயல்பட்டு வந்தார்கள் என்பதை இந்த நாடே நன்கு அறியும். ராணிமேரி கல்லூரி வளாகத்தில் தலைமைச் செயலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று ஜெயலலிதா திட்டம் இடுகிறாரா? அதை எப்படித் தடுப்பது? கோட்டூர்புரத்தில் தலைமைச் செயலகத்தை அமைக்க ஜெயலலிதா விரும்புகிறாரா? கூடாது, கூடாது! எப்படியும் அதைத் தடுத்தே ஆக வேண்டும் என்று அவசர அவசரமாகச் சட்டம் தீட்டுவதே இவர்களது சிந்தனையாக இருந்தது! ஏனென்றால் எனக்கு அதனால் நல்ல பெயர் எதுவும் வந்துவிடக் கூடாதாம்.

தமிழகத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் முன்மொழியப்பட்ட பைக்காரா இறுதிநிலை புனல்மின் திட்டத்தை செயல்படுத்த தேவையான சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறையின் தடை நீக்கச் சான்றிதழை வழங்கிட வேண்டும் என்று மைய அரசிற்கு கோரிக்கை மேல் கோரிக்கை விடுத்தும் அது ஏற்கப்படாமல் தாமதிக்கப்பட்டு வந்தது. இது குறித்து நான் கடந்த

ஆண்டு நவம்பர் மாதத்தில் பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றேன். இதனைத் தொடர்ந்து தி.மு.க. மத்திய அமைச்சரவையை விட்டு விலகிய பின் **30.1.2004** அன்று கருத்தளவில் இதற்கான தடையில்லாச் சான்றிதழை மைய அரசு வழங்கியுள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டு மைய அரசில் அங்கம் வகித்து மத்திய அமைச்சர்களாக பதவி வகித்த திமுக–வினர் தமிழ்நாட்டிற்கும், தமிழக மக்களுக்கும் எத்தகைய துரோகம் இழைத்து வந்திருக்கிறார்கள் என்பதை இந்த ஒரு நிகழ்வே தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

மத்திய அரசில் திமுக அங்கம் வகித்த காலம் வரை தமிழ்நாட்டிற்கு நன்மை பயக்கும் இது போன்ற திட்டங்களை நிறைவேற்றிட அவர்கள் உதவிடவில்லை என்பது மட்டுமல்ல; முட்டுக்கட்டைகளாக இருந்து அந்த திட்டங்களை நிறைவேற்றாமல் தடுக்க என்னென்ன செய்ய முடியுமோ அத்தனையும் செய்தார்கள். தமிழகத்தின் நலனுக்கு கருப்புப் புள்ளிகளாக விளங்கிய இவர்கள் மத்திய அரசிலிருந்து விலகிய அடுத்த நொடியிலிருந்து தமிழகத்திற்கு நல்லது நடக்கிறது. தமிழக மக்களுக்கு நன்மை விளைகிறது. என்னுடைய முயற்சியால் இவை யாவும் நிறைவேறுகின்றன என்ற நிதர்சனமான உண்மையை இந்த அவை மூலமாக தமிழக மக்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

காவேரித் தண்ணீர் தமிழகத்திற்கு கிடைத்து விடக் கூடாது என்பதில் கர்நாடகத்தை விட இவர்கள் தீவிரமாக இருந்தார்கள்.

எனக்கும், எனது கட்சிக்கும், நான் தலைமை ஏற்றிருக்கின்ற இந்த அரசுக்கும் எதிராக என்னென்ன செய்யலாம் என்பதைத் தவிர, தங்களைத் தேர்ந்தெடுத்த தமிழக மக்களுக்கு என்ன செய்யலாம் என்பதை அவர்கள் நினைத்துப் பார்த்ததே இல்லை; அதற்கு நேரமும் இல்லை. ஏனென்றால் உள்ள பொழுதெல்லாம் எனக்கு உபத்திரவம் தருவதற்காகவே என்ற உன்னத லட்சியத்தோடு அவர்கள் செயல்பட்டார்கள்.

இன்னொரு கட்சி; அந்தக் கூடாரத்தில் குழப்பத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. 'யாரோடு கூட்டு என்பது படைத்தவனைத் தவிர யாருக்குத் தெரியும் ? யாம் அறியோம் பராபரமே!' என்ற தத்துவ விசாரத்தில் மூழ்கி இருக்கும் கட்சி அது. தனக்கு என்ன நிலைப்பாடு என்று தனக்கே தெரியாத ஒரு தடுமாற்றத்தில் அது எப்போதும் இருக்கும். தேர்தலுக்கு முன் ஓடிப் போகலாமா; இல்லை தேர்தல் முடிந்த பின்பு ஓடிப் போகலாமா என்பதே அதன் கொள்கை கீதமாக இருந்தது. மொத்தத்தில் ஓடிப் போவது என்பதில் மட்டும் அது உறுதியாக இருந்தது. அந்த விஷயத்தில் மட்டும் அது மிகவும் தெளிவாக இருந்தது. நாள் ஒன்றுக்கு **24** மணி நேரமும் குழப்பத்தில் இருக்கும் இவர்களுக்கு அத்தனைக் குழப்பத்திலும் ஓடிப் போவது என்பதில் மட்டும் ஓர் உறுதிப்பாடு இருக்கிறது.

இன்னொரு சாரார் இருக்கிறார்கள். இவர்களுடைய நிலைப்பாடும் செயல்பாடும் ஆச்சரியப் படத்தக்கவை. இவர்களது அரசியல் பல்லவியே இது தான்!

'எவரோடும் கூட்டு!
எங்களுக்குள் வேட்டு!'

இது தான் இவர்களது அரசியல் பால பாடம்!

"கொஞ்சமோ பிரிவினைகள்;
ஒரு கோடி என்றால் அது குறைவாமோ"

என்று பாரதி பாடியது இவர்களைப் பற்றித் தான்.

அந்த நாள் முதல் இந்த நாள் வரை உள்ளூர்த் தலைமை இவர்களுக்கு ஒத்துக் கொள்ளாது.

ஒரு காலத்தில் அந்நியரை விரட்டத் தான் இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கோ

"அந்நியரில்லாமல்
புண்ணியம் இல்லை"

என்பதே இவர்களுக்கு வேத போதமாகவும், நாத கீதமாகவும் ஆகி இருக்கிறது.

இவர்கள் சட்டப் பேரவைக்குள் நுழையும் போதே எப்போது வெளியே போவது என்ற ஒரே சிந்தனையில் இருப்பார்கள். இருக்கும் காலத்தில் என்னை இழித்துப் பேசுவதும், பழித்துப் பேசுவதும் மட்டுமே இவர்களது தேசியப் பணியாக இருக்கும்.

இவர்களுக்கு இன்னும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. இவர்கள் கூட்டணி கொள்கைக் கூட்டணியாகவே இருக்கும். அதாவது தங்களது தலைவரைக் கொன்றவர்களின் கூட்டாளிகளோடு மட்டும் தான் இவர்கள் கூட்டு வைத்துக் கொள்வார்கள். இவர்களை இவர்களது தலைவரின் ஆன்மா தான் மன்னிக்க வேண்டும்!

இன்னொரு பிரிவினர் இருக்கிறார்கள்! உண்மையைச் சொன்னால் ஒரு பிரிவுக்குள்ளேயே இரு பிரிவாக இருப்பவர்கள் இவர்கள்! வலதுக்குள் இடது; இடதுக்குள் வலது; இவற்றில் எது சிறந்தது என்ற பட்டி மன்றம் உலக அளவில் நிறுத்தப்பட்டு விட்டாலும், உள்ளூரில் அதை நடத்திக் கொண்டு இருப்பவர்கள் இவர்கள்! தாங்கள் ஆளுகின்ற மாநிலங்களைப் பொறுத்த வரை ஒரு நிலைப்பாடும், தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு நிலைப்பாடும் என்ற இரண்டு நிலையில் இருப்பவர்கள் இவர்கள்.

எதிர்ப்பு என்பது எதிர்ப்புக்காகவே என்ற சித்தாந்தச் செம்மல்களாகிய இவர்கள், எதற்காக எதிர்க்கிறோம் என்பதைப் பற்றி எப்போதும் கவலைப்பட்டது கிடையாது. துருவங்களோடு கை கோர்த்துக் கொண்டு தங்களது குதர்க்கங்களுக்கு கொள்கை முலாம் பூசிக் கொண்டிருக்கிற கோமான்கள் இவர்கள்!

இவர்கள் எல்லாம் எதில் ஒன்றுபட்டு நிற்காவிட்டாலும், ஒரே ஒரு விஷயத்தைப் பொறுத்த வரை ஒன்றுபட்டு நிற்பார்கள். அதாவது வெளிநடப்பு செய்வது என்ற விஷயத்தில் மட்டும் இவர்களிடத்தில் அபாரமான ஒற்றுமை உண்டு.

'நீ முன்னாலே போ; நான் பின்னாலே வருகிறேன்'

என்று பேசி வைத்துக் கொண்டே பேரவைக்குள் நுழைகின்ற பெருமக்கள் இவர்கள். சட்டசபைக்குள் உட்கார்ந்திருந்து ஆக்கப்பூர்வமான முறையில் விவாதித்தால், முதலமைச்சர் முறையான பதிலைச் சொல்லும் போது நாம் முகத்தை எங்கே வைத்துக் கொள்வது? மேலும் முதலமைச்சர் சரியான பதிலைச் சொல்லி, அது பதிவாகி, வெளியே இருக்கிற மக்களும் அதைத் தெரிந்து கொள்வார்களேயானால் ஒட்டுமொத்த தமிழகமும் முதலமைச்சருக்கு அல்லவா ஆதரவாகப் போகும் என்று பயந்து எந்த வாதமும் செய்யாமல், பிடிவாதமாக வெளிநடப்பு செய்வதே இவர்களுக்குப் பிழைப்பாகப் போய்விட்டது.

ஆளுநர் தமது உரையை வாசிப்பதற்கு முன்னாலேயே, எழுதி வைத்துக் கொண்டு வந்ததை அரைகுறையாகப் படித்துவிட்டு வெளிநடப்பு செய்து விட்ட வீராதி வீரர்கள் இவர்கள். பொது மக்களைப் பற்றி, அவர்களது நலனைப் பற்றி சற்றேனும் கவலை இல்லாத சுயநலப் புலிகள் இவர்கள்!

இவர்கள் இழைத்திருக்கும் இன்னல்களையும், இடர்களையும் தாண்டி நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை துறைவாரியாக நிகழ்த்தப்பட்ட முக்கிய சாதனைகள இப்போது நான் தொகுத்துரைக்க விரும்புகிறேன்.

**அரசு அலுவலர்கள்**

அரசு ஊழியர்கள் பிரச்சனை பற்றி இப்போது சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

**2001** ஆம் ஆண்டு மே மாதம் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது இந்த அரசின் நிதிநிலை, மிகவும் அதல பாதாளத்தில் இருந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். முந்தைய திமுக ஆட்சியின் நிருவாகச் சீர்கேட்டால் ஏழை எளியவர்களைப் பாதிக்கும் வகையில் அரசின் செலவினங்கள், குறிப்பாக, திட்டம் சாராத மற்றும் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் செலவினங்கள் மிகவும் அதிகரித்திருந்தன. இதன் விளைவாக, ஏழை எளிய மக்களுக்குப் பயன் தரும் சில திட்டங்களை, நிறுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு நாங்கள் ஆளாக்கப்பட்டோம்.

**2001–2002** ஆம் ஆண்டில், முந்தைய அரசு கொடுக்காமல் விட்டுச் சென்ற பணப் பாக்கிப் பட்டியல்கள் **4,000** கோடி ரூபாய் அளவிற்கு இருந்தன. தமிழ்நாடு மின்சார வாரியம் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது **2001–2002**ஆம் ஆண்டில், **5,000** கோடி ரூபாய் அளவிற்குப் பற்றாக்குறையை சரி கட்ட இயலாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. கடந்த கால திமுக ஆட்சியின் நிருவாக சீர்கேட்டால், போக்குவரத்துக் கழகங்கள் பெரும் நட்டத்தில் முடங்கிக் கிடந்தன. மேலும் அரசு அலுவலர்களுக்கும், ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களுக்கும், **5**வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை சுமார் **1,800** கோடி ரூபாயை கொடுக்காமல் **31.3.2003** வரை முந்தைய திமுக அரசு தள்ளி வைத்தது. இது மட்டுமின்றி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி மீதான உரிமத் தொகை சுமார் **250** கோடி ரூபாய் அளவிற்கு மார்ச் **2001**–லேயே முந்தைய திமுக அரசு முன் பணமாக பெற்றுவிட்டது. அகில இந்திய அளவில், தமிழ்நாட்டில், மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் அளவு ஏற்கெனவே மிக அதிக அளவை எட்டி இருந்தது. கூடுதல் வரி வருவாய் ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகள் அதிகம் இல்லாத நிலை இருந்தது. செலவினங்களைக் கட்டுப்படுத்துவதைத் தவிர வேறு வழி இல்லாத ஒரு இக்கட்டான நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டது.

இந்நிலையில் வேறு வழியின்றி மிகவும் மன வேதனையுடன், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியில் **10** கிலோவிற்கான விலையை அதிகப்படுத்துவதற்கும், இலவச வேட்டி சேலை திட்டத்தை நிறுத்தி வைப்பதற்கும், முடிவெடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை கடந்த கால திமுக ஆட்சியால் உருவாக்கப்பட்டது. இத்தகைய, முந்தைய திமுக ஆட்சியால் உருவாக்கப்பட்ட ஒரு நிதி இடர்பாட்டை பொது மக்களே பகிர்ந்துகொள்ள வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கும் போது, அரசு அலுவலர்களும் இதில் பங்கேற்க வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தை நான் வலியுறுத்தினேன். பல்வேறு மட்டங்களில் நடந்த பேச்சு வார்த்தைகளுக்குப் பின், இறுதியாக அரசு அலுவலர் சங்கப் பிரதிநிதிகளை நான் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி **552** கோடி ரூபாய் அளவிற்கு சலுகைகள் வழங்கினேன். இதற்கு மேல் அரசால் வழங்க இயலாத சூழ்நிலையையும் தெளிவாக எடுத்துக் கூறினேன். இதில் உள்ள நியாயத்தை பிடிவாதமாக உணர மறுத்த அரசு அலுவலர் சங்கத் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்களின் தூண்டுதலின் பேரில் **2003**, ஜூலை **2**ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அரசு எதிர்கொள்ளும் இத்தகைய நிதி இடர்பாட்டில் பொதுமக்களுடன், அரசு ஊழியர்களும் பங்கேற்க வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தினை வலியுறுத்தி இந்த அரசு இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை எதிர்கொண்டது. எனினும், சில அரசியல் தலைவர்களின் தூண்டுதலின் பேரில், அவர்களின் அரசியல் ரீதியான ஆதரவைப் பெற்ற சில அமைப்புகள் நீதிமன்றங்களை அணுகின. இறுதியில் உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் அடிப்படையில் அரசு ஊழியர்களின் பணி நீக்கம் சம்மந்தமாக ஓய்வுபெற்ற மூன்று நீதிபதிகளின் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

பல்வேறு அரசு அலுவலர்கள் தாங்கள் திசைமாறி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும், எனவே தங்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்றும், என்னிடம் பல முறை கோரிக்கைகள் விடுத்துள்ளனர். எனக்கு எப்பொழுதும் எவர் மீதும் எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியோ, பகைமையோ இருந்தது இல்லை. எதிர்கட்சித் தலைவர்களின் தூண்டுதலாலேயே, இவ்வாறு திசைமாறிப் போய், பாதிப்பிற்குள்ளான ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களையும் மன்னித்து அவர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்த அடிப்படையில்—

1) பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து அரசு அலுவலர்களும் மீண்டும் பணியில் அமர்த்தப் படுவார்கள். பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து அரசு அலுவலர்களின் தண்டனை நான்கு வருட திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையாகக் குறைக்கப்படும்.

2) பதவி இறக்கம் செய்யப்பட்ட அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பதவி இறக்கம் எனும் தண்டனை, ரத்து செய்யப்படும். அவர்கள் அனைவரும் தாங்கள் ஏற்கெனவே வகித்திருந்த பதவியை மீண்டும் பெறுவார்கள்.

அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பதவி இறக்கம் எனும் தண்டனை ரத்து செய்யப்பட்டு, அது இரண்டு வருட திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையாகக், குறைக்கப்படும்.

3) மூன்று வருடங்களுக்கு திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனை வழங்கப்பட்ட அரசு அலுவலர்களுக்கு அத்தண்டனை ஒரு வருடம் திரண்ட பயனுடன் கூடிய ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையாகக் குறைக்கப்படும்.

பெரும்பான்மையான மாநிலங்கள் மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையான அகவிலைப் படியை தங்கள் மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்க இயலாத நிலையில் உள்ளன. 1.7.2003 முதல் இந்த அரசு, அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் 52 சதவிகிதம் அகவிலைப்படி வழங்கி வருகிறது. பெரும்பான்மையான மாநிலங்கள் இதைவிடக் குறைவான அகவிலைப் படியையே தங்கள் அலுவலர்களுக்கு வழங்கி வருகின்றன. ஆசிரியர்கள் மற்றும் அனைத்து அரசு அலுவலர்கள் உட்பட சமுதாயத்தின் அனைத்து மக்களின் நலனிலும் அக்கறை கொண்ட தாயுள்ளம் கொண்ட நான் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 1.2.2004 முதல் 3 சதவிகிதம் கூடுதல் அகவிலைப்படி வழங்க முடிவு செய்துள்ளேன் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், தொகுப்பு ஊதியத்தில் உள்ள அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் தற்பொழுது பின்பற்றி வரும் முறைப்படி கூடுதல் அகவிலைப்படி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படக் கூடிய கூடுதல் செலவு சுமார் 201 கோடி ரூபாய் ஆகும். அனைத்து அரசு அலுவலர்களும் பொது மக்களின் நலனில் அக்கறை கொண்டு தங்கள் பணியை மேலும் திறம்பட செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இப்போது வருவாய்த் துறை சம்பந்தமாக சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

**வருவாய்த் துறை**

தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளாக பருவ மழை தொடர்ந்து பொய்த்து வந்துள்ளது. 2002 ஆம் ஆண்டில் பெய்த மழை அளவு 745.7 மி.மீ. ஆகும். இது இயல்பான மழை அளவை விட 24 சதவீதம் குறைவானதாகும். கடந்த 30 ஆண்டுகளில் இதுவே மிகக் குறைவான மழை அளவு ஆகும். இதன் காரணமாக வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

வரலாறு காணாத இந்த வறட்சியின் கொடுமையைக் குறைக்க இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதை உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். சென்னையைத் தவிர மற்ற 28 மாவட்டங் களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என அரசு அறிவித்தது. தமிழ்நாடு முழுவதும் சென்ற பசலி வருடத்திற்கான நிலவரி, உள்ளூர் தல வரி, உள்ளூர் தல மேல் வரி ஆகியவற்றை இந்த அரசு முழுமையாக தள்ளுபடி செய்து அதற்குண்டான 50 கோடி ரூபாய் இழப்பை அரசே ஏற்றுக் கொண்டது.

24.6.2002 அன்று தஞ்சாவூருக்கு நானே நேரடியாகச் சென்று வறட்சி நிலையை ஆய்வு செய்து 164 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவிலான வறட்சி

நிவாரணத் திட்டங்களை அறிவித்தேன். அவை சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டன.

வறட்சி நிவாரணப் பணிகளுக்காக தேசிய பேரிடர் நிவாரண நிதி அதாவது – National Calamity Contingency Fund–லிருந்து 332 கோடியே 9 இலட்சம் ரூபாயை மாநில அரசு பெற்றது. இந்த அளவிற்கு மத்திய அரசு நிவாரணம் வழங்கியது இதுவே முதன் முறை. இந்த 332 கோடியே 9 இலட்சம் ரூபாய்க்கு மேலாக மாநில அரசு மேலும் 335 கோடியே 45 இலட்சம் ரூபாயை அதாவது மொத்தம் 667 கோடியே 54 இலட்சம் ரூபாயை துயர் துடைப்பு பணிகளுக்காக 1.4.2002 முதல் 31.12.2003 வரை செலவிட்டுள்ளது.

மேலும், குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க 2002–2003 ஆம் ஆண்டில் 168 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் 30,372 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2003–2004 ஆம் ஆண்டில் இதுவரை 111 கோடியே 8 இலட்சம் ரூபாய் குடிநீர் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில் எதிர்பார்க்கப்படும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க மாவட்டங்களுக்கு 50 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை கொண்டாட, 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு, 21 கோடி ரூபாய் செலவில் பரிசுப் பைகள் வழங்கப்பட்டதையும்; முதலில் இலவச மதிய உணவும், பின்னர் மாதம் ஒன்றுக்கு 30 கிலோ வீதம் 7 மாதங்களுக்கு இலவச அரிசி வழங்கப்பட்டதையும்; விவசாயிகளுக்கு 323 கோடியே 56 இலட்சம் ரூபாய் பயிர் இழப்பீட்டுத் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டதையும்; இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

விவசாயிகள் வாங்கிய கூட்டுறவு கடன் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி 310 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிற்கு தள்ளுபடி செய்ய நான் ஜூன் 2001–ல் உத்தரவிட்டேன்.

2003 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவமழை ஓரளவு இயல்பாகப் பெய்தாலும், தமிழ்நாட்டின் முக்கிய மழை பருவமாகிய வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் 11 மாவட்டங்களில் குறைவான அளவே மழை பெய்துள்ளது. அதிலும், சென்னை மாநகரில் 54% அளவுக்கு மழை குறைவாக பெய்துள்ளது. எனவே, சென்னை மாநகரம் இதுவரை காணாத கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளது. ஏனைய 10 மாவட்டங்களில் 20% முதல் 44% வரை குறைவான மழை பெய்துள்ளது. இந்த ஆண்டிலும் காவேரியில் கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிடாத காரணத்தால் காவேரி பாசனப் பகுதிகளில் வேளாண் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களிலும் வரும் கோடைக் காலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

சென்னையை எதிர் நோக்கியுள்ள மிகக் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டை எடுத்துக் கூறி இந்த நிலைமையைச் சமாளித்திட மத்திய அரசு National Calamity Contingency Fund என்னும் தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 700 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு வாஜ்பாய் அவர்களுக்கும் மாண்புமிகு துணைப் பிரதமர் திரு எல்.கே. அத்வானி அவர்களுக்கும், 14.1.2004 அன்று கடிதங்கள் எழுதி கோரிக்கை விடுத்தேன். இந்தக் கோரிக்கையினைப் பரிசீலனை செய்த மாண்புமிகு துணைப் பிரதமர் அவர்கள், சென்னை மாநகரத்தின் குடிநீர்ப் பிரச்சனையைச் சமாளிக்க உடனடியாக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார். மேலும் நிலைமையை ஆய்வு செய்ய மத்தியக் குழு ஒன்றை அனுப்புவதாகவும், அந்தக்குழு நேரில் பார்வையிட்ட பின் மீதி நிதியை வழங்குவதாகவும் துணைப் பிரதமர் உறுதி அளித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்த்திட வேண்டும் என்று முழு முனைப்புடன் நான் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாகவே இது சாத்தியமாகி உள்ளது என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமையைத் திறம்படச் சமாளிப்பதற்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 1,584 கோடி ரூபாயும், வேலைக்கு உணவு திட்டத்தை மேற்கொள்வதற்கு 10.8 இலட்சம் டன் அரிசியும் தேவைப்படும் என்று கணக்கிட்டு, இதற்கான விரிவான அறிக்கையை 1.2.2004 ஆம் நாளன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கும், துணைப் பிரதமர் அவர்களுக்கும் அனுப்பி உள்ளேன்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 267 கோடியே 92 இலட்சம் ரூபாயும்; பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு இழப்பீடாக வழங்க 32 கோடியே 4 இலட்சம் ரூபாயும்; மழை குறைவினால் நீர் மின் உற்பத்தி பாதிக்கப்பட்ட தமிழ்நாடு மின் வாரியத்திற்கு இழப்பீடாக 336 கோடி ரூபாயும்; கூட்டுறவு சங்கங்களில் இருந்து விவசாயிகள் வாங்கிய கடனை ரத்து செய்ய 300 கோடி ரூபாயும்; கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய வட்டி தொகையை ரத்து செய்வதற்கு 132 கோடியே 71 இலட்சம் ரூபாயும்; பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு வேலைக்கு உணவு திட்டத்தை நிறைவேற்ற 210 கோடி ரூபாயும்; சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்கு 265 கோடியே 82 இலட்சம் ரூபாயும்; கால்நடைத் துறையினருக்கு 13 கோடியே 34 இலட்சம் ரூபாயும்; வறட்சியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின்

நலனுக்காக 25 கோடியே 90 இலட்சம் ரூபாயும்; ஆக மொத்தம் 1584 கோடி ரூபாயும் 10.8 இலட்சம் டன் அரிசியும் வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் நான் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலையை விளக்கமாக எடுத்துக் காட்டி, இதனைச் சமாளித்திட 1,584 கோடி ரூபாய் நிதி உதவியினையும், 10 இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு தானியமும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 1.2.2004 அன்று கடிதம் அனுப்பினேன். அன்றே சென்னைக்கு வருகை தந்திருந்த துணைப் பிரதமர் திரு அத்வானி அவர்களிடம் நேரில் அதே கடிதம் வழங்கி தமிழகத்தின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டேன்.

இதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்ட மத்திய அரசு, தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட மத்தியக்குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்தக்குழு, மிக விரைவில் தமிழகத்திற்கு வருகை தந்து, வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்ட பின் தமிழகத்தின் சார்பில் கோரப்பட்டுள்ள நிதி உதவியை மத்திய அரசு வழங்கும் என்று உறுதியுடன் நம்புகிறேன்.

இயற்கை பொய்த்துவிட்டதாலும், காவேரி நீரைக் கர்நாடகம் தராததாலும், ஏற்பட்ட வறட்சியின் கொடுமை விவசாயப் பெருமக்களைத் தாக்காத வண்ணம் இந்த அரசு கேடயமாக இருந்து வருகிறது. அதற்கு நான் இதுவரை தந்துள்ள விபரங்களே சான்று. இந்த ஆண்டிலும் உரிய வறட்சி நிவாரணம் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படும். விவசாயிகளின் நலனைக் காப்பதில் இந்த அரசு எப்போதும் எவரைக் காட்டிலும் முன்னிற்கும் என்பதை இந்த வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நிலவரி தள்ளுபடி**

விவசாயிகளின் நலனில் எப்பொழுதும் அக்கறை கொண்ட எனது அரசு, விதிமுறைகளின்படி நிலவரியைத் தள்ளுபடி செய்ய முடியாது என்றாலும், தொடர்ந்து பருவமழை பாதிக்கப்பட்டுள்ளதால், நிலவரி தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, ஜூலை 2003 முதல் ஜூன் 2004 வரை உள்ள நடப்பு பசலி ஆண்டுக்கு (1413), அனைத்து மாவட்டங்களிலும் நிலவரி முழுவதையும் தள்ளுபடி செய்ய நான் ஆணையிடுகின்றேன். உள்ளூர் தலவரி (Local Cess) மற்றும் உள்ளூர் தலமேல் வரி (Local Cess Surcharge) ஆகியவைகளும் தள்ளுபடி செய்யப்படும். இதனால் அரசுக்கு 60 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்றாலும், விவசாயிகளின் நலன் கருதி அதனை ஏற்றுக் கொள்வதில் இந்த அரசு மன நிறைவு அடைகிறது.

**காவேரி நீர்**

காவேரி நீரில் தமிழ்நாட்டுக்கு உரிய பங்கைப் பெறுவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்படவில்லை என்று கீறல் விழுந்த பழைய கிராமஃபோன் ரெக்கார்டு போல எதிர்க்கட்சிக்காரர்கள் ஒரே பல்லவியைத் திரும்பத் திரும்பப் பாடி வருகின்றனர். ஆனால் உண்மை நிலை என்ன என்று இந்த அவையில் நான் பலமுறை எடுத்துக் கூறி இருக்கிறேன். காவேரி நீரில் தமிழ்நாட்டுக்கு உரிய பங்கைப் பெறுவதில், காவேரி நீரில் தமிழ்நாட்டுக்கு உள்ள சட்டபூர்வ உரிமையை நிலைநாட்டுவதில் என்னுடைய தலைமையிலான அரசு 100 சதவிகிதம் முழுமையான பங்காற்றி இருக்கிறது என்பதை யாரும் மறுத்திடவோ, மறைத்து விடவோ முடியாது.

காவேரிப் படுகை மாவட்டங்களை வளப்படுத்தி, விவசாயிகளுக்கு வாழ்வளித்து, தமிழக மக்களுக்கு வளமும் நலமும் வழங்கும் காவேரி நதியைக் கர்நாடக அரசு தன்னுடைய வசதிக்காக நியாயமற்ற முறையில் கட்டுப்படுத்தி வருகிறது. இதனைத் தடுத்து தமிழகத்திற்கு உரிய நியாயமான பங்கை வழங்குவதற்காக 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதி காவேரி நடுவர் மன்றம் வழங்கிய இடைக்கால ஆணையை நிறைவேற்றிட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் 11.8.1998 அன்று காவேரி ஆணையம் – CAUVERY RIVER AUTHORITY உருவாக்கப் பட்டது.

காவேரி ஆணையத்தின் கூட்டங்கள் இதுவரை 6 முறைகள் நடைபெற்றுள்ளன. எங்களுடைய அரசு 2001–ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நான்கு முறை ஆணையத்தின் கூட்டங்கள் நடந்துள்ளன. இந்த நான்கு முறைகளில் நான் நேரடியாக இரண்டு முறை பங்கேற்றுள்ளேன். 10.10.2001 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பங்கேற்றுள்ளார். அதற்கு அடுத்து 27.8.2002 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நான் நேரடியாகப் பங்கேற்றேன். இதற்கு அடுத்த கூட்டம் 7.9.2002 அன்று நடைபெற்ற காவேரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து 23 மணி நேர அவகாசம் கூடத் தரப்படாமல் கர்நாடகத்தின் நெருக்குதலின் காரணமாக, திடீரென அதற்கு அடுத்த நாளே, அதாவது 8.9.2002 அன்றே கூட்டப்பட்டதால் நான் அதில் கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இவ்வாறு காவேரி ஆணையக் கூட்டம் திடீரென கூட்டப்படுகின்ற தகவல் எனக்கு கிடைக்கப் பெற்றதும் வேறொரு கூட்டம் தொடர்பாக அன்றைய தினம் புது டெல்லி சென்றிருந்த நிதி அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களை உடனடியாகத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அந்த கூட்டத்தில் என் சார்பாகக் கலந்து கொள்ளுமாறு

தெரிவித்தேன். மேலும் காவேரி நீரில் தமிழகத்திற்கு உள்ள உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் எடுத்துச் சொல்லப்பட வேண்டிய கருத்துக்களையும், மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையையும் தெளிவாக அவருக்கு எடுத்துக் கூறி அதை காவேரி ஆணையத்தின் முன் வைக்குமாறு தெரிவித்தேன். இதன் பிறகு 10.2.2003 அன்று கடைசியாக நடைபெற்ற காவேரி ஆணைய கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன்.

இந்த அனைத்துக் கூட்டங்களிலும் தமிழ் நாட்டிற்கு நியாயம் வழங்குங்கள் என்று தான் கேட்டோம். கடைசி வரை இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட எந்த ஒரு முடிவையும் கர்நாடக அரசு ஏற்கவில்லை. கர்நாடக அரசு தன் கையிருப்பில் தமிழகத்திற்கு கொடுக்கக்கூடிய அளவிற்குத் தண்ணீரை இருப்பு வைத்திருந்த நேரத்திலும், காவேரி ஆணையத்தின் முடிவுகளை நிறைவேற்ற மறுத்து விட்டது. தமிழ்நாடு அரசு தனது நியாயமான கோரிக்கைகளை சட்டப்பூர்வமான உரிமைகளை காவேரி ஆணையத்தின் முன்னர் எடுத்து வைத்த போதிலும் கர்நாடக அரசின் இணக்கமற்ற போக்காலும், சுயநலமிக்க தன்மையாலும், நியாயத்தை ஏற்க மறுக்கும் இயல்பாலும் காவேரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கு நமக்குக் கிடைக்கவில்லை.

காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி 2003 ஜூன் மாதம் முதல் 2004 ஜனவரி மாத இறுதி வரை தர வேண்டிய 196.10 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ; அல்லது காவேரி கண்காணிப்புக் குழுவின் பற்றாக்குறைக் காலப் பங்கீட்டு அளவின்படியான 90 டி.எம்.சி. அடி தண்ணீரின் அளவையோ ஒப்பிடுகையில்; 2004 ஜனவரி வரை மேட்டூர் அணைக்கு வந்த தண்ணீரின் அளவு 60.45 டி.எம்.சி. அடி மட்டுமே ஆகும் என்பதை நான் இங்கு நினைவு கூர விரும்புகிறேன். அரசியலமைப்பு நெறிப்படியும், சட்டப்படியும் அதிகாரமளிக்கப்பட்டு பிரச்சினை களுக்குத் தீர்வு காணும் அமைப்புகளான உச்ச நீதிமன்றம், காவேரி நதிநீர் ஆணையம், காவேரி நதிநீர் தாவா நடுவர் மன்றம் போன்ற அனைத்து அமைப்புகளின் ஆணைகளை ஏற்றுச் செயல்படுவதற்கு கர்நாடக அரசு திரும்பத் திரும்ப மறுத்து வருவது வேதனைக்குரியது. அது மட்டுமன்றி, இந்திய அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்ட உச்ச நீதி மன்றம், காவேரி நடுவர் மன்றம், காவேரி நதி நீர் ஆணையம் ஆகிய அதிகார அமைப்புகளின் அதிகார மையங்களின் ஆணைகளுக்கு கட்டுப்பட மறுத்து தனி நாடு போல கர்நாடகம் தன்னிச்சையாக நடந்து கொள்வது கண்டனத்திற்கு உரியதும் ஆகும். இதை நாம் பலமுறை சுட்டிக்காட்டியும் பயனில்லை. காவேரி ஆற்றிலிருந்து தனக்குரிய நியாயமான பங்கினை தமிழ்நாடு பெற்றே தீரும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் முயற்சியில் எனது அரசு ஒரு போதும் தளராது, ஓயாது என்பதை இந்தப் பேரவைக்கு மீண்டும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி டெல்டா விவசாயிகளின் துயரைத் துடைக்கின்ற வகையில், காவேரி நீரில் நமக்குள்ள உரிமையை நிலை நாட்டுகின்ற வகையில், நான் எத்தனை முயற்சிகள் எடுத்திருக்கிறேன் என்பதை ஏற்கெனவே பலமுறை இந்த அவையில் சொல்லியாயிற்று. காவேரி நதி நீர் ஆணையத்தின் நான்கு கூட்டங்களிலும் நாங்கள் பங்கு பெற்றிருக்கிறோம். அதே சமயத்தில் டில்லியில் மத்திய அரசில் நாற்காலி போட்டு அமர்ந்து மந்திரிகளாக இருந்தார்களே – அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்! அவர்கள் கையில் அதிகாரம் இருந்தது. அவர்கள் நினைத்து இருந்தால் காவேரி நீரைத் தமிழகத்திற்கு வழங்க மத்திய அரசை வற்புறுத்தி இருக்க முடியும். ஆனால் காவேரி நீர் தமிழகத்திற்கு கிடைக்க ஏற்பாடு செய்தார்களா? மத்திய அரசை வற்புறுத்தினார்களா? குறைந்தபட்சம் குரலாவது கொடுத்தார்களா? இல்லை! அவர்களது தலைவரோ இதற்கு மேல் ஒரு படி சென்றார். 'ஆட்சி செய்வது நீங்கள், காவேரிக்குப் போராட வேண்டியது நாங்களா?' என்று கேட்டார். அதாவது தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தால் தான், காவேரிக்கு குரல் கொடுப்பாராம். ஆட்சிப் பொறுப்பில் அவரை மக்கள் அமர்த்தாவிட்டால் விஷமத்தனத்தோடு வேடிக்கை பார்ப்பாராம்! அவரது வாதத்தின்படி வைத்துக் கொண்டால் கூட மத்திய அரசில் இவரது கட்சிக்காரர்கள் மந்திரிகளாக இருந்தார்களே அப்போது அவர்கள் என்ன செய்தார்கள்? போராட வேண்டாம். குறைந்தபட்சம் குரலாவது கொடுத்திருக்கலாம் அல்லவா? அவர்கள் இன்றைக்குச் சொல்கிறார்கள் எனது அரசு முனைப்புடன் செயல்படவில்லையாம்! எப்படி இருக்கிறது நியாயம்?

இன்றைக்கு காங்கிரஸ்காரர்களும் மனசாட்சி இல்லாமல் இதே குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள். கர்நாடகத்தை நேற்று ஆண்டதும், இன்றைக்கு ஆண்டுகொண்டிருப்பதும் காங்கிரஸ் கட்சி தானே? அந்த காங்கிரஸ் ஆட்சியை காவேரி நீரை வழங்குமாறு வற்புறுத்தியிருக்கலாம் இல்லையா? டில்லியிலிருக்கும் அவர்கள் கட்சித் தலைமை தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கலாம் இல்லையா? ஏன் செய்ய வில்லை? என்றைக்காவது இந்தக் கேள்விகளுக்கு தமிழ்நாடு காங்கிரசார் பதில் சொன்னதுண்டா? போகட்டும்! இப்போதாவது கர்நாடக காங்கிரஸ் அரசை அல்லது டில்லித் தலைமையைக் கேட்கின்ற துணிச்சல் இவர்களுக்கு உண்டா? துணிச்சலும் கிடையாது! தமிழக நலனைக் காக்கும் உணர்வும் கிடையாது!

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி– கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி

என்று பாரதியார் பாடினாரே அது இவர்களைப் பற்றித் தானா?

'நடிப்புச் சுதேசிகள்' என்று பாரதியார் அழைத்தது இவர்களைத் தானா?

சிலரைப் பல நாள் ஏமாற்றலாம். பலரைச் சில நாள் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது. தமிழக மக்கள் ஏமாளிகள் அல்ல. காவேரிப் பிரச்சினையில் தங்களை ஏமாற்றிய இவர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

நாங்கள் தி.மு.க. காரர்களைப் போல் வாய்ச் சொல் வீரர்கள் அல்ல! காங்கிரஸ்காரர்களைப் போல் நடிப்புச் சுதேசிகள் அல்ல! யார் குரல் கொடுத்தாலும், குரல் கொடுக்காவிட்டாலும் நாங்கள் குரல் கொடுப்போம். யார் போராடினாலும், போராடாவிட்டாலும் நாங்கள் போராடுவோம்! காவேரிப் பிரச்சினையில் விரைவில் வெற்றி பெற்றே தீருவோம். நாடாளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் நாங்கள் அமர்வோம். இதுவரை ஏற்படாத மாறுதலை நாங்கள் கொண்டு வந்தே தீருவோம்! கர்நாடகத்தின் கதவுகளைத் திறந்து கொண்டு காவேரி தமிழகத்திற்குள் காலெடுத்து வைப்பதை எவராலும் தடுக்க இயலாது. இறுதி வெற்றி பெறும் வரை நாங்கள் ஓய மாட்டோம் என்பதை அறுதியிட்டு, உறுதியுடன் இந்தப் பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.



**வேளாண்மைத் துறை**

எனது தலைமையிலான அரசு, வேளாண்மைத் துறையில் பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

குறைவாக பெறப்பட்ட பருவமழை நீர்தேக்கங்கள் மற்றும் ஏரிகளில் குறைவான நீர் இருப்பு அண்டை மாநிலத்திலிருந்து நீர் திறந்து விடப்படாத நிலை மற்றும் குறைந்து விட்ட நிலத்தடி நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கடந்த குறுவைப் பட்டத்தில் நெல் பயிரிட முடியாத விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தினை கடந்த ஆண்டில் நான் அறிவித்தேன். கடந்த ஆண்டில், 2003 குறுவையில் 75,165 ஏக்கரில் குறைந்த நீர் தேவைப்படும் சிறு தானியங்கள் பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறிப் பயிர்கள் ஆகியவற்றை மாற்றுப் பயிராக விவசாயிகள் சாகுபடி செய்தனர்.

தோட்டக்கலைப் பிரிவில், பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நவீன தொழில் நுட்பங்களைக் கையாண்டு, விலை மதிப்புள்ள காய்கறிப் பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் தருமபுரி மாவட்டத்திலும் 7 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் "தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம்" – அதாவது – Precision Farming என்ற சிறப்பு திட்டத்தை செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் 1000 ஏக்கர் நிலங்களில் அவர்களின் தீவிர பங்கேற்புடன் மரவள்ளி, சீமை வெள்ளரி, பேபி கார்ன் போன்ற பயிர்களின் சாகுபடி உயர் தொழில்நுட்ப அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தினை தோட்டக்கலைத் துறையின் மேற்பார்வையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செயல்படுத்தும்.

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன், 'தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்' Tamil Nadu Horticulture Development Mission – கடந்த ஆண்டு என்னால் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பான பணிகளை 11.2.2004 அன்று சென்னையில் நான் துவக்கி வைக்க உள்ளேன்.

13 கோடி ரூபாய் செலவில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் நிலக்கோட்டையில் உள்ள தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனமான SIPCOT வளாகத்தில், ஒரு உணவு பூங்கா – FOOD PARK – அமைப்பதற்கான ஆணையை நான் பிறப்பித்துள்ளேன். இதற்காகவே ஏற்படுத்தப்படவுள்ள ஒரு சிறப்பு முகமை – Special purpose vehicle மூலம் இது அமல்படுத்தப் படவுள்ளது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதில் தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனமும் SIPCOT–ம் பங்கேற்கும்.

ஈரோடு அருகில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள இடத்தில் மொத்தம் 36 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க நான் ஆணையிட்டுள்ளேன். இவ்வளாகத்தில் நவீன உள் கட்டமைப்பு வசதிகளான ஏல மையம், தகவல் தொடர்பு மையம், பரிவர்த்தனைக் கூடங்கள், வங்கி தரக் கட்டுப்பாடு ஆய்வகம்,

விவசாயிகள் ஓய்வு எடுக்க வசதி போன்றவை இடம் பெறும்.

தமிழ்நாட்டிலுள்ள வளமற்ற தரிசு நிலங்களைச் சீர்திருத்துவதன் மூலம் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதுடன், வேளாண் மற்றும் வேளாண்மையைச் சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும், தரிசு நில விவசாயிகளின் வருவாய் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் முடியும். விவசாயிகளின் ஒட்டு மொத்த நலனை இலக்காகக் கொண்டு, தரிசு நிலங்களை 5 ஆண்டு காலத்தில் சீர்திருத்தி பயிர் செய்வதற்கு ஏற்றவாறு செய்வதற்காக, விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை 2001 ஆம் ஆண்டில் நான் அறிவித்தேன். மண் மற்றும் ஈரப் பதத்தைப் பாதுகாப்பதை முன்னிலைப்படுத்தி, மிகச் சிறிய நீர்வடிப் பகுதிகளை மேம்படுத்தும் அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு, மக்கள் பங்கேற்பு அணுகுமுறையில் இதற்கென ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இரண்டு ஆண்டு காலமாக கடும் வறட்சி நிலவிய போதிலும், இதுவரை 70 இலட்சம் மரக் கன்றுகள் 1.19 இலட்சம் ஏக்கர்களில் நடப்பட்டுள்ளன. வரும் ஆண்டு நல்ல பருவ மழையை எதிர்பார்த்து, 1,50,000 ஏக்கர் நிலத்தில் மரக் கன்றுகள் மற்றும் தீவனப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும்.

உலக வங்கி உதவியுடன் திருநெல்வேலி மாவட்டம் ஹனுமான் நதி ஆற்று பாசன பகுதிகளில் சுமார் 7,413 ஏக்கர் பரப்பில் நவீன நீர்ப் பாசன வசதிகளான தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப் பாசனம், குழாய் மூலம் பாசனம் போன்ற முறைகளை கையாண்டு வேளாண்மைத் துறையால் 22 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய திட்டத்தினை செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன்.

**பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம்**

எனது அரசு தமிழகத்தில் 1.10.2002 முதல் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

நடப்பு சம்பா 2004 பருவத்தில் 15.12.2003 முதல் மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள் முதல் திட்டத்தின்படி, மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையான சன்ன ரக Fine Variety நெல் குவிண்டால் ஒன்றிற்கு 580 ரூபாய்க்கும்; பொது ரக Common Variety நெல் குவிண்டால் ஒன்றிற்கு 550 ரூபாய்க்கும் கொள்முதல் செய்ய நான் ஆணையிட்டேன்.

தற்போது மொத்தம் 501 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றன. தற்போது, நாள்தோறும் சுமார் 2,500 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. 9.2.2004 வரை, அதாவது நேற்று வரை, மொத்தம் 17,246 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல் வரத்தைக் கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் பேரில், தேவையான அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கூடுதலாகத் திறக்க என்னுடைய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சில பகுதிகளில் சாகுபடி செய்யத் தேவையான நீர்வரத்து இல்லாத காரணத்தால் தானியங்கள் முதிராத நிலையைக் கருத்தில் கொண்டு, தர நிர்ணயங்களில் சலுகைகள் வேண்டுமென விவசாயப் பெருமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை, உடனடியாக ஏற்று, தர நிர்ணய திரிபுகளில் குறிப்பாக முதிராதது சுருங்கியது மற்றும் குறுகியது ஆகியவற்றை 3 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்தும்படி மைய அரசுக்கு என்னுடைய அரசு பரிந்துரை செய்துள்ளது. அக்கோரிக்கை மைய அரசின் பரிசீலனையில் உள்ளது. மைய அரசின் உத்தரவு கிடைத்தவுடன் விவசாய பெருமக்கள் விரும்பியவாறு தர நிர்ணயங்களில் சலுகைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னைக் குடிநீர்**

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்கு, எந்தெந்த வழிகளில் எல்லாம் இயலுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் முயன்று வருகிறது எனது அரசு!

சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கக் கூடிய நீர் நிலைகளான பூண்டி, சோழவரம் மற்றும் புழல் ஏரிகளின் மொத்தக் கொள்ளளவு 7,412 மில்லியன் கன அடி. அவற்றில் தற்போதைய நீர் இருப்பு 213 மில்லியன் கன அடி ஆகும். இது ஏரிகளின் மொத்தக் கொள்ளளவில் 2 விழுக்காடே ஆகும். தற்போது உள்ள நீர் இருப்பு கடந்த 51 ஆண்டுகளில் இதே நாளில் இருந்த நீர் இருப்பை விட மிகக் குறைவானதாகும்.

2003 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவமழை குறைந்த அளவே பெய்தது. ஆகவே நவம்பர் 2003–ல் நான் சென்னை நகரத்திற்குப் போர்க்கால அடிப்படையில் கூடுதலான குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்தி, சென்னை நகர மக்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் திட்டங்கள் தீட்டுமாறு சென்னை குடிநீர் வாரியத்திற்கு ஆணையிட்டேன்.

எனது ஆணையின் அடிப்படையில் சென்னை குடிநீர் வாரியம் இந்த ஆண்டு நிலவி வரும் வரலாறு காணாத குடிநீர்த் தட்டுப்பாட்டினை சமாளிக்கவும்; சென்னை நகரில் வாழும் 55 இலட்சம் மக்களின் குடிநீர்த் தேவையைச் சமாளிக்கவும்; பல திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது.

பல்வேறு கிணற்றுத் தளங்களில் இருந்து தற்போது நாள் ஒன்றுக்கு 103 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு, குழாய்கள் மூலம் நகரத்திலுள்ள குடிநீர் பகிர்மான நிலையங்களுக்குக் கொண்டு வரப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் தனியார் விவசாயக் கிணறுகளில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 50 மில்லியன் லிட்டர் வரை குடிநீர் லாரிகளில் சென்னைக்குக் கொண்டு வரப்படுகிறது.



சென்னை நகரில் நாள்தோறும் 8,500 லாரி நடைகள் இயக்கப்பட்டு, 10,350 குடிநீர்த் தொட்டிகள் மூலமும் 4,700 தெருக்களில் நேரடியாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எதிர்வரும் கோடைக் காலத்தைக் கணக்கில் கொண்டு, மேலும் 2,000 நீர்த் தொட்டிகளை நிறுவவும்; தேவையான அளவு டாங்கர் லாரிகளின் எண்ணிக்கை யையும், லாரி நடைகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி நகரில் குடிநீர் விநியோகத்தைச் சீராகத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் விநியோகம் செய்திடவும் நான் ஆணையிட்டுள்ளேன். என்னால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகளினால், சென்னை நகருக்குத் தற்போது நாள் ஒன்றுக்கு 125 மில்லியன் லிட்டர் குடிநீர் பெரும்பாலும் நிலத்தடி நீரைக் கொண்டே விநியோகிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, தொழிற்சாலைகளுக்குத் தொடர்ந்து நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் நீர் வழங்கப்பட்டு வருகிறது.

இதர நீர்த் தேவைகளுக்காக, சென்னை நகரில் 5,730 இந்தியா மார்க்–II ஆழ்துளை பம்புகள் – India Mark-II – அமைக்கப்பட்டு அவற்றை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், 800 இந்தியா மார்க்–II ஆழ் துளைப் பம்புகள் கடந்த இரண்டு மாதங்களில் நிறுவப்பட்டுள்ளன. வரும் கோடைக் காலத்திற்கு முன்பு மேலும் 1,000 ஆழ்துளைப் பம்புகள் நிறுவிட தற்போது ஆணையிட்டுள்ளேன்.

தற்போது கிணற்றுத் தளங்களிலிருந்து எடுக்கப்படும் தினசரி 103 மில்லியன் லிட்டர் என்ற அளவு, எதிர் வரும் கோடைக் காலத்திலும் தொடர்ந்து கிடைத்திட ஏதுவாக சுமார் 110 விவசாயக் கிணறுகளிலிருந்து நாளொன்றிற்கு 32 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் ஒரு திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

இப்பணிகள் அனைத்திற்கும் சுமார் 28 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவாகும் எனத் திட்டமிடப் பட்டுள்ளது.

பூண்டி கிணற்றுத் தளம் மற்றும் அதைச் சுற்றியுள்ள சுமார் 125 கிணறுகளை வாடகைக்கு அமர்த்தி, அதன் மூலம் பெறப்படும் நீரை செங்குன்றத்திலுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்ப ஏதுவாக, பூண்டியிலிருந்து புழல் ஏரிக்கு இணைப்புக் கால்வாயினை ஒட்டி 1,000 மி.மீ. விட்டமுடைய இரும்புக் குழாய் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

சுமார் 116 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம், நாளொன்றுக்கு சுமார் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது செயலாக்கப்பட்டு மே 2004–லிருந்து பயன்பாட்டிற்கு வரும்.

தற்போது 4,900 லாரி நடைகளில் கொண்டு வரப்படும் நீரின் அளவான 49 மில்லியன் லிட்டர் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு, 7,500 நடைகள் மூலம் 75 மில்லியன் லிட்டர் எனக் குடிநீரை சென்னை நகருக்குக் கொண்டு வரும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இவ்வாறான ஏற்பாடுகளை அடுத்த வடகிழக்குப் பருவ மழை பெய்யத் தொடங்கும் காலமான 2004 செப்டம்பர் மாதம் முடிய நடைமுறைப்படுத்திட ஆணையிட்டுள்ளேன். இப்பணிகளுக்கான மொத்தச் செலவு 306 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

1991–96 இல் எனது தலைமையிலான அரசு, புதிய வீராணம் திட்டத்தைத் தீட்டி, அதனை உலக வங்கி நிதி உதவியுடன் 1638 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றிட ஒப்புதல் அளித்துத் திட்டம் தொடங்கப் படவிருந்த சூழ்நிலையில் ஆட்சி மாறியதையும்; பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க. அரசு சென்னை மாநகரின் குடிநீர் தேவையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அத்திட்டத்தை ரத்து செய்து விட்டதையும்; மாண்புமிகு உறுப்பினர்களும் சென்னை மாநகர் வாழ் பொதுமக்களும் நன்கறிவர். என்னால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தற்போதைய குடிநீர்த் தட்டுப்பாடு சென்னைக்கு ஏற்பட்டிருக்காது. எனினும், எதிர்காலத்தில் இது போன்ற

குடிநீர்த் தட்டுப்பாடுகள் ஏற்படாதவாறு தடுக்க 2001 ஆம் ஆண்டு மே மாதத்தில் இரண்டாம் முறையாகத் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்ற உடனேயே எனது தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்தது.

தி.மு.க. அரசால் கைவிடப்பட்ட புதிய வீராணம் திட்டத்திற்குப் புத்துயிர் அளித்து 720 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த நான் ஆணையிட்டேன். இத்திட்டத்திற்கான அனைத்துப் பணிகளும் இந்த ஆண்டு மே மாதம் இறுதிக்குள் முடிக்கப்படும்.

புதிய வீராணம் திட்டம் நிறைவேற்றப்படுவதால், ஏரியின் பாசனம் பாதிக்கப்படும் என்ற தவறான அச்சத்தை ஏற்படுத்தச் சிலர் முயன்று வருகின்றனர். இந்த அச்சம் தேவையற்றது, தவறானது என்பதை இந்த அவையில் ஏற்கெனவே விளக்கமாகவும், தெளிவாகவும் கூறியுள்ளேன்.

வீராணம் ஏரியின் பாசனப் பகுதிகளில் பாசனம் பாதிக்கப்படாதவாறு, சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டு செல்லும் வண்ணம் இத்திட்டம் நிறைவேற்றப் படுகிறது. இந்த திட்டம் பிரபல கலந்தாலோசனை நிறுவனமான M/s Tata Consulting Engineers – ஆல் நன்கு ஆய்வு செய்யப்பட்ட பின்பே செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதை நான் இந்த அவைக்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். அவர்களுடைய ஆலோசனையின்படி வீராணம் ஏரியின் கரை 0.6 மீட்டர் உயர்த்தப்பட்டதன் மூலம் வீராணம் ஏரியின் கொள்ளளவு 930 மில்லியன் கன அடியிலிருந்து 1,485 மில்லியன் கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. கொள்ளிடம் நதியின் குறுக்கே உள்ள கீழ் அணையிலிருந்து வீராணம் ஏரிக்கு நீர் கொண்டு வரும் வடவாறு கால்வாயின் கொள்ளும் திறனும் வினாடிக்கு 1,400 கன அடியிலிருந்து வினாடிக்கு 2,300 கன அடியாக உயர்த்தப் பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவேற்றப் பட்டதால், இயல்பான ஆண்டில் முன்னர் கிடைத்த மொத்த நீரின் அளவான 11.06 டி.எம்.சி அடி என்பது தற்போது 14.45 டி.எம்.சி அடி ஆக உயர்ந்துள்ளது. அதாவது கூடுதலாக ஆண்டிற்கு 3.39 டி.எம்.சி அடி நீர் கிடைக்கும். புதிய வீராணம் திட்டத்தில் 2.45 டி.எம்.சி அடி நீர் தான் ஆண்டு முழுவதும் எடுக்கப்படவுள்ளது. இத் திட்டம் நிறைவேறுவதால், இயல்பான ஆண்டில் விவசாயத்திற்கு 1 டி.எம்.சி. அடி அளவில் கூடுதலாக நீர் கிடைக்கிறது என்பது தான் உண்மை.

விவசாயிகளின் நலனில் என்னுடைய தலைமையிலான இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. அவர்கள் நலன் எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக 110.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீராணம் ஏரி, வடவாறு கால்வாய், மற்றும் பாசனக் கால்வாய்கள் மேம்பாட்டிற்காகத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதையும் இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை நகரில் தற்போது நிலவி வரும் மிகக் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டினைச் சமாளிக்கும் வண்ணம், கடலூர் மாவட்டம் நெய்வேலிப் பகுதியில், கெடிலம் ஆற்றிற்கும், வெள்ளாற்றிற்கும் இடையிலான 40 கிலோ மீட்டர் நீளமுள்ள நிலநீர்ப் படுகையில் 45 ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து, அவற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 60 மில்லியன் லிட்டர் நீரை எடுத்து நடப்பாண்டில் மே மாதம் முதல் அடுத்த பருவமழை காலம் வரை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு 49 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டத்தினை மே 2004–இல் முடிக்கும் வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் வேல்முருகன், ஜி.கே.மணி, புகழேந்தி மற்றும் ஞானசேகரன் ஆகியோர் சென்னை நகரில் தற்போது நிலவி வரும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க அரசு திட்டமிட்டுள்ள நெய்வேலிப் பகுதியில் இருந்து 45 ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் எடுக்கும் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது தொடர்பாக விளக்கமாகக் கூற விரும்புகிறேன்.

கடலூர் மாவட்டம், நெய்வேலிப் பகுதியில், வெள்ளாற்றிற்கும், கெடிலம் ஆற்றிற்கும் இடையே உள்ள 40 கி.மீ தொலைவில் 45 ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொன்றிலுமிருந்து நாளொன்றிற்கு சுமார் 2 மில்லியன் லிட்டர் அளவு மட்டும் நீர் எடுக்கப்படவுள்ளது. ஒரே நேரத்தில், 30 ஆழ் துளைக் கிணறுகளிலிருந்து மட்டுமே கிணற்றிற்கு 2 மில்லியன் லிட்டர் வீதத்தில் மொத்தம் 60 மில்லியன் லிட்டர் நீர் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 கிணறுகள் தேவையானால் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக standby ஆக இருக்கும். மேலும் வறட்சி ஏற்படும் காலங்களில் மட்டுமே இவ்வாறு ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து நீர் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது.

புதிய வீராணம் திட்டத்திற்கு மேலும் வலுவூட்டவும்; வீராணம் ஏரியில் தேங்கி நிற்கும் நீரினை மட்டுமே நம்பி இல்லாமல், ஆண்டு முழுவதும் இத்திட்டத்தின் மூலம் 180 மில்லியன் லிட்டர் நீர் கொண்டு வர ஏதுவாக மாற்றுத் திட்டம் ஒன்றினையும் ஆய்வு செய்திட ஆணையிட்டேன். இதற்கென அமைக்கப்பட்ட வல்லுனர்கள் குழு, கொள்ளிடம் ஆற்றில், கீழ் அணைக்கட்டுப் பகுதியிலிருந்து நாள் ஒன்றிற்கு சுமார் 150 மில்லியன் லிட்டர் நீரை தொடர்ந்து ஆண்டு முழுவதும் எடுக்க முடியும் என்றும், இதனால் ஏற்கெனவே உள்ள குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்படாது என்றும் விளக்கித் தனது அறிக்கையினை அளித்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றிட சுமார் 200 கோடி ரூபாய் செலவாகும் என

மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை, மேலும் ஆராய்ந்து நிறைவேற்றிட இவ்வரசு பரிசீலித்து வருகிறது.

இந்த புதிய வீராணம் திட்டத்தைச் சார்ந்து நிறைவேற்றப்படவுள்ள கூடுதல் பணிகளுக்கான திட்ட மதிப்பு 249 கோடி ரூபாய் ஆகும்.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, சென்னை நகரில் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்ப் பற்றாக் குறையை உடனடியாகச் சமாளிக்கும் வகையிலும்; ஆனால் அதே சமயம் இதன் மூலம் நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள் எதிர்வரும் காலத்திலும் குடிநீர் தொடர்ந்து வழங்குவதற்கு வழி வகை செய்யக் கூடிய வகையிலும் தீட்டப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு 700 கோடி ரூபாய் ஆகும். மேலும், இம்மாதம் 4 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்த போது, மாண்புமிகு நிதி அமைச்சர் ஜஸ்வந்த் சிங் அவர்கள், தமது உரையில் சென்னை உட்பட்ட பெருநகரங்களில் துரிதப்படுத்தப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டத்தினை நிறைவேற்றிடவும், அதற்குத் தேவையான நிதி ஆதாரத்தை தரும் வண்ணம் மத்திய அரசில் தற்போதுள்ள பெருநகரக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நிதியினைக் கூடுதலாக்கவும்; பாரதப் பிரதமர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்தத் திட்டம் மார்ச் 1 ஆம் தேதி முதலே நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. தேசிய அளவிலான இந்தப் பெருநகரங் களுக்கான விரைவுபடுத்தப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு எனது முயற்சியே காரணமாகும் என்று சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மேற்கூறிய திட்டங்கள் அனைத்தும் பருவமழை பெய்வதையும், நீர்த்தேக்கங்களில் நீர் பெறுவதையும், நிலத்தடி நீரையும் பொறுத்தே அமைந்துள்ளன. ஆனால் பருவமழை பொய்த்து விட்டால் இத்திட்டங்களால் நிரந்தரத் தீர்வு இல்லை என்பதை நாம் உணர்ந்துள்ளோம். ஆகவே சென்னை மாநகருக்குக் கடல் நீரினைக் குடிநீராக மாற்றும் திட்டமே ஒரு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். கடல் நீரிலிருந்து குடிநீர் பெறுவதற்கான அனைத்து வசதிகளும் சென்னைப் பெருநகரில் அமைந்துள்ளன. கடல் நீரிலிருந்து நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறும் திட்டத்திற்கு 1,500 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டு இதனை 2.2.2004 அன்று நடந்த சந்திப்பில் மத்திய அரசின் 12–ஆம் நிதிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு நான் எடுத்துக் கூறி, இந்தச் செலவு முழுவதையும் மத்திய அரசு மானியமாக அளித்திட வேண்டும் என வலியுறுத்திக் கூறி அதற்கான அறிக்கையையும் அளித்துள்ளேன். எனது கோரிக்கையை மத்திய அரசு கனிவுடன் பரிசீலித்து ஆவன செய்யும் எனப் பெரிதும் நம்புகிறேன்.

திரு. துரைமுருகன் பேசும் போது, கொள்ளிடம் ஆற்றில் கிணறுகள் அமைத்து அவற்றில் இருந்து நீர் எடுத்து வடவாறு வாய்க்கால் மூலம் கொண்டு வந்தால் விவசாயிகள் பாசனத்திற்கு நீர் கேட்கக் கூடிய சூழ்நிலை எழும் என்று சட்டமன்றத்தில் குறிப்பிட்டார்.

கொள்ளிடம் ஆற்றில் கீழ் அணைப் பகுதியில், நீர் சேர்க்கும் கிணறுகள் அமைத்து எடுக்கப்படும் நீரை வடவாறு கால்வாய் மூலமாக, எடுத்துச் செல்லும் திட்டம் இல்லை. இந்த நீரானது வீராணம் ஏரிக்குள்ளும் செல்லாது; குழாய்கள் மூலம் நேரிடையாக, சேத்தியாதோப்பில், வீராணம் ஏரியின் வடக்கு முனையில் அமைக்கப்பட்டு வரும் நீர் ஏற்று நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு, பின்னர் அங்கிருந்து புதிய வீராணம் திட்டத்தின் கீழ், அமைக்கப்படும் குழாய்கள் மற்றும் கட்டமைப்பு வாயிலாக சென்னை நகருக்கு கொண்டு வரும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

சென்னை நகரக் குடிநீர்த் தேவைக்கு முன்னுரிமை அளிப்பதைப் போன்றே, கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கும் குடிநீர் வழங்க முனைப்புடன் பல்வேறு குடிநீர் திட்டப் பணிகளை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் நிலையை அறிய, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தமிழகத்தில் மொத்தம் உள்ள 81,787 ஊரகக் குடியிருப்புகளில், 11,790 குடியிருப்புகளில் போதிய அளவிற்கு குடிநீர் வசதி இல்லாத நிலை கண்டறியப்பட்டது. கடந்த ஆண்டில் மட்டும் 6,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் வழங்கும் மானியத் தொகைக்கு ஈடாக மாநில அரசு மானியத் தொகை ஒதுக்குவது வழக்கமாகும். ஆனால் எனது தலைமையிலான அரசு, மத்திய அரசு அளிக்கும் மானியத்தை விட 7 மடங்கு அதிகமாகவே நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்டு 70 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 1,258 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் சுமார் 80 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் செயலாக்கத்தில் உள்ளன.

கையிறைப்பான்கள் மூலம் நீர் இறைப்பதில் கிராமப்புற மகளிர்க்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்கும்




வகையில் இந்த அரசு 2001–2002 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய சிறு மின் இறைப்பான் திட்டம் ஊரகப் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பையும், பேராதரவையும் பெற்றுள்ளது. 2001–2003 ஆம் ஆண்டுகளில் 14,661 மின் இறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயலாக்கும் வகையில் நடப்பு நிதியாண்டில் 10,000 சிறு மின் இறைப்பான் திட்டங்கள் ஊரகப் பகுதி வாழ் மக்கள் பயன்பெறுவதற்கெனச் செயல்படுத்தப்பட உள்ளன. இவற்றில் 4,000 சிறு மின்விசை இறைப்பான்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நிறுவப்படவுள்ளன என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

மத்திய அரசின் பகுதி சீரமைப்புத் திட்டத்தின் கீழ், மக்கள் பங்கேற்புடன் கோயம்புத்தூர், வேலூர், பெரம்பலூர் கடலூர், காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மார்ச் 2003 முடிய 6005 திட்டங்கள் 94 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டன. நடப்பு நிதியாண்டில் 53 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில், 2872 குடிநீர் திட்டங்கள் ஊரகப் பகுதிகளில் எடுக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. மேலும் மத்திய அரசின் 'ஸ்வஜல் தாரா' ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் மக்கள் பங்கேற்புடன் 22 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 835 குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சென்னை மாநகராட்சி நீங்கலாக, மொத்தமுள்ள 718 நகரங்களில் 311 நகரங்கள் முழுமையான அளவு குடிநீர் வசதி பெற்றவைகளாகவும்; எஞ்சிய 407 நகரங்கள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றவைகளாகவும் உள்ளன. 2003–2004 ஆம் ஆண்டில் 60 நகரங்களில் 26 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், 260 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொழில் துறை**

தமிழ்நாடு முதலீடு செய்வதற்கு உன்னத மற்றும் விரும்பத்தக்க இலக்காகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. அக்டோபர் 2003 நிலவரப்படி, அந்நிய நேரடி முதலீட்டு ஒப்புதல்களில் நாட்டிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும்; மொத்த முதலீட்டில் இரண்டாவது இடத்திலும்; உற்பத்தித் துறை முதலீட்டில் முதல் இடத்திலும் திகழ்ந்து வருகின்றது என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேருவுவகை அடைவீர்கள். பொருளாதார அபிவிருத்தியில் காணப்படும் புத்தாக்கத்தின் விளைவாக உற்பத்தித் துறையில் புதிய முதலீடுகளுக்கான ஆர்வத்தில் ஒரு மறுமலர்ச்சி கடந்த சில மாதங்களாகக் காணப்படுகிறது.

பிரான்சு நாட்டைச் சார்ந்த கட்டுமான மற்றும் கண்ணாடி உற்பத்தி செய்வதில் முன்னோடி நிறுவனமான திருவாளர்கள் செயின்ட் கோபேன் – Saint–Gobain – என்ற பன்னாட்டு நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அவர்களது செயல்பாடுகளை மேலும் விரிவாக்கம் செய்வது குறித்து ஏற்கெனவே எடுத்த முடிவு பற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்த நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் 450 கோடி ரூபாய் அளவில் கூடுதல் முதலீடு செய்வதன் மூலம், இவ்வளாகம் உலகத்திலேயே மிகப் பெரிய ஒருங்கிணைந்த கண்ணாடி உற்பத்தி வளாகங்களில் ஒன்றாக வளர்ச்சி பெறும் என்பது கண்கூடு.

தென்கொரிய நிறுவனமான திருவாளர்கள் ஹுண்டாய் மோட்டர்ஸ் – Hyundai Motors – தமிழ்நாட்டிலுள்ள தங்களது தொழிற்சாலையைப் பெருமளவில் விரிவாக்கம் செய்து, அதை ஓர் உலக ஏற்றுமதி மையமாக்கிடத் Global Export Hub ஆக்கிடத் திட்டமிட்டுள்ளனர்.

பிரிட்டனின் மென்பொருள் பன்னாட்டு நிறுவனமான சான்சா – Xansa –என்ற நிறுவனம் தனது மிகப் பெரிய மென்பொருள் மேம்பாட்டு மையத்தை 24.7.2003 முதல் சிறுசேரியில் செயல்படுத்தி வருகிறது.

திருவாளர்கள் ஏசியன் பெயிண்ட்ஸ் – Asian Paints – மற்றும் இண்டோ ஆசாகி கிளாஸ் – Indo-Asahi Glass – ஆகியோர் சென்னைக்கு அருகில் தங்களது உற்பத்தி மையங்களைப் பெரும் முதலீட்டுடன் விரைவில் உருவாக்க உள்ளனர்.

டாட்டா கன்சல்டன்சி – Tata Consultancy Services – மற்றும் இன்ஃபோசிஸ் – Infosys – நிறுவனத்தார்கள் தங்களது பெரிய மென்பொருள் மேம்பாட்டு மையங்களை சென்னை நகரத்தின் அருகில் நிறுவ ஏற்கனவே முடிவு எடுத்துள்ளார்கள்.

1992 ஆம் ஆண்டு நான் முதல்வராக இருந்த பொழுது தமிழ்நாட்டின் முந்தைய தொழில் வளர்ச்சிக் கொள்கை வடிவமைக்கப்பட்டது என்பதை உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம்.

கடந்த 10 ஆண்டுகளில், இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட விரிவான மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, புதிய தொழில் வளர்ச்சிக் கொள்கையை இந்த அரசு 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அறிவித்தது. இந்தப் புதிய கொள்கை, தற்போதுள்ள வலிமைகளை ஒருங்கிணைத்துப் போட்டியிடும் திறன் வளர்ச்சியை மேம்படுத்த உதவுவதைத் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. முதலீடுகளை ஊக்கப்படுத்துவதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வலுவூட்டுவதற்கான திட்டங்கள், பொதுத்துறை நிறுவனங்களைச் சீரமைத்தல், மற்றும் மாற்றியமைக்கப்பட்ட ஊக்குவிப்புகள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே செய்து கொள்ளப்பட்ட ஒத்திசைவு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, இரண்டாவது தகவல் தொழில் நுட்பப் பூங்காவை அமைப்பதற்காக தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO சிங்கப்பூரைச் சார்ந்த திருவாளர்கள் அசெண்டாஸ் ASCENDAS நிறுவனத்துடன் ஜுன் 2003–இல் கூட்டு முயற்சி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அடுத்த மூன்று மாதங்களில் இப்பூங்காவிற்கான பணிகள் தொடங்குமென இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். 450 கோடி ரூபாய் முதலீட்டில் மூன்று கட்டங்களாக இந்த உட்கட்டமைப்பு நிறைவேற்றப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓர் ரப்பர் தொழில் பூங்கா அமைக்கவும்; ஈரோட்டில் முற்றிலும் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய நெசவாலை அமைக்கவும்; ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு கண்ணாடி இழைத் தொழிற் சாலை அமைக்கவும்; தொழில் முனைவோர்களுடன் டிட்கோ கடந்த ஆறு மாதங்களில் கூட்டு முயற்சி ஒப்பந்தங்கள் செய்து கொண்டுள்ளது. 22.4.2003 ஆம் நாளன்று அடிக்கல் நாட்டப்பட்ட "டைசல் பயோ பார்க்" – TICEL Bio Park – இன் கட்டுமானப் பணிகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன.

சிறுசேரி தகவல் மற்றும் தொழில் நுட்பப் பூங்காவில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்குப் போதிய வீடு மற்றும் சமுதாய வசதிகளை அளிக்கும் வகையில், தனியார் துறையில் அந்நிய முதலீட்டு மேம்பாட்டுக் குழுமத்தால் (FIPB) அங்கீகரிக்கப்பட்ட முதல் தொழில் நகரியம் ஒன்றை அமைப்பதற்கு சிங்கப்பூரைச் சார்ந்த திருவாளர்கள் லீ கிம் தா ஹோல்டிங்ஸ் Lee Kim Tah Holdings என்ற நிறுவனத்துடன் ஓர் ஒத்திசைவு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்தப் பணிகளும் அடுத்த நான்கு மாதங்களில் தொடங்கப்பட்டு விடும்.

இம்மாநிலத்தில் சர்க்கரை ஆலைத் துறை சந்தித்து வரும் சிக்கல்களை உறுப்பினர்கள் அறிவீர்கள். பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளால் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் 15.7.2003 அன்று நிலுவையாயிருந்த 123 கோடியே 74 இலட்சம் ரூபாய் கரும்பு தொகை நிலுவை முழுவதும் பட்டுவாடா செய்யப் பட்டுள்ளது. இந்தச் சர்க்கரை ஆலைகளுக்கு கூடுதல் கடன் உத்தரவாதமும், இணைப்புக் கடன் வசதியும் வழங்கப்பட்டன. இவை எல்லாம் இந்த அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகள் காரணமாகத் தான் நடைபெற்றுள்ளன என்பதை மன நிறைவோடு குறிப்பிட விரும்புகிறேன்.

2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் நடைபெற்ற **"வியத்தகு இந்தியா 2003"**– Incredible India என்ற கண்காட்சியில் ஒரு பங்குதாரர் மாநிலமாக இம்மாநில அரசு கலந்து கொண்டது என்பதை அறிவதில் உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். மாநிலத்தின் இந்தப் பங்கேற்பு, மலேசியாவில் நல்ல விளம்பரத்தைப் பெற்றதோடு, சிறந்த பாராட்டையும் பெற்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தகவல் தொழில்நுட்பத் துறை**

2000–2001 ஆம் ஆண்டு 3,116 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி, 2002–2003 ஆம் ஆண்டில் 7,000 கோடி ரூபாயாக

உயர்ந்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உலகப் புகழ் பெற்ற தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களைத் தமிழ்நாட்டிற்கு வரவழைப்பதற்காக எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நாட்டின் தலை சிறந்த மூன்று தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களான Tata Consultancy Services, இன்ஃபோசிஸ் – Infosys மற்றும் விப்ரோ – Wipro ஆகியவை சென்னையிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் வளாகங்களை அமைத்துள்ளன. இதன் மூலம் கூடுதலாக 25,000 வேலை வாய்ப்புக்கள் உருவாகும்.

சோழிங்கநல்லூரில் அறிவுசார் நகரிய – Knowledge Industrial Township –ற்கான முதல் கட்டப் பணி எல்காட் நிறுவனத்தால் தொடங்கப்பட்டுள்ளது. இந்த அறிவு சார் நகரியம் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், பன்னாட்டு வணிகப் பள்ளிகள், வீட்டு வசதி மற்றும் பொழுது போக்கு போன்றவற்றிற்கு இட வசதிகளை அளிக்கும்.

தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலை நகரங்களை முன்னேற்றும் பொருட்டு எல்காட் நிறுவனம் கோயம்புத்தூர் தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் பணி தொடங்கியுள்ளது. தகவல் தொழில் நுட்பத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக் கழகத்தில் பாரதியார் பல்கலைக் கழக – எல்காட் நகரம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்ப வளாகங்களுக்காக தமிழ்நாட்டில் மூன்றாம் நிலை நகரமான ஓசூரின் உள்ளாற்றலை அதாவது potential – ஐ மதிப்பீடு செய்ய ஓர் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தகவல் தொழில் நுட்பத்தால் சாத்தியப்பட்ட சேவைகளுக்கான IT Enabled Services–க்கான வரைவு கொள்கையினை வலையில் இடம் பெறச் செய்த ஒரே அரசு தமிழ்நாடு அரசு தான்.

உலகத் தரம் வாய்ந்த தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களான 'ஆரக்கிள்' – 'Oracle' போன்ற நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு ஒப்பந்தங்கள் செய்துள்ளது. இது மின்–ஆளுமைக்கு e-Governance – க்கு ஒரு உந்துகையை அளிக்கும். ஆங்கிலம் தெரியாத மக்களும் மின்–ஆளுமையின் பயன் பெறும் வகையில் அனைத்து அரசு இணைய தளங்களும் எல்காட் மற்றும் தமிழ் இணைய பல்கலைக்கழகத்தால் இரு மொழி ஆக தமிழிலும் ஆங்கிலத்திலும் Bilingual – ஆக ஆக்கப்பட உள்ளன.

**உள்துறை**

நான் பதவியேற்ற பிறகு தமிழக காவல் துறையை அகில இந்திய அளவில் அதிநவீனமான, முதன்மையான காவல் துறையாகவும் இந்த நாட்டிலேயே மிக அதிகமான அளவில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் பங்கேற்கும் ஒரு காவல் படையாகவும் அமைத்திட நான் முயற்சிகள் எடுத்தேன். இந்த முயற்சிகளே தமிழகத்தில் தற்போது நிலவும் செம்மையான சட்ட ஒழுங்கு நிலைமைக்கு அடித்தளமாக விளங்குகின்றன.

2001–2003 ஆம் ஆண்டுகளில் 272 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்கு காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நடப்பு 2003–2004 ஆம் ஆண்டில் காவல்துறை நவீன மயமாக்குதல் திட்டத்தின் கீழ், 134 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளது. அகில இந்திய அளவிலேயே, காவல் துறையினை மேம்படுத்தும் செலவினங்களைச் செம்மையாக மேற்கொள்ளும் ஒரு சில மாநில அரசுகளில் தமிழக அரசும் ஒன்று என்பதைப் பெருமிதத்துடன் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

காவல் துறையை நவீனப்படுத்த, நவீன ரக ஆயுதங்கள், ஜீப்புகள், அதி வேக நுண்ணலைத் தகவல் தொடர்பு சாதனங்கள், வீடியோ காமிராக்கள், LAP-TOP கம்ப்யூட்டர்கள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

காவல் துறையில் பெண்களுக்கு உரிய இடத்தை அளிக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்குத் தக்கதொரு செயல்வடிவம் என்னால் கொடுக்கப்பட்டுள்ளது. இனியும் அது தொடர்ந்து நிலை நிறுத்தப்படும். ஏற்கனவே தொடங்கிச் செயல்பட்டு வரும் 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுடன், இந்த ஆண்டு மேலும் 40 மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு இந்த நிதி ஆண்டின் இறுதியில் தமிழ்நாட்டின் அனைத்து காவல் துறை உட்கோட்டங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையம் செயல்படும் திட்டம் நிறைவுபடுத்தப்படும். இந்தியாவிலேயே இந்த அளவிற்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயக்கப்படுவது தமிழ்நாட்டில் மட்டுமே என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

துன்பத்திற்கு ஆளாகும் பெண்களுக்கு உடனடியாக உதவிக்கரம் நீட்டும் "பெண்கள் உதவி தொலைத் தொடர்பு வசதி" WOMEN HELP LINE, 121 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும்; குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிப்பதைத் தடுக்க விரைந்து உதவிடும் "குழந்தைகள் உதவி தொலைத் தொடர்பு வசதி" CHILD HELP LINE 104 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு காவல் துறையின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தக்க சாதனையாக தமிழ் நாடு மகளிர் சிறப்பு

காவல் அணி WOMEN POLICE BATTALION 30.1.2004 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

கடுமையான பயிற்சிகளுடன் ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் துப்பாக்கி சுடுதல் போன்ற திறன்களிலும் சிறப்பான தேர்ச்சி பெற்ற "பெண்கள் கமாண்டோ படை" 2003–ஆம் ஆண்டு ஜூன் மாதம் என்னால் துவக்கி வைக்கப்பட்டது.

இந்தியாவிலேயே, தனியே மகளிர் சிறப்புக் காவல் அணி மற்றும் பெண் கமாண்டோக்கள் அணி ஆகியவற்றைக் கொண்ட ஒரே மாநிலக் காவல் துறை தமிழ்நாடு காவல் துறை தான் என்பது பெருமைக்குரியது.

பெண்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிப்பதற்கென, தனியே ஆறு மகளிர் நீதிமன்றங்கள் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு அவை வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன.

தேசிய நெடுஞ்சாலைகளில் தீவிர ரோந்துப் பணியை மேற்கொள்வதற்காக, நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட 80 டோயோடா குவாலிஸ் வாகனங்களை வழங்கி "நெடுஞ்சாலை ரோந்துத் திட்டம்" 23.8.2003 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது. 80 முக்கியமான தெரிவு செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளில் 24 மணி நேரமும் ரோந்துப் பணிகள் மேற்கொள்வதற்காக 160 காவலர் குழுக்கள் அமைக்கப்பட்டன. விபத்திற்கான அவசர சிகிச்சை மையங்களுடன், ஒருங்கிணைக்கப்பட்ட இந்த ரோந்துப் பணியின் செயல்பாடுகள் மிகவும் திருப்திகரமாக அமைந்துள்ளன என்பதை மன நிறைவுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

அமர்வு நீதிமன்றங்களில் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள வழக்குகளை முடிப்பதற்காக, எனது அரசு 49 விரைவு நீதி மன்றங்களை FAST TRACK COURT – களை அமைத்துள்ளது. இந்த நீதி மன்றங்களுக்கு இதுகாறும் மாறுதல் செய்யப்பட்ட 95,129 வழக்குகளில் 30.11.2003 வரையில் 65,451 வழக்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. அகில இந்திய அளவில் இந்த விரைவு நீதிமன்றங்களின் செயல்பாடு பாராட்டப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஏழை மக்கள் நீதியைத் தேடி நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதில்லை என்பது தற்போது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் தனியாக மாவட்ட அமர்வு நீதிமன்றம், கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்க தொடர் செலவாக 85.07 இலட்சம் ரூபாயும்; தொடரா இனச் செலவாக 38.66 இலட்சம் ரூபாயும் அனுமதித்து ஆணை வழங்கப் பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்காக 9 கோடியே 82 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளை மதுரையில் அமைப்பதற்காக தேவைப்படும் கட்டுமானப் பணிகளுக்கு 55 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் 13 ஆம் நாளன்று திறக்கப்பட உள்ள இந்த உயர் நீதிமன்றத்தின் கிளை தென் மாவட்ட மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பை நிறைவேற்றும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நெடுஞ்சாலைத் துறை**

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சாலை மேம்பாடு மற்றும் பராமரித்தலுக்கு தொலை நோக்குத் திட்டம் வகுக்கப்படாமல், உற்பத்தித் திறனற்ற செலவினங்கள் அதிகரிக்கப்பட்டு, சாலை பராமரிப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டது. இதனால் சாலைகள் பழுது அடைந்து, பேருந்துப் போக்குவரத்திற்குத் தடை ஏற்படும் நிலை ஏற்பட்டது. கிராமப் புற மக்கள் இடர்ப்பாடுகளுக்கு உள்ளாயினர்.

2001 ஆம் ஆண்டு என்னுடைய தலைமையிலான இந்த ஆட்சி பதவி ஏற்ற பின், தமிழகத்தை முதல் நிலை மாநிலமாக ஆக்கிட வேண்டுமென்ற குறிக்கோளுடன் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்த ஆணையிட்டேன். இதில் முக்கியமானது சாலை மேம்பாடு ஆகும்.

1995 ஆம் ஆண்டு எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், தமிழகச் சாலைகளை உலக வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்த திட்டமிட்டு செயல்பட்டேன். அதன் பின் வந்த திமுக ஆட்சி இதனைச் செயல்படுத்த எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் தற்போது என்னுடைய அரசின் சீரிய அணுகு முறையால் 2160 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டத்திற்கு அண்மையில் உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தில் 750 கி.மீ. நீளமுள்ள சாலைகளை இருவழித் தடமாக மேம்படுத்தவும்; 2,000 கி.மீ. நீளமுள்ள மாநில மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளைப் பராமரிப்பதற்கும்; நகரங்களின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 14 புறவழிச் சாலைகள் அமைக்கவும்; வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்க 12.2.2004 ஆம் நாளன்று உலக வங்கி குழுவுடன் இணைந்து திட்டச் செயலாக்கக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதன் பின்னர் பணிகள் உடனடியாக துவங்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய கைலாஷ் முதல் மாமல்லபுரம் வரையிலான **47** கி.மீ. நீள சாலைப் பகுதியை, தகவல் தொழில் நுட்ப துரித வழிச்சாலை – IT Express Way – ஆக மேம்படுத்த நான் ஆணைகள் வழங்கியுள்ளேன். இந்த விரைவுப் பாதை **6** வழித் தடங்களைக் கொண்டதாகவும்; **2** மீட்டர் அகலம் கொண்ட மத்திய பகுதியுடன் வடி நீர்க் கால்வாய்கள், மழைநீர் சேகரிப்பு அமைப்பு சேவை நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் சேவைக் குழாய்கள் மற்றும் உறுதியான புருவங்கள் கொண்டதாகவும் இருக்கும். உலகத் தரம் வாய்ந்த இந்த விரைவுச் சாலை பல கணினி மற்றும் மென்பொருள் நிறுவனங்கள் இம்மாநிலத்தில் தொடங்கப்படுவதை ஊக்குவிக்கும். சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த **50** கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் **55** பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

வரும் மார்ச் திங்களில், கும்பகோணத்தில் நடைபெறவுள்ள மகாமகம் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகருக்கு **24** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று பாலங்கள் உள்ளிட்ட **8.7** கி.மீ. நீளமுள்ள புறவழிச் சாலை அமைக்கும் பணியும்; கும்பகோணம் நக்ரைச் சுற்றியுள்ள **120** கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகளை, **12** கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணியும்; போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவு பெறும் நிலையில் உள்ளன.

எண்ணூர்–மணலி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **161** கோடி ரூபாய் மதிப்பீட்டில் எண்ணூர் துறைமுகம் மற்றும் சென்னைத் துறைமுகத்திற்கு வாகனங்கள் நெரிசல் இன்றி சென்று வரும் வகையில் உள் வட்டச் சாலை; மணலி எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை; திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலை; மற்றும் எண்ணூர் சாலை ஆகியவற்றை அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் கிராமச் சாலை இணைப்புத் திட்டத்தின் கீழ், **716** கி.மீ. நீளச் சாலை மேம்படுத்தும் பணிகளும்; **20** பாலங்கள் கட்டும் பணிகளும்; நபார்டு நிதி உதவியுடன் **121** கோடியே **37** இலட்சம் ரூபாய் மதிப்பில் எடுத்துக்கொள்ள ஆணைகள் வழங்கப்பட்டுச் செயலாக்கத்தில் உள்ளன.

முதலமைச்சரின் சிறப்பு சாலைப் பழுது பார்ப்புத் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் **275** கோடி ரூபாய் மதிப்பில் **5,549** கி.மீ. நீள சாலைப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

நடப்பாண்டில் பேருந்துப் போக்குவரத்திற்கு தகுதியற்ற நிலையிலுள்ள **3,000** கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகளை **150** கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்தும் பணிகள் ஹட்கோ நிதி உதவியுடன் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மேலும் பழுதடைந்த **3,492** கி.மீ. மாவட்ட இதர சாலைகளை **186** கோடி ரூபாய் மதிப்பிலும்; மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை மேம்படுத்திட **121** கோடி ரூபாய் மதிப்பில் முதலமைச்சரின் சிறப்பு சாலை பழுது பார்ப்புத் திட்டத்தின் கீழ் ஆணைகள் வழங்கப்பட்டுப் பணிகள் துவங்கப்படவுள்ளன.

நாட்டின் நான்கு பெருநகரங்களையும் இணைக்கும் தங்க நாற்கரத் திட்டம் மற்றும் வடக்கு – தெற்கு இணைக்கும் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் மொத்தம் **1,699** கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

நாகப்பட்டினம் துறைமுகத்தை **5** கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாடு செய்ய முடிவெடுக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

தமிழக மக்களின் நீண்ட நாள் கனவான சேது சமுத்திரத் திட்டத்தை விரைந்து செயல்படுத்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பாரத பிரதமரிடம் **2.2.2004** அன்று கோரிக்கை வைத்தேன். இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டதாக மாண்புமிகு பிரதமர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**1996** முதல் **2001** வரை ஆன கடந்த திமுக ஆட்சியில், சாலைகள் மற்றும் பாலங்களுக்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகை **3,192** கோடி ரூபாய் தான். ஆனால் கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் எனது அரசு செலவிட்ட தொகை **2,518** கோடி ரூபாய் ஆகும். மேலும் **2,160** கோடி ரூபாய் மதிப்புள்ள தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்பில் சிறப்புடன் செயல்பட்டு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் தொழில் முனைவோரும், முதலீட்டாளர்களும் தமிழகத்தை முதன்மை இடமாகத் தெரிவு செய்து பெருமளவில் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ்நாடு மின்சார வாரியம்

**1996** முதல் **2001** – ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் **561** மெகாவாட் அளவிற்கு தான் மின்சார நிறுவு திறன் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது. மேலும் எதிர்காலத்திற்குத் தேவையான உருப்படியான கூடுதல் மின் உற்பத்தித் திட்டங்கள் எதுவும் தி.மு.க. அரசால் நிறைவேற்றப்படவில்லை. **2001** மே மாதம் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, இது நாள் வரை **902** மெகாவாட் அளவிற்கு மின்சார நிறுவு திறன்

சேர்க்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போல் கடந்த தி.மு.க. ஆட்சியில் 256 மெகாவாட் திறனுள்ள காற்றாலைகள் மட்டுமே இயக்கி வைக்கப்பட்டன. எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின் இதுவரை 353 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

போதுமான அளவில், தரமான மின் உற்பத்தித் திறன் ஏற்பட இந்த அரசு வழிவகை செய்துள்ளதால் மின் வெட்டே இல்லாத மாநிலமாக தமிழ் நாடு திகழ்கிறது. எனவே, தொழில் முனைவோர் விரும்பி வரும் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

1,000 மெகாவாட் திறனுள்ள அனல் மின் நிலையம் ஒன்றை வட சென்னையில் நிறுவ தேசிய அனல் மின் கழகத்துடன் – NTPC உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் 1000 மெகாவாட் திறன் உள்ள அனல் மின் நிலையம் ஏற்படுத்த நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்துடன் N.L.C – உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கூடங்குளத்தில் 2,000 மெகாவாட் திறன் உள்ள அணு மின் நிலையம் நிறுவ அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத 154 குக்கிராமங்களில் மொத்தம் 10 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் சூரிய ஒளி சாதனங்கள் மூலம் சுமார் 7100 குடியிருப்புகளுக்கு மின் விளக்கு வசதி விரைவில் செய்து முடிக்கப்படும். மேலும், மொத்தம் 17 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 250 குக்கிராமங்களில் உள்ள 10,000 குடியிருப்புகளுக்கு மின் விளக்கு வசதி செய்து தரும் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்போது நான் சொல்வதை கவனமாக கேட்க வேண்டும். இதன் மூலம் 2012–ல் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி என்ற தேசிய இலக்கினை தமிழ் நாடு 2005 ஆம் ஆண்டிலேயே அதாவது அடுத்த ஆண்டிற்குள்ளாகவே எய்திவிடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஊரக வளர்ச்சித் துறை**

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கடந்த இரண்டரை ஆண்டுகளில் 11 இலட்சத்து 93 ஆயிரத்து 135 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இது ஒரு புதிய சாதனை ஆகும்.

- ஊரக வளர்ச்சித் துறையின் மிகச் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக மத்திய அரசின் நிதி உதவிகளைப் பயன்படுத்துவதில் 2002–2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், மத்திய அரசிடமிருந்து 71 கோடியே 47 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி பெறப்பட்டுள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினை விட 13.40 சதவீதம் கூடுதலாகும்.
- ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 12 கோடியே 61 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதியாகப் பெறப்பட்டது. இது வழக்கமான ஒதுக்கீட்டினை விட 6.64 சதவீதம் கூடுதலாகும்.
- ஸ்வர்ண ஜயந்தி கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் பாராட்டத் தக்க செயல்பாடுகள் காரணமாக 5 கோடியே 92 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி மைய அரசிடமிருந்து பெறப்பட்டது. இது வழக்கமான ஒதுக்கீட்டினை விட 16 சதவீதம் கூடுதலாகும். இப்போது நான் சொல்வதை கவனமாக கவனியுங்கள்.
- பிரதம மந்திரி சாலைகள் திட்டத்தின் கீழ், 119 கோடியே 78 இலட்சம் ரூபாய் கூடுதல் ஒதுக்கீடாகப் பெறப்பட்டுள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினை விட 75 சதவீதம் கூடுதலாகும்.

இவை அனைத்தும் எனது அரசின் விரைந்த செயல்பாட்டுக்கும், சிறந்த செயல்பாட்டுக்கும் நிதர்சனமான நிரூபணமாகும்.

**ஆதிதிராவிடர் நலத் துறை**

கடந்த 2001 ஆம் ஆண்டில் நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நேரத்தில் தமிழ் நாட்டில் மொத்தம் இருந்த 1,076 ஆதி திராவிட மாணவ – மாணவியர் விடுதிகளில் பாதிக்கும் மேலான விடுதிகள், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், 574 விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்பதை அறிந்தேன். சிறிய வாடகைக் கட்டடங்களில் செயல்படுவதால், தண்ணீர் வசதி இன்றி, கழிப்பறை வசதி இன்றி, மின்சார வசதி இன்றி ஏற்படும் இன்னல்களை தீர்ப்பதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் 316 மாணவ மாணவியர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் சொந்த கட்டடங்கள் உருவாக்க 99 கோடியே 54 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தேன். இவற்றில் 140 விடுதிகளுக்குப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள விடுதிகளுக்கான சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணியை விரைவில் முடித்திட வேண்டும் என்று ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர் படிப்பைப் பாதியில் நிறுத்திவிடும் நிலையைத் தவிர்க்கவும்; அவர்கள் பள்ளிக்கு உரிய நேரத்தில் சென்றடைய ஏதுவாக, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கும் உன்னதமான திட்டத்தை கொண்டு வந்தேன். கடந்த 3 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ், 22 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பில் 1,52,698 மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பெண்கள் சமத்துவம் பெற வேண்டும் என்ற நோக்குடன் மானியம் மற்றும் கடன் உதவியுடன் 70 கோடி ரூபாய் செலவில் நிலம் வாங்கும் ஒரு புரட்சிகரமான திட்டத்தினை எனது அரசு அறிவித்துள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், 6000 ஆதிதிராவிடர் மகளிரும், 1000 பழங்குடியின மகளிரும் ஆக மொத்தம் 7000 மகளிர் பயனடைவார்கள்.

இதனால் ஒவ்வொரு பயனாளிக்கும் 5 ஏக்கர் வரை புன்செய் நிலம் அல்லது 2.5 ஏக்கர் வரை நன்செய் நிலம் வாங்க அதிகபட்சமாக ஒரு லட்ச ரூபாயும்; நிலத்தினை மேம்படுத்துதல், நீர் ஆதாரம் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற விவசாயம் சார்ந்த பிற தொழில்களுக்காக அதிக பட்சமாக ஒரு இலட்ச ரூபாயும், ஆக மொத்தம் 2 இலட்சம் ரூபாயில் பாதி மானியமாகவும், பாதிக் கடனாகவும் வழங்கப்படும்.

மேலும் நிலம் வாங்கும் பயனாளிகள் நிலத்தினைப் பத்திரப் பதிவு செய்யும் பொழுது முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணத்தில் 75% விலக்கு அளிக்கப்படும். இத்திட்டப் பயனாளிகளுக்கு, தமிழ்நாடு மின்சார வாரியம், முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கும். அவ்வாறு வழங்கும் ஒவ்வொரு மின் இணைப்பிற்கும், தாட்கோ 10,000 ரூபாய் மானியமாக மின்சார வாரியத்திற்கு வழங்கும். இத்திட்டத்தின் மூலம் ஆதிதிராவிட பழங்குடியின மகளிர் பொருளாதார மேம்பாடு அடைவதால், அவர்தம் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**போக்குவரத்து**

13.12.2003 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் பேருந்தில் மன்னார்குடியிலிருந்து திருவாரூருக்குப் பயணம் செய்துகொண்டிருந்த மூன்று வயதுச் சிறுமி செல்வி கௌசல்யா மரணம் அடைந்த துயர சம்பவம் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதை முற்றிலும் தடுக்கும் வகையில், உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று நான் ஆணையிட்டேன். அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான ஒவ்வொரு வாகனமும் 100 சதவிகிதம் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும்; கண்டறியப்படும் பழுதுகள் உயர் அதிகாரிகளின் கண்காணிப்பில் பழுது பார்க்கப்பட வேண்டுமென்றும்; குறைபாடுள்ள அனைத்துப் பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை உடனடியாக வாங்க வேண்டுமென்றும் ஆணையிட்டேன். பயணம் செய்யும் பொதுமக்களின் பாதுகாப்பு எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக் கொடுக்கப்படக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவையும் நான் வழங்கியுள்ளேன்.

அதன் அடிப்படையில் பயணம் செய்யும் பொது மக்களின் பாதுகாப்பினைக் கருதி, ஒவ்வொரு பேருந்தின் முழுத் தகுதிப்பாட்டை உறுதி செய்யும் பொருட்டு 6,000 பேருந்துகளின் இயந்திரப் பழுது மற்றும் கூண்டுப் பழுது பார்க்கும் பணிகளுக்காக போக்குவரத்துக் கழகங்களுக்கு 30 கோடி ரூபாய் என்னால் ஒதுக்கீடு செய்யப்பட்டு உடனடியாக அத்தொகை விடுவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பழைய பேருந்துகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்த பழுதுபட்ட பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்குவதற்கான உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். அதன்படி, 2005 மார்ச் மாதத்திற்குள் 2 கட்டங்களில் 2,500 புதிய பேருந்துகள் வாங்கப்படும். இவற்றில் முதல் கட்டமாக 1,050 பேருந்துகள் விரைவில் வாங்கப்படும்.

**விளையாட்டுத் துறையில் வியத்தகு சாதனைகள்**

வலிமை மிக்க தமிழகத்தை, அறிவாற்றல் மிக்க தமிழகத்தை உருவாக்கிட தமிழகத்தின் இளைஞர்கள் விளையாட்டுகளிலும், உடல் திறன் பயிற்சிகளிலும் சிறந்து விளங்கும் வகையில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குத் தனி அக்கறை காட்டி ஊக்கம் அளித்து வருகிறேன்.

விருதுநகரில் ஹாக்கி அகாடமி, திண்டுக்கல்லில் வாலிபால் அகாடமி, சென்னையில் ஸ்குவாஷ் விளையாட்டு அரங்கம் மற்றும் ஸ்குவாஷ் அகாடமி; சென்னை பேசின் பிரிட்ஜில் நலிந்த பிரிவு சமுதாயத்தினரிடையே மேஜைப் பந்து – TABLE TEN-



NIS விளையாட்டை மேம்படுத்த மேஜைப் பந்து அகாடமி; செய்லிங் அகாடமி, சென்னை புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கிரிக்கெட் அகாடமி ஆகிய திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

கிராமப் பகுதிகளில் இளைய தலை முறையினரின் நேரத்தையும், சக்தியையும் ஒருமுகப்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இளைஞர் மன்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று நான் அறிவித்து ஆணையிட்டிருந்தபடி, இதுவரை 300 இளைஞர் மன்றங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில அளவிலான பள்ளிகளிடையே – Inter-School விளையாட்டுப் போட்டிகளில் இதுவரை இருந்து வந்த 9 வகையான விளையாட்டுகளுடன் இந்த ஆண்டில் புதியதாக ஸ்குவாஷ், குத்து சண்டை, வாள் சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் நீச்சல் முதலான ஐந்து விளையாட்டுகளை அறிமுகப்படுத்திப் போட்டிகள் நடத்தப்பட்டன. இது தொடரும் !

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், ஒலிம்பிக்ஸ் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் பெற்றால் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்க என்னுடைய அரசு ஆணையிட்டுள்ளது. இதன் அடிப்படையில் 123 விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு, இன்று வரை என்னுடைய அரசு 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கியுள்ளது.

பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில், இதுவரை 28 தங்கப் பதக்கங்களையும், 14 வெள்ளிப் பதக்கங்களையும், 4 வெண்கலப் பதக்கங்களையும், தமிழ்நாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் வென்றுள்ளனர். தேசிய அளவிலான போட்டிகளில், 134 தங்கப் பதக்கங்களையும், 98 வெள்ளிப் பதக்கங்களையும், 70 வெண்கலப் பதக்கங்களையும், தமிழ்நாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் வென்றுள்ளனர் என்பதை மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சாதனைக்கு முக்கிய காரணம் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு எனது அரசு அளித்து வரும் ஆக்கமும் ஊக்கமுமே ஆகும்.

விளையாட்டு வீரர்களை, வீராங்கனைகளை அங்கீகரிக்கும் வகையில் சீருடைப் பணித் துறைகளான காவல் துறை, சிறைத் துறை, வனத் துறை ஆகிய துறைகளின் பணிகளுக்கான தேர்வில் 10 சதவீத ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளேன்.

சேம்பியன்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 53 விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் பயன் அடைந்து வருகின்றனர். அவர்களுக்கு இதுநாள் வரை 21 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சர்வதேச ATP டென்னிஸ் போட்டிகள் சென்னையை விட்டு வேறு மாநிலத்திற்கு செல்லக் கூடிய அபாயம் உருவானதை அடுத்து, இந்தப் போட்டிகளைச் சென்னையிலேயே தொடர்ந்து நடத்த உரிய வசதிகளையும், வாய்ப்புகளையும் நான் உருவாக்கித் தந்துள்ளேன். இதற்கென ஆதரவாளர் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கவும், தமிழ் நாடு அரசு இதில் இணை ஆதரவாளராக இருந்து ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் உதவி வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன். இனிமேல் 'சென்னை ஓப்பன்' என்ற பெயரில் இந்த சர்வதேச டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் தொடர்ந்து நடைபெறும்.

உலகத் தரத்துடன் கூடிய, விளையாட்டுக் கட்டமைப்புகளை நான் உருவாக்கியதன் விளைவாக, 'சாம்பியன்ஸ் கோப்பை' சர்வதேச ஹாக்கி போட்டி அடுத்த ஆண்டு, அதாவது 2005–இல் சென்னையில் நடைபெற உள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் தமிழ் நாட்டில் உடற் பயிற்சிக் கல்வியையும், விளையாட்டு களையும் வளர்ப்பதற்கென்று இந்தியாவிலேயே முதன் முதலாகத் தனித்தொரு புதிய பல்கலைக்கழகம் உருவாக்க ஆணையிட்டுள்ளேன் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இலவச சேலை மற்றும்
வேட்டி வழங்கும் திட்டம்**

15.8.2003 அன்று நடைபெற்ற 57 – ஆவது சுதந்திர தின விழாவின் போது, நிதி நெருக்கடியின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலவச வேட்டி சேலை திட்டம் நிதி நிலை ஓரளவு முன்னேற்றம் அடைந்துள்ள நிலையில் 2004 ஆம் ஆண்டு முதல் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று நான் அறிவித்தேன்.

இத்திட்டத்தின் மூலம் முதலில் 81 இலட்சம் பாலிகாட் சேலைகளையும், 74 இலட்சம் பாலிகாட் வேட்டிகளையும், 120 கோடி ரூபாய் செலவில் இலவசமாக வழங்குவதற்கு நான் ஆணையிட்டிருந்தேன். ஆனால், ஆங்காங்கே வாழுகின்ற மேலும் சில ஏழை எளிய மக்களும் இந்த இலவச வேட்டி சேலைப் பெறுவோர் பட்டியலில் தாங்களும் சேர்க்கப்பட வேண்டும் என்று விடுத்த நியாயமான கோரிக்கை எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து ஏழை எளிய மக்களும் இந்த இலவச வேட்டி சேலைத் திட்டத்தின் கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும்; ஏழை எளிய மக்கள் எவரும் இலவச வேட்டி சேலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்து விடக் கூடாது என்பதற்காகவும்; இத்திட்டத்தை மேலும் விரிவாக்க நான் முடிவு செய்தேன். இந்த அடிப்படையில், பொது விநியோகத் திட்டத்தில் அரிசி பெறும் கூப்பன் பெற்றுள்ள அனைவருக்கும் இலவச வேட்டி சேலைகளை வழங்குமாறு நான் உத்தரவிட்டேன்.

இத்திட்டத்தின் கீழ், 1 கோடியே 11 இலட்சம் பாலிகாட் சேலைகளையும், 1 கோடியே 11 இலட்சம் பாலிகாட் வேட்டிகளையும் விநியோகம் செய்ய ஆணையிட்டு உள்ளேன். இதன் மூலம் 2 கோடியே 22 இலட்சம் ஏழை மக்கள் பயன் அடைவார்கள். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை, 173 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தி வழங்கியுள்ளேன். இத்திட்டத்திற்கு தேவையான பாலிகாட் சேலைகள், கைத்தறித் துறையின் கீழ் இயங்கும் 350 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 85 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இது நாள் வரை 76 இலட்சம் வேட்டிகளும், 74 இலட்சம் சேலைகளும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள வேட்டி சேலைகளை 10.3.2004–க்குள் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நிறைவுரை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதங்களில் பங்கு பெற்று ஆக்கபூர்வமான கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கி இருக்கிறார்கள். சிலர் குறை கூறியிருக்கிறார்கள். நான் இதுவரைக்கும் அளித்துள்ள விளக்கங்கள் எனது அரசின் நிலைப்பாட்டைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்ற சான்றுகளாகும். தமிழகம் வளர்ச்சிப் பாதையில் முதலிடம் நோக்கி விரைந்து செல்வதற்கு ஏற்ற நிரூபணங்கள் ஆகும். மாண்புமிகு உறுப்பினர்கள் சிலருக்கு இந்த உண்மைகளை ஒத்துக்கொள்ள மனம் இல்லா விட்டாலும், மக்கள் மன்றம் இவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறது; எனது தலைமையிலான அரசின் மீது மகத்தான நம்பிக்கை வைத்திருக்கிறது. அந்த நம்பிக்கையை முழுக்க முழுக்க நிறைவேற்றுவதே எனது குறிக்கோள் ! இந்த அரசின் குறிக்கோள் !

நாங்கள் என்றும் மக்கள் பக்கம் !
அதனால் மக்கள் என்றும் எங்கள் பக்கம் !
எனவே வெற்றி என்றென்றும் எங்கள் பக்கம் !

– என்று தெரிவித்துக் கொண்டு எனது உரையை நிறைவு செய்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

– தமிழ்நாடு சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதில் அளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 10.2.2004 அன்று ஆற்றிய உரை.

* * *

# மத்திய அரசின் வரி வருவாயில்
# மாநில அரசுகளுக்கு 50 சதவிகிதம் நிதி ஒதுக்க வேண்டும்

– 12ஆவது நிதிக்குழுக் கூட்டத்தில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உரை




தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ள 12ஆவது நிதிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நிதிக்குழுவின் முன்னிலையில் பொது நிதி நிருவாகம், மத்திய மாநில நிதி உறவுகள் மற்றும் தமிழ்நாடு எதிர் நோக்கியுள்ள சில குறிப்பிடத்தக்க பிரச்சினைகள் குறித்த எங்களுடைய கருத்துக் களையும் கருத்துருக்களையும் இக்குழுவின் முன் எடுத்து வைக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்று. நீண்ட விளக்கமான குறிப்புகள் மற்றும் நிதிநிலை குறித்த சூழல் என்னவென்று நாங்கள் ஏற்கெனவே அளித்துள்ள எங்களுடைய அறிக்கையில் உள்ளது. அதில் குறிப்பிடப் பட்டுள்ளவை பற்றியே விவாதம் நடைபெறும் என்பதிலும் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்த நிலையில் கடந்த 2001ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் என்னுடைய தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இருந்த கடுமையான நிதிப் பற்றாக்குறை பிரச்சினை குறித்து உங்கள் அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வர விழைகின்றேன்.

கடந்த 1998ஆம் ஆண்டு 5ஆவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும் அதனைத் தொடர்ந்து மாநில அரசின் 6ஆவது ஊதியக் குழு அறிக்கையின் அடிப்படையிலும் மிகப்பெரிய அளவில் நிதிச்சூழல் வீழ்ச்சி அடையத் துவங்கியது. இது கடந்த 2000–2001ஆம் ஆண்டு 11ஆவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேலும் நிதிச்சூழ்நிலையை மோசமடையச் செய்து தமிழ்நாடு மிகவும் கடுமையான நிதிச் சூழலால் பாதிக்கப்பட்டது. கற்பனை செய்ய முடியாத அளவிற்குக் கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டது. இதுபோன்ற நிதி நெருக்கடி முன்னெப்போதும் இருந்திராத வகையில் இருந்ததோடு உண்மையிலேயே அரசின் அனைத்து செயல்பாடுகளையும் முடக்கி வைக்கும் அளவிற்கு மிகவும் மோசமான சூழ்நிலையை உருவாக்கியது. நான் இந்த சூழ்நிலை குறித்து ஆராய்ந்து அதனைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு பரந்த அளவிலான நிதிச் சீர்திருத்தத் திட்டத்தை அமல்படுத்தினேன். இந்த பரந்த நிதிச் சீர்திருத்தத்தில் அத்தியாவசிய செலவினத் துறைகளைத் தேர்ந்தெடுப்பதில் மீண்டும்

ஒருமுறை ஆய்வு மேற்கொண்டு அவற்றை நெறிமுறைப்படுத்தியதோடு வருவாய் இனங்களுக்கான ஆதாரங்களை அதிகரிக்கவும் தேவையான நடவடிக்கையை மேற்கொண்டேன். இந்த கடுமையான தைரியமான நடவடிக்கைகளின் விளைவாக வளர்ச்சிப் பாதையில் இருந்து விலகிய தமிழ்நாடு, திட்டமிட்ட வளர்ச்சிக்கான பாதையில் மீண்டும் கொண்டுவரப்பட்டது.

இதன் அடிப்படையில் நான் எடுத்த நடவடிக்கைகளின் விளைவுகளின் அடிப்படையிலும் நிதிச் சீர்திருத்தம் குறித்த மாநில முதல்வர்களின் மாநாடு கடந்த அக்டோபர் 18, 2002 அன்று புதுடெல்லியில் நடைபெற்றபோது இதுகுறித்து விவாதித்து, தேசிய அளவில் ஓர் ஒத்த கருத்து உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன். ஆனால் துரதிருஷ்டவசமாக இதுவரை பல்வேறு வாய்ப்புகள், சூழ்நிலைகள் இருந்த போதிலும் அப்படி ஒரு முடிவுக்கு வரத் தவறிவிட்டோம். நிதிச்சீர் திருத்தத்தில் எங்களுடைய தனிப்பட்ட கொள்கைகளால் மட்டும் வெற்றி பெறவில்லை, மாறாக மிகப்பெரிய அளவில் இணைந்து எடுத்த முயற்சிகளின் விளைவாகவும் குறிப்பிட்ட அளவிற்கு நிலைமையை சீர்செய்ய முடிந்தது. இந்த நிதிச் சீர்திருத்தத்தில் எங்களுக்கு எவ்வித ஆதரவும் கிடைக்கவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

11ஆவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிதிச் சீர்திருத்தங்களை செய்வதற்கான வசதிகள் மற்றும் முகாந்திரங்கள் மிகவும் கடினமான அளவில் இருந்தன. இன்னும் சில இடைக்கால சீரமைப்புத் திட்டங்களைச் செயல் படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளோம். அவற்றையும் மற்ற பெரிய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு 12ஆவது நிதிக்குழு உதவும் என்று நான் நம்புகிறேன். நாட்டிலேயே நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி அளவில் வரிவருவாய் உயர்ந்த இடத்தில் தமிழ்நாடு உள்ளது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அதில் உங்களுக்கு எந்தவித சந்தேகமும் இருக்காது என்று நான் நம்புகிறேன். இதன்மூலம் நாங்கள் எந்த அளவிற்கு வரிச் சீர்திருத்தங்களை சிறப்பாக செய்திருக்கிறோம் என்பது தெள்ளத் தெளிவாகின்றது.

இந்தக் கடுமையான முயற்சியின் விளைவாக தற்போது வருவாய் பற்றாக்குறை கணிசமான அளவு குறைந்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக நாங்கள் எடுத்த துணிச்சலான நடவடிக்கையின் காரணமாக செலவினங்களைக் கட்டுப்பாட்டில் கொணர்ந்துள்ளோம். இதனைச் செயல்படுத்துவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். எங்கள் முன்னால் கடுமையான சவால்கள் இருந்தபோது நாங்கள் எதையும் எதிர் பார்க்காமல் துணிச்சலாக அவற்றை செயல் படுத்தினோம். இதனைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு நிதிப் பொறுப்பு சட்டத்தை கொண்டு வந்ததோடு எதிர்காலத்தில் நிதிப் பற்றாக்குறை சூழல் உருவாவதைத் தடுத்துள்ளோம். இதோடு மட்டும் நின்றுவிடாமல் இன்னும் எங்கள் முன் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் நாங்கள் தீவிரமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

சில அடிப்படையான பிரச்சினைகள் குறித்து தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இவற்றில் முதன்மையானதும் முக்கியமானதும் மத்திய வருவாயை மாநில அரசுக்கு பகிர்ந்தளித்தலாகும்.துரதிருஷ்டவசமாக கடந்த சில நிதிக்குழுக்கள் மாநில அரசுகளின் ஆதாரங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகளைக் கவனத்தில் கொள்ளாமல் சமச்சீர் இல்லாத வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளன. காலம் தாழ்த்தாமல் இந்த செயல் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

கடந்த 1991ஆம் ஆண்டு புதிய சந்தைப் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்திய பின்னர் ஒரு புதிய பரிணாம வளர்ச்சிக்கு நம்மை நாம் கொண்டு செல்ல வேண்டுமென்று முடிவெடுத்தோம். அதன் அடிப்படையில் வளர்ச்சித் திட்டப் பணிகளில் மாநில அரசுகளை அதிக அளவில் பங்கேற்கச் செய்வதுடன் மத்திய அரசு தன்னுடைய செயல்பாடுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் ஆகும். சமூகப் பாதுகாப்பு உறுதி வளையத்தை உருவாக்கித் தருவது, கல்வி, சுகாதாரம், உணவுப்பாதுகாப்பு நலன் மற்றும் ஊட்டச்சத்து ஆகிய துறைகளில் முதலீடு செய்வது, இரண்டாம் கட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி மாநிலத்தை வளர்ச்சியடையச் செய்வதோடு முதலீட்டுக்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்குவது மாநில அரசுகளின் கடமையாகும். மேலும் மாநிலங்கள் சர்வதேச தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான முதலீட்டை முதலீடு செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு மாநில அரசுகள் மக்களோடு மிக நெருங்கிய அளவில் அவர்களது அன்றாட வாழ்க்கையோடு இணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகும்.

தற்போதைய நிதிக்குழுவால்கூட இவையெல்லாம் கருத்தில் எடுத்துக் கொள்ளப் படாதது துரதிருஷ்டவசமான ஒன்றாகும். நிதி ஆதாரங்களைப் பொறுத்தமட்டில் மாநில அரசுகளுக்கு ஆதாரங்கள் திரட்டுவதற்குண்டான எந்தவித வாய்ப்புகளும் விட்டு வைக்கப்படவில்லை. சேவை வரியைப் பொறுத்த




மட்டில் சட்டப்பூர்வமான சேவை வரி வசூலிக்கும் உரிமை மாநில அரசுகளுக்கு உரியது என்று அரசியலமைப்புச் சட்டத்தில் மாநில அரசுகளுக்கான பட்டியலில் இடம்பெற்றிருந்தாலும் அதையும் மத்திய அரசின் பட்டியலுக்கு மாற்றியுள்ளனர். இதனை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம். மத்திய மாநில அரசுகள் புதிய வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்குத் தேவையான ஒரு மாதிரித் திட்டத்தை நாடு முழுவதும் ஒருங்கே இணைந்து செயல்படுத்தத் தேவையான முற்றிலும் கட்டுப்படுத்தப்படாத மறு ஆய்வினை மேற்கொண்டு ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் உங்களை கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஒரு முடிவு எடுக்கப்படும் பட்சத்தில் மத்திய அரசின் மொத்த வரி வருவாயிலிருந்து மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் வரி வருவாயின் அளவு 50 சதவிகிதமாக அமைவது தவிர்க்க முடியாததாக அமையும் என்பதில் நான் மிகுந்த உறுதியுடன் இருக்கிறேன்.

இரண்டாவது – அம்சமாக, வரிவருவாயை மாநில அரசுகளுக்கு அதன் தொகுப்பிலிருந்து பகிர்ந்தளிக்கும் முறையை அமல்படுத்த வேண்டும். 11ஆவது நிதிக்குழுவின் · 2000 –2005ஆம் ஆண்டுக்கான கலந்துரையாடல் தமிழ்நாட்டிற்கு மிகப் பெரிய அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. மொத்த வரித் தொகுப்பில் எங்களுடைய பங்கை 1.252 சதவிகிதம் அதாவது ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் பார்க்கும்போது 18.86 சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைத்திருப்பது மற்ற எந்த மாநிலங்களுக்கும் இதுபோன்ற ஒரு கடுமையான நிதிக்குறைப்பை செய்யவில்லை. இந்த நியாயமற்ற நேர்மையற்ற செயல்முறை எனக்கு முற்றிலும் மனவருத்தத்தை அளித்துள்ளது. இந்த முறை உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். நிதிக்குழு என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் ஓர் அங்கமாகும். அது பாரபட்சமற்ற வகையில் தெளிவான நெறிமுறைகளின் அடிப்படையில் செயல்படவேண்டும் என்பதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கடந்த காலங்களில் வளர்ச்சி பெறாத மாநிலங்களுக்கு அதிக ஊக்கமும் வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்குத் த்ண்டனையும் வழங்குவதற்கு ஏற்ற சூழல் இருந்து வந்துள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 275ஆவது பிரிவின்படி மிகவும் பின்தங்கிய மாநிலங்களுக்கு அதிகப்படியான நிதி ஒதுக்குவதற்கு நிதிக்குழுவுக்கு இந்த சட்டப்பிரிவு வழிவகை செய்கிறது. அரசியலமைப்புச் சட்டம் 270ன் கீழ் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்த பின்னரும் இதில் வழிவகை உள்ளது. அரசியலமைப்புச் சட்டம் 270ன்கீழ் பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பதற்கான நெறிமுறைகள் நியாயமானதாகவும் மற்றும் எளிதான வகையிலும் உள்ளன.

இங்கே சில ஆலோசனைகளை வழங்கலாம் என்று நினைக்கிறேன்.

அதாவது, 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 40 சதவிகிதமும்,

மாநில அரசுகளின் வரிவருவாய் அதனுடைய நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி அளவின் அடிப்படையில் 40 சதவிகிதமும், தனி நபர் மாநில உள்நாட்டு உற்பத்தி அளவின் அடிப்படையில் 10 சதவிகிதமும், ஊக்கத்தொகை அடிப்படையில் 10 சதவிகிதம் என்ற வகையில் வழங்கலாம். ஒவ்வொரு மாநிலங்களுக்கும் ஒவ்வொரு வகையான காலச் சூழ்நிலைகள் ஏதுவாக அமைந்திருக்கும். ஆனால் என்னுடைய ஆலோசனைகள் எல்லாம் தேசிய நலனின் அடிப்படையிலானதுதான். சிறப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு விருதுகள் வழங்கி கவுரவிப்பதும், மோசமாக செயல்படும் மாநிலங்களுக்குத் தங்களின் செயல்பாடுகள் மூலம் பாடங்களைக் கற்றுக் கொள்வதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்கித் தரவும் வேண்டும்.

இந்தத் திட்டத்தின் தத்துவத்தையும் அதன் பின்னால் மறைந்திருக்கும் உண்மையையும் புரிந்து கொண்டால் நீங்கள் கண்டிப்பாக என்னைப் பாராட்டுவீர்கள். 11ஆவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சில மாநிலங்களை மட்டும் வேற்றுமைப்படுத்துவது மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளை உருவாக்கிவிடும் என்பதை உங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலை 12ஆவது நிதிக்குழுவால் சரிசெய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படாத பட்சத்தில் நம்முடைய அரசியலில் அது மிகவும் பயங்கரமான எதிர்விளைவுகளை உருவாக்கி விடும். இது தொடர்பாக டாக்டர் சி.ரங்கராஜன் எழுதிய இந்தியப் பொருளாதாரம் என்ற புத்தகத்தில் இருந்து ஒன்றை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். "மண்டலங்களுக்கு இடையேயான வேற்றுமைகள் வளரும் பட்சத்தில் அது தரமான நிருவாகத்தை வழங்குவது ஒரு சில இடங்களில் பாதிப்புகளை உருவாக்கிவிடும்" என்று குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். மிகவும் பின்தங்கிய மாநிலங்களில் தரமான நிருவாகம் ஏற்படாத பட்சத்தில் அம்மாநிலங்களுக்கு வழங்கப்படும் அதிகமான நிதி ஒதுக்கீடால் எந்தவித பலனும் ஏற்படாது என்பதுதான் நிதர்சனமான உண்மை நிலையாகும்.

தனிநபர் மாநில உள்நாட்டு உற்பத்தி அளவு என்ற காரணியை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் திட்ட ஒதுக்கீடுகளின் நம்பிக்கை குறித்தும் இங்கு நான் உங்களது கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன். இந்த முறை கடந்த காலங்களில் செயல்படுத்தியதன் விளைவாக தாங்க முடியாத அளவுக்குக் கடுமையான விளைவுகளை உருவாக்கியுள்ளது. இருந்தாலும் இதனைப் பயன்படுத்துவது கடந்த காலங்களில் ஒரு வழக்கமாக இருந்து வந்துள்ளது. தனி நபர் மாநில உள்நாட்டு உற்பத்தி அளவு சராசரியைவிட சற்று உயர்வதற்கு ஒரு மாநிலத்தின் உற்பத்தித் துறை மற்றும் சேவைகள் துறை ஓரளவுக்கு சிறப்பாக செயல்பட்டால் போதுமானது. இது மக்களிடையே மிக அதிகப்படியான அளவில் வருவாய் வேற்றுமையை உருவாக்கிவிடும். உதாரணமாக நாட்டிலேயே மிக அதிகமான அளவில் வருமானம் ஏற்ற இறக்கங்களுடன் சமனற்ற முறையில் தமிழ்நாட்டில் காணப்படுகிறது. இந்தியாவிலேயே மிக அதிகப்படியான வேலைவாய்ப்பு இல்லாதவர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. வளம் குன்றிய வறட்சிப் பகுதிகளில் தமிழ்நாட்டில் வாழும் மக்கள் தங்கள் அண்டை மாநிலங்களில் இதுபோன்ற சூழ்நிலையில் வாழும் மக்களைவிட மிகவும் மோசமான நிலையில் உள்ளனர். இத்தனைக்கும் அந்த மாநிலங்களில் போதுமான நீர்வள ஆதாரங்கள்கூட இல்லை.

தேசிய சராசரியைவிட மாநில நிகர உற்பத்தி சிறிதளவு குறைந்திருந்தாலும் அதற்கு மாற்றாக சிறந்த நீர்வள ஆதாரம் இருக்குமானால் இந்த நிலையை எளிதில் சீர்செய்ய முடியும். இப்படி ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டுக்கு இருக்குமானால் எளிதில் மாநிலத்தில் உள்ள வறுமையை சமாளிக்க இயலும். இந்த காரணிகளெல்லாம் மாநிலங்களின் நிகர உற்பத்தியில் விடுபட்டுள்ளன. சிறந்த நிருவாகம் என்பது என்ன? இதற்கு எந்தவித ஊக்குவிப்பும் இல்லையே ஏன்? மிக மோசமான இயற்கை ஆதாரங்களைக் கொண்டுள்ள மாநிலங்கள் தங்களின் கடுமையான உழைப்பின் காரணமாகவும், சிறந்த நிருவாகத் திறமையின் காரணமாகவும், மற்றும் நிதித்துறையில் விவேகத்துடன் செயல்படுவதாலும் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளன. ஆனால் இதுபோன்ற மாநிலங்களைத் தொடர்ந்து தண்டித்து வருவதே நிதிக்குழுவின் வழக்கமாக இருந்து வருகிறது. இந்த நிலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தனி நபர் மாநில நிகர உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்படும் முக்கியத்துவமானது மிகவும் மோசமான எதிர்விளைவுகளை உருவாக்கிவிடும் என்ற வகையில் இப்பிரச்சினை குறித்து உங்கள் அனைவரின் கவனத்தையும் இந்நேரத்தில் ஈர்க்க விழைகிறேன்.

இதே முறை தொடர்ந்து கடைபிடிக்கப்படும் பட்சத்தில் இதற்குக் குறைந்தபட்ச முக்கியத்துவம் வழங்குவதுடன் 1971ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலும், பரிந்துரை களின் அடிப்படையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த முடியும்.

தற்போது நான் மாநிலங்கள் சம்பந்தப்பட்ட மற்றொரு முக்கியமான பிரச்சினை குறித்து உங்கள்

அனைவருடைய கவனத்தையும் ஈர்க்க விழைகிறேன். அதாவது மாநில அரசுகளின் கடன் சுமையைக் குறைப்பது மற்றும் கடன் முறைகளை சீரமைப்பது. தொடர்பான ஒருங்கிணைந்த கடன் குறைப்புத் திட்டம் குறித்த செயல்திட்டத்தை எட்டுவதற்கு உரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். மாநில அரசுகள் மிகவும் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கிச் சுழன்று கொண்டிருக்கும் நிலையில் 11ஆவது நிதிக்குழு அறிவித்த கடன்சுமை குறைப்புத் திட்டமானது முற்றிலும் பயனற்றதாக மாநில அரசுகளுக்கு இருந்தது என்பது துரதிருஷ்டவசமானது. இந்த வகையில் 12ஆவது நிதிக்குழு இப்பிரச்சினையில் ஒருங்கிணைந்த வகையில் ஆராய்ந்து அதற்கு ஒரு சரியான நிரந்தரமான தீர்வை வரையறுப்பதுடன் மாநில அரசுகளுக்குத் தேவையான இழப்புத் தொகையை தெரிவித்துள்ளோம். இந்த ஆலோசனைகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு சரியான பலன்தரக்கூடிய தீர்வுகளை மாநில அரசுகளுக்கு உடனடியாக வழங்க வேண்டுமென்று உங்களை நான் இந்த நேரத்தில் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏனென்றால் நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அது நடப்பு 2004 – 2005ஆம் ஆண்டிலேயே செயல்படுத்தப்பட இருப்பதால் இப்பரிந்துரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கடன்சுமையை சீரமைப்பது குறித்த பிரச்சினையை மாநில அரசுகள் மனிதவளர்ச்சி மற்றும் முதலீட்டுச் சூழ்நிலை ஆகியவற்றில்




வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக உயர்ந்துள்ள கடுமையான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் ஆகியவற்றின் விளைவாக கடனுக்கும் வருவாய் இனங்களுக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி உருவாகியுள்ளது. இது கடுமையான மிக உயர்ந்த நிதி நெருக்கடி ஏற்படுவதற்கான அறிகுறியாகும். பிரிவு வாரியாக நிதிச்சுமை பளுவைக் குறைப்பதுடன் வருவாய் பற்றாக்குறையையும் நிதிப் பற்றாக் குறையையும் சரிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. எங்களுடைய அறிக்கையில் கடன்சுமையை குறைப்பது குறித்தும், கடன்சுமையை சீரமைப்பது குறித்தும் பல்வேறு வகையான ஆலோசனைகளைத் ஆற்றியுள்ள செயல்பாடுகளின் விளைவுகளின் அடிப்படையில் அவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து நிதியுதவிகள் அமைய வேண்டும். இந்த இரண்டு துறைகளிலும் தமிழ்நாடு மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கான ஊக்குவிப்பு எங்களுக்கு கண்டிப்பாகக் கிடைத்தாக வேண்டும்.

12ஆவது நிதிக்குழுவின் தலைவரின் சிறப்பு கவனத்திற்கு ஒன்றை கொண்டுவர விழைகிறேன். அவர் ஏற்கெனவே இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநராக இருந்து பல்வேறு வகையான அனுபவங்களைப் பெற்றுள்ளவர் என்பதால் மாநில அரசுகளின் அதிகபட்ச வரிச்சுமையைக் குறைப்பது குறித்த முக்கிய பிரச்சினையில் ஒரு நல்ல தீர்வு காண

வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது ஒன்றும் முடியாத காரியமல்ல. மாறாக, ஒரு முறையான கருணை அடிப்படையிலான செயல்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மாநில அரசுகளின் வரிச்சுமையைக் குறைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். இப்பிரச்சினையில் இதுவரை எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

கடன்சுமையை அதிகரிக்கும் திட்டங்களில் ஒரு சில சிறுசேமிப்பு கடன் உதவிகளும் அடங்கும். இவற்றிலெல்லாம் மக்கள் நேரடியாக பாதிக்கப் படுகின்றனர். மற்ற கடன்களைப் பொறுத்தமட்டில் வெளி மார்க்கெட்டில் இருந்து வாங்கும் கடன்கள், திட்டக் கடன்கள், பல்வேறு நிதி நிறுவனங்களில் இருந்து குறிப்பாக ஆயுள் காப்பீட்டுக் கழகம், பொது ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவற்றில் இருந்து வாங்கும் கடன்கள் ஆகியவற்றுக்கான வட்டி விகிதம் அதிக அளவில் உள்ளது. அது தற்போதைய சந்தையில் உள்ள வட்டி விகிதங்களைவிட மிக அதிக அளவில் உள்ளது. வர்த்தக வங்கிகள் மற்றும் இந்திய அரசு ஆகியவை மாநில அரசுகள் கடன் சுமையிலிருந்து மீள குறைந்தபட்ச அளவில் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் சில மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. மாநில அரசுகள் இதுபோன்ற நிறுவனங்களில் இருந்து மானியம் எதிர்பார்க்க முடியாது. அதே நேரத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத வட்டி சுமைகளையும் சமாளிக்க இயலாது. மேலும் திறமையற்ற நிதி மேலாண்மையாலும் பிரச்சினைகள் உருவாவதை கருத்தில் கொண்டு உடனடியாக இப்பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய தொகுப்பிலிருந்து பஞ்சாயத்துகளுக்கு மற்றும் நகராட்சிகளுக்கு வழங்கப்படும் நிதி ஆதாரங்களை மாநில அரசின் நிதிக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் வழங்குவதற்கு தேவையான நெறிமுறைகளை வகுக்கத் தேவையான நடவடிக்கைகளை 12ஆவது நிதிக்குழு மேற்கொள்ள வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளின் அடிப்படையில் மாநில நிதிக்குழு பரிந்துரைகளைச் செய்யும். பல்வேறு மாநிலங்களில் பல்வேறு வகையான முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இதுதான் தற்சமயம் உங்கள் முன் உள்ள பிரச்சினையாகும். ஆனால் எல்லா மாநிலங்களிலும் உள்ள பஞ்சாயத்துகளுக்கும் நகராட்சிகளுக்கும் சமமான அளவில் நிதியைப் பகிர்ந்தளிக்கத் தேவையான உறுதியான ஒரு செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த முயற்சி அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் அத்தியாவசியப் பணிகள் தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற உதவுவதுடன் ஒருங்கிணைந்த வளர்ச்சியும் தரமான வாழ்க்கை சூழலும் உருவாக்குவதற்கு இது உறுதியளிக்கும் வகையில் இருக்க வேண்டும்.

இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் விளைவுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்தான எங்களுடைய ஆலோசனைகளையும் செயல் திட்டங்களையும் எங்களுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளோம். மேலும் இயற்கை சீற்ற நிதி மற்றும் தேசிய இயற்கை சீற்ற துயர்துடைப்பு நிதி ஆகியவற்றை பயன்படுத்துவதில் கடந்த கால வரலாற்றின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் நிதி உதவி செய்ய வேண்டும். மாநில அரசுகள் தங்களுக்கென்றே தனியாக நிதி ஆதாரங்களை இதுபோன்று உருவாக்கிக் கொள்வதற்குத் தேவையான நிதியுதவியினையும் மத்திய அரசு செய்துதர வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் கடந்த 5 ஆண்டுகளாக தமிழகத்தில் நிலவிவரும் கடுமையான வறட்சி சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதற்குச் செலவிடப்பட்ட தொகையினை கணக்கில்கொண்டு தமிழ்நாட்டிற்கு தேவையான நிதியுதவிகளை தேசிய துயர்துடைப்பு நிதியிலிருந்து ஒதுக்க வேண்டும். இப்படி நிதிஒதுக்கி மாநில அரசுக்கு நிவாரணமும் உதவியும் செய்வதன் மூலம் தொடர்ச்சியாக ஏற்படும் வறட்சியை சமாளிக்க முடியும்.

இறுதியாக, தமிழ்நாட்டை நிருவாகத்தில் மேம்படுத்துவதற்குத் தேவையான தேவைகள் குறித்தும் சில முக்கிய பிரச்சினைகள் குறித்தும் உங்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்க்க விரும்புகிறேன். தமிழ்நாட்டின் நிருவாகத்தை முற்றிலுமாக நவீனப்படுத்தவும் தேவையான அளவு ஊழியர்களைப் பயன்படுத்தவும் சிறந்த நடைமுறைகளைப் புகுத்துவதும் அதேபோன்று நிருவாகத்தில் மின்ஆளுமையை பயன்படுத்துவதும் அவசியமாகிறது. இப்பிரச்சினையில் உடனடியாக கவனம் செலுத்தி சிறந்த நிருவாகத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் மாநில அரசுகள் விரைவான வளர்ச்சியை எட்டுவதற்கு இயலும். இல்லையெனில் அதற்கு நாம் அதிக விலை கொடுக்க வேண்டும்.

தமிழ்நாடு எதிர்நோக்கியுள்ள சில முக்கிய பிரச்சினைகள் குறித்து உங்கள் அனைவரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் கிடைக்கும் வருடாந்திர மழை அளவு 723 கன மீட்டராகும். இது தேசிய சராசரியான 1820 கன மீட்டரை விட குறைவானது. தேசிய



சராசரிக்குச் சமமான அளவில் தமிழ்நாட்டில் நீர்வள ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த ஒரு செயல்திட்டத்தை அதாவது மழைநீர் சேகரிப்பு திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான நிதியுதவியை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் மற்றொரு முக்கிய பிரச்சினை சென்னை மாநகரில் தற்போது நிலவிவரும் குடிநீர் தட்டுப்பாடு ஆகும். கடந்த 55 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு மிகவும் கடுமையான குடிநீர் பற்றாக்குறை நிலவி வருகிறது. 12ஆவது நிதிக்குழு சென்னை நகரின் குடிநீர்த் தேவையை ஈடு செய்யும் அளவிற்குக் கடல்நீரை குடிநீராக்கும் நவீன திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான முழுத் தொகையையும் மானியமாக தர நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னை மாநகரப் பகுதிகளில் நிலவிவரும் கடுமையான குடிநீர் பற்றாக்குறை குறித்து 12ஆவது நிதிக்குழு ஆய்வு மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.


மற்றொரு முக்கியமான பிரச்சினை சென்னை மாநகரப் பகுதிகளில் மற்றும் மற்ற நகரங்களில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டுவது, கடலரிப்புகளைத் தடுப்பதற்கும் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் சிறப்பாகக் கவனத்தில் எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டிற்கு ஒரு நல்ல முடிவு கிடைக்கும் வகையில் பல்வேறு திட்டங்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய முக்கிய பிரச்சினைகள் மற்றும் திட்டங்கள் குறித்து உங்களிடம் தெரிவித்துள்ளேன். நான் என்ன விரும்புகிறேன் என்றால், கடந்த காலங்களில் கடைப் பிடிக்கப்பட்டு வந்த நடைமுறைகள் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். அதன்மூலம்தான் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு உண்மையான நிவாரணம் கிடைக்கும். தங்களுடைய ஆதாரங்கள் மற்றும் அறிவுத்திறன், உடல் உழைப்பு ஆகியவற்றைக் கொண்டு முன்னேறும் மாநிலங்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

நம் முன்னால் மிகப் பெரிய சவால்கள் எதிர்நோக்கியுள்ள சூழ்நிலையில், பழைய திட்டங்களுக்கு ஒட்டுப் போடுவதனால் எந்தவித பலனும் கிடைக்காது. உங்களுடைய சென்னைப் பயணம் வசதியாகவும், பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

உங்களுடைய பரிந்துரைகள்மீது மிகுந்த எதிர் பார்ப்புகளையும் நம்பிக்கையையும் கொண்டுள்ளேன். ஒருவேளை அவை எதிர்மாறாக இருக்குமேயானால் அது தமிழ்நாட்டிற்குக் கடந்த கால நிதிக் குழுக்கள் உருவாக்கிய மிகவும் மோசமான விளைவுகள் போல் அமைந்துவிடும்.

**2.2.2004** அன்று நடைபெற்ற **12**ஆவது நிதிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை



# தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்தில் ஒரு மாபெரும் மாற்றத்தை உருவாக்கும் வகையில், முன்னோடித் திட்டமான IT Expressway அதாவது, தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலையினை அமைத்திட 127.41 கோடி ரூபாய் மதிப்பிற்கு நிருவாக ஒப்புதல் அளித்து பணிகளை உடனடியாகத் தொடங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலைப் போக்குவரத்து மிகவும் இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழகத்தில் சாலை மேம்பாட்டுக்கு பல்வேறு அரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். இந்த வகையில், ஒரு முன்னோடித் திட்டமாக சென்னை அடையாறு மத்திய கைலாஷில் தொடங்கி, டைடல் பார்க் (TIDEL PARK) – சிறுசேரி வழியாக மகாபலிபுரம் வரை IT Expressway – தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலை அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிருவாக ஒப்புதல் வழங்கி உள்ளார்கள். இதில் மத்திய கைலாஷில் தொடங்கி சிறுசேரி வரையிலான 22 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகளை முதற்கட்டமாகவும், சிறுசேரி முதல் மகாபலிபுரம் வரையுள்ள 25 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகளை இரண்டாம் கட்டமாகவும் 2004ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றிட உத்தரவிட்டு உள்ளார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம், 2 மீட்டர் அகலமுள்ள மையத்தடுப்புடன் (Median) 6 வழி வாகனப் போக்குவரத்துக்கான சாலை (6 Lane carriage way) உலகத்தரத்தில் அமைக்கப்படும். சாலையின் முழு நீளத்திற்கும் நடைபாதை அமைக்கப்படும். இந்த நடைபாதைக்குக் கீழ், மூடப்பட்ட மழைநீர்க் கால்வாய் அமைக்கப்படுவதுடன், மின்சாரம், தொலைபேசி, கண்ணாடி இழைக்கம்பி வடங்கள் (Optic fibre cables) போன்ற மக்கள் பயன்பாட்டுக்கான அனைத்து கேபிள்களையும் கொண்டு செல்ல, தனியாக சேவைக் குழாய்கள் (Service duct) அமைக்கப்படும். இதன் மூலம், எதிர்காலத்தில் சாலையில் அடிக்கடி தோண்டுவது, குறுக்கே வெட்டுவது போன்ற செயல்கள் முற்றிலுமாகத் தவிர்க்கப்படும். இந்த துரித வழிச்சாலையின் ஒருங்கிணைந்த திட்டமாக, மழைநீர் சேகரிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். மாநகர துரித ரயில் போக்குவரத்துப் (MRTS) பயணிகளின் பயன்பாட்டுக்காக 5.5 மீட்டர் அகலத்திற்கு சேவைச் சாலையும் அமைக்கப்படும். சாலை விளக்கு, சாலைக் குறியீட்டுப் பலகைகள், சாலைக் குறியீடுகள் மற்றும் சாலைப் போக்குவரத்து தொடர்பான அனைத்து அம்சங்களும் கொண்டு, உலகத் தரத்துடன் இந்தச் சாலைகள் உருவாக்கப்படும்.

சாலைப் போக்குவரத்துத் தொடர்பான அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் உலகத் தரத்துடன், அமையவுள்ள இந்தத் தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலையின் பயனாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தகவல் தொழில்நுட்பக் குழுமங்கள் இன்னும் அதிக அளவில் வெகுவாக ஈர்க்கப்பட்டு இப்பகுதி இந்தியாவின் "Bay Area" ஆக உருவாகும். தமிழ்நாட்டை இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப தலைநகரமாக மாற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் கடுமையாக உழைத்து சாதனைகள் படைத்துவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விருப்பத்தை ஈடேற்றும் திட்டமாக இத்திட்டம் அமையும். உலகத்தரத்துடன் உருவாக்கப்படும் தகவல் தொழில்நுட்ப துரித வழிச்சாலைப் பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

* * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, **4.2.2004** அன்று தலைமைச் செயலகத்தில், பிரபல டென்னிஸ் விளையாட்டு வீரரும், சர்வதேச ATP - Association of Tennis Professionals டென்னிஸ் விளையாட்டு வீரர் குழுவின் முன்னாள் தலைவருமான திரு.விஜய் அமிர்தராஜ் அவர்கள் நேரில் சந்தித்து, ATP சர்வதேச டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் சென்னை நகரில் தொடர்ந்து நடைபெற வழியமைத்துக் கொடுத்தமைக்காகவும், இனி “சென்னை ஓப்பன்” என்று அழைக்கப்பட உள்ள இந்த சர்வதேச டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளை நடத்த ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு கோடி ரூபாய் வழங்க உத்தரவிட்டதற்காக, தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இதனை அடுத்து, பிரபல டென்னிஸ் விளையாட்டு வீரரும், சர்வதேச ATP டென்னிஸ் விளையாட்டு வீரர் குழு முன்னாள் தலைவருமான திரு.விஜய்அமிர்தராஜ் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து தனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். அப்போது, தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வியையும், விளையாட்டுகளையும் வளர்ப்பதற்கென்று, இந்தியாவிலேயே முதன்முதலில் தமிழக அரசால் ஏற்படுத்தப்படும் தனித்தொரு புதிய பல்கலைக்கழகத்தில் திரு.விஜய்அமிர்தராஜ் அவர்கள் தனது முதிர்ந்த அனுபவம் பயன்படும் வகையில் ஈடுபடுத்திக் கொள்ளுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மேலும், திரு.விஜய் அமிர்தராஜ் அவர்கள்

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் விளையாட்டு வீரர் சந்திப்பு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது முந்தைய ஆட்சிக் காலத்தின்போது உலகத்தரத்துடன் உருவாக்கப்பட்ட நுங்கம்பாக்கம் டென்னிஸ் அரங்கில் கடந்த எட்டு ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வந்த சர்வதேச ATP டென்னிஸ் போட்டிகள், தக்க ஆதரவாளர்கள் (Sponsors) கிடைக்காத காரணத்தால் தமிழகத்தை விட்டு வேறு இடத்திற்கு செல்லக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும், இந்தப் போட்டிகள் தொடர்ந்து சென்னையில் நடைபெறும் வகையில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாடு டென்னிஸ் சங்க நிருவாகிகளும், பிரபல டென்னிஸ் வீரர் திரு.விஜய் அமிர்தராஜ் அவர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். இதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் போட்டிகள் தடையின்றி தொடர்ந்து சென்னை மாநகரிலேயே நடத்தும் வகையில் அடுத்த ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு இப்போட்டிகளை நடத்தும் வண்ணம் ஆதரவாளர் கூட்டமைப்பு (Consortium of sponsors) ஒன்றை அமைத்திட உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் இப்போட்டிகளை நடத்த தமிழ்நாடு அரசு ஒரு இணை ஆதரவாளராக (Cosponsor) இருக்கும் என்று தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், போட்டிகளைச் சிறப்புடன் நடத்திட ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் நிதி உதவி வழங்கிடவும் உத்தரவிட்டார்.

இப்பல்கலைக்கழகத்திற்கு வருகைப் பேராசிரியராக (Visiting Professor) இருக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.


இதற்கு மகிழ்வுடன் தனது இசைவைத் தெரிவித்துக் கொண்ட திரு.விஜய்அமிர்தராஜ் அவர்கள், இப்பல்கலைக்கழகம் தரமிக்க விளையாட்டு வீரர்களை உருவாக்க தனது முழு ஒத்துழைப்பையும் அளிப்பதாக உறுதி அளித்தார். மேலும், டென்னிஸ் விளையாட்டில் சர்வதேச அளவுக்கு தமிழக வீரர்கள் சிறந்த இடத்தை எய்துவதற்காக தமிழக இளைஞர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சி அளிக்க தாம் உத்தேசித்துள்ளதாகவும், அதற்காகவும் திரு.விஜய்அமிர்தராஜ் அவர்கள் தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டு, தமிழக இளைஞர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க முன்வருமாறும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். பன்னாட்டு அளவில் தமிழகத்தில் உள்ள இளைஞர்களுக்கு டென்னிஸ் விளையாட்டுக்கான சிறந்த பயிற்சியினைத் தான் மிகுந்த மகிழ்வுடன் வழங்குவதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், திரு.விஜய் அமிர்தராஜ் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

* * *



# மீனவர்களுக்கு இலவச வீடுகள்

## – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தில் உள்ள மீனவர்கள் மீது தனி அக்கறை கொண்டு, அவர்களுக்கு இருப்பிட வசதி செய்து தர வேண்டும் என்ற நோக்கத்துடன், இந்த ஆண்டு அதாவது 2003–2004ஆம் ஆண்டில் 15 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் 4,000 வீடுகளை இலவசமாகக் கட்டித்தர ஆணையிட்டுள்ளார்கள். தமிழகத்தில் உள்ள மீனவர்கள் மீது தனி அக்கறை காட்டி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அந்த மீனவர்கள் தங்கள் குடும்பங்களோடு மனநிறைவுடன் வசித்திட இருப்பிட வசதி செய்து தரும் நோக்கத்துடன், இந்த ஆண்டு (2003–2004) மொத்தம் 4,000 வீடுகள் இலவசமாக கட்டித்தர ஆணையிட்டுள் ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மொத்தம் 15 கோடியே 40 இலட்சம் மதிப்பில் இந்த 4,000 வீடுகளையும் கட்ட ஒப்புதல் அளித்து பணிகளை உடனடியாகத் தொடங்க ஆணையிட்டுள்ளார்கள்.

மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கட்டப்படும் இந்த 4,000 வீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது நேரடிக் கண்காணிப்பின் கீழ், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கட்ட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த வீடுகளைத் தரமாகவும், விரைவாகவும் கட்டி முடிக்க ஆணையிட்டுள்ளார்கள்.

❖ ❖ ❖




*உடல் ஊனமுற்றோர் நலனுக்காக 2003ஆம் ஆண்டில் சிறப்பாக பணிபுரிந்த நீலகிரி மாவட்ட உள்ளூர் அளவிலான குழுவுக்கு தேசிய விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கே. செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்கள் 3.12.2003 அன்று புதுடில்லியில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களிட–மிருந்து பெற்றுக் கொண்டார். மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அமலாக்கத் துறையின் டாக்டர் சத்யநாராயண் ஜாட்டியா உடன் உள்ளார்.*

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 6,000 ஆதிதிராவிடர்கள் மற்றும் 1,000 பழங்குடியினர் ஆகமொத்தம் 7,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சொந்தமாக நிலம் பெறும் வகையில், 70 கோடி ரூபாய் மதிப்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்தை செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.**

தமிழ்நாட்டில் கிராமங்களில் உள்ள நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் சொந்த நிலத்தில் விவசாயம் மேற்கொள்ளும் போது, அவர்களின் பொருளாதாரம் மேம்பட்டு, சமூக அந்தஸ்து உயர்வதுடன், நிரந்தர வருவாய் பெறவும் வழி ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 'ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்தை' செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.**



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிருக்கு உரிமை அளித்து, அவர்களை நிலச் சொந்தக்காரர்களாக உருவாக்குதல், பொருளாதார ரீதியில் அவர்களை உயர்த்துதல், தரிசு நிலங்களை விவசாய விளை நிலங்களாக மாற்றுதல், விவசாய உற்பத்தியினைப் பெருக்குதல் ஆகியவை இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

இத்திட்டத்தின் கீழ், நிலம் வாங்குவதற்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாயும், நில அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மின்சார மோட்டார் வாங்குதல், பால்பண்ணை, கோழிப்பண்ணை, ஆடு மாடுகள் வளர்த்தல் போன்ற வேளாண் உபதொழில்கள் தொடங்குதல் ஆகியவற்றிற்காக ஒரு இலட்சம் ரூபாயும், ஆகமொத்தம் ஒவ்வொரு பயனாளிக்கும் அதிகபட்சமாக 2 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இதில் 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் வங்கிக் கடனாகவும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு மின்வாரியம் மூலம் முன்னுரிமை அடிப்படையில் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும். இந்த மின் இணைப்புகள் வழங்கப்படுவதற்கு எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது. மேலும், இந்தத் திட்ட பயனாளிகளுக்கு முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவு கட்டணத்தில் 75 சதவிகிதம் விலக்கு அளிக்கப்படும். அவர்கள் செலுத்த வேண்டிய 25 சதவிகித கட்டணமும் திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டு, இந்தத் தொகையும் கடனாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு பயனாளிகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிராகவும், 18 வயதிலிருந்து 55 வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்கவேண்டும். நிலம் மகளிர் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்படும். மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பயனாளிகள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவராக இருக்க வேண்டும். நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயனடையலாம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வேளாண் நிலம் வாங்கும் திட்டத்தை தாட்கோ நிறுவனம் செயல்படுத்தும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகளுக்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தின் மூலம் விண்ணப்பங்கள் இலவசமாக வழங்கப்படும். தகுதி வாய்ந்த பயனாளிகளை ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் அமைக்கப்படும் குழு தேர்வு செய்யும்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிர் பொருளாதார மேம்பாடும், சமூக அந்தஸ்தும் பெற்று வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செயல்படுத்துகின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திட்டத்தினை வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

# புரட்சித்தலைவியை
## வாழ்த்துங்கள்! உங்களுடன் வரலாறு வாழ்த்தட்டும்!



தென்றல் பிறந்த திருநாள் இதுதானா
இன்று புதுமலர்ச்சி எங்கேயும் காண்கிறதே!

புரட்சித்தலைவி எனும் பூங்காற்று பிறந்ததனால்
புலர்ந்தது புதுவானம்! பூத்ததொரு புதுவாழ்வு!

காலை இளந்தென்றல் கண்திறந்த கந்தர்வ
வேளைஇது என்பதனால் வெளிஎல்லாம் வாழ்த்தட்டும்!

சோலைக் குயில்வாழ்த்த, சுரும்புகளும் தாம்வாழ்த்த
வானம் பாடிகளே வாயார வாழ்த்துங்கள்!

இலைவாழ்த்த, கிளைவாழ்த்த, இந்தியத் தாமரையும்
தலைதாழ்த்தி வாழ்த்துகின்ற தமிழ்மகளை வாழ்த்துங்கள்!

கால்முளைத்த கம்பீரம் கண்எதிரே வருகிறது
பால்மனத்துத் தாய்மாரே பாசமுடன் வாழ்த்துங்கள்!

சிங்கம்நிகர் பெருந்தலைவி சீர்வாழ்த்திப் பேர்வாழ்த்தித்
தங்கநிகர் இளைஞர்களே தமிழாலே வாழ்த்துங்கள்!

சாதிக்குத் தலைவணங்கும் தற்காலத் தமிழகத்தில்
நீதிக்குத் தலைவணங்கும் நிறைகுடத்தை வாழ்த்துங்கள்!

ஆமைக்குப் புயல்வேகம், அடிமைக்கு உரிமைவெறி,
ஊமைக்குப் போர்முழக்கம் தருபவரை வாழ்த்துங்கள்!

அடிமையல்ல பெண்மகளே, ஆணுக்கு நிகரான
'குடிமகள்'நீ என்றுரைத்த கோமகளை வாழ்த்துங்கள்!

காத்திருப்பாய் காவிரியே கங்கைவரப் போகிறது
சேர்த்துவைப்பேன் என்றுரைக்கும் திருமகளை வாழ்த்துங்கள்!

பன்மொழிகள் மத்தியிலே பைந்தமிழை எம்உயிரைச்
செம்மொழியாய் ஆக்கவந்த சீர்மகளை வாழ்த்துங்கள்!

உள்ளூர்த் தலைவியா, ஒருதேசத் தலைவியா,
உலகத் தலைவி என்று உளமார வாழ்த்துங்கள்!

வாழ்த்துங்கள் உங்களுடன் வரலாறு வாழ்த்தட்டும்
வாழ்த்தொலிகள் வானத்தின் எல்லைவரை கேட்கட்டும்!



**கவியரசர் இளந்தேவன்**



# மீனவர்களுக்கு உயிர்காப்புக் கவசங்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கட்டுமரம் மற்றும் வல்லம் ஆகியவை மூலம் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வாழும் பாரம்பரிய மீனவர்களின் (Traditional Fishermen) பாதுகாப்பையும், அவர்களது எதிர்காலக் குடும்ப நலனையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள அத்தகைய மீனவர்களுக்கு உயிர் காப்புக் கவசங்கள் (Life Jackets) வழங்கிட ஆணையிட்டு உள்ளார்கள். இந்தப் புதிய திட்டத்தின்படி, முதற்கட்டமாக, ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான 10 ஆயிரம் உயிர் காப்புக் கவசங்களை 10 ஆயிரம் பாரம்பரிய மீனவர்களுக்கு உடனடியாக வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மீனவ சமுதாயத்தினர் மீது தனி அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவர்களது வாழ்க்கை வளமடைய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். இந்த வகையில் கட்டுமரங்கள் மற்றும் வல்லம் முதலான பாரம்பரிய மீன்பிடி சாதனங்களைப் பயன்படுத்தி மீன் பிடித்து வாழ்க்கை நடத்துகின்ற மீனவர்கள், எவ்விதப் பாதுகாப்பும் இன்றி, கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்று வருவதையும், அதனால் அவர்கள் வீடு திரும்பும்வரை அவர்களது குடும்பத்தினர் மிகுந்த அச்சத்துடன் வாழ்ந்து வருவதையும் கருத்தில் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அத்தகைய மீனவர்களுக்கு பாதுகாப்பு அளித்து அவர்களது குடும்பத்தினருக்குத் தன்னம்பிக்கையையும், துணிவையும் வழங்கும் வகையில், மீனவர்களுக்கு உயிர் காப்புக் கவசங்கள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, முதற்கட்டமாக 10 ஆயிரம் மீனவர்களுக்கு ஒவ்வொன்றும் 1,000 ரூபாய் மதிப்பிலான உயிர் காப்புக் கவசங்கள் வழங்கப்படும். இந்தக் கவசங்கள் வழங்கப் பெறும் பயனாளிகள் ஒவ்வொருவரும் தங்களது பங்காக 100 ரூபாய் மட்டுமே செலுத்தினால் போதுமானது. மீதித் தொகையான 900 ரூபாயை அரசே ஏற்றுக் கொள்ளும். இதன் அடிப்படையில் 10,000 கவசங்கள் உடனடியாக வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

பாரம்பரிய மீனவர்களுக்கு உயிர் காப்புக் கவசங்கள் வழங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்தப் புதிய திட்டம், கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாகவும், பாதுகாப்பு அளிப்பதாகவும் அமையும்.





தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518

